janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 84 | 2021 டிசம்பர் 19 - 25 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 37





**இல்லந்தோறும் ஜனசக்தி**

டிசம்பர் 26, நம் வாழ்க்கையில் மறக்கவொன்னாத மகத்தான நாளாகும். ஆம்! அன்றுதான் நாட்டின் விடிவெள்ளியாக, >>> ப 15



**படிக்கட்டு பயணமும் பொறுப்பற்ற சுற்றறிக்கையும்!**

மாணவர்கள் படிக்கட்டில் தொங்கியபடி சென்றால், அந்தப் பேருந்தை இயக்கும், பேருந்தின் ஓட்டுனர் மீதும் நடத்துனர் >>> ப 03



**வெற்றி முழக்கம் எழுப்புவோம்...**

கடந்த ஓராண்டுக்கும் மேலாக 2020 நவம்பர் 26 முதல் 2021 நவம்பர் 11 வரை தலைநகர் டெல்லியை சுற்றிலும் நீடித்து வந்த விவசாயிகளின் >>> ப 08




## நீட் விலக்கு மசோதாவை குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அனுப்பக் கோரி

# மாணவர் பெருமன்றத்தினர் 6 மையங்களில் உண்ணாவிரதப் போராட்டம்




**ஏழை, எளிய மாணவர்களின் மருத்துவ கனவைப் பறிக்கின்ற நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு கோரி தமிழ்நாடு சட்டமன்றம் சட்ட முன்வரைவைக் கொண்டு வந்துள்ளது.**

இதை குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு அனுப்ப வேண்டிய தமிழ்நாடு ஆளுநர், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் நெறிமுறைகளையும் மீறி வேண்டுமென்றே கிடப்பில் போட்டுள்ளார். சட்ட முன்வரைவை ஆளுநர் உடனே அனுப்பக் கோரி அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் சார்பில் 6 மையங்களில் போராட்டம் நடைபெற்றது.

**சென்னை:** வடக்கு மண்டலம் சார்பில் வள்ளுவர் கோட்டத்தில் மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் தினேஷ் சீரங்கராஜ் தலைமையில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. மாநில துணைச் செயலாளர் இரா.ராமசாமி, மாநில துணைத் தலைவர் ஆ.பிரகாஷ், முபீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

போராட்டத்தை காங்கிரஸ் சட்டமன்றக் குழு தலைவர் கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் சி.மகேந்திரன், மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மாநில துணைத் தலைவர் கே.நவாஸ்கனி எம்.பி., விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் எஸ்.எஸ்.பாலாஜி எம்.எல்.ஏ, தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் தி.வேல்முருகன் எம்.எல்.ஏ., திராவிடர் கழக பொருளாளர் வீ.குமரேசன், ம.தி.மு.க நிர்வாகி ஆவடி இரா.அந்திரிதாஸ், மருத்துவர் ஜி.ஆர்.ரவீந்தரநாத், கல்வியாளர் பு.பா.பிரின்ஸ் கஜேந்திரபாபு, மருத்துவர் ஏ.ஆர்.சாந்தி, பேராசிரியர்கள் சிவக்குமார், கதிரவன், சரசா, இளைஞர் பெருமன்ற மாநில தலைவர் த.கு.வெங்கடேஷ், திக மாணவரணி பிரின்ஸ் என்னாரசு பெரியார், விசிக மாணவரணி பாரதி பிரபு, பி.ஆர்.பி.சி. வழக்கறிஞர் க.சரத்குமார், சி.எப்.ஐ. மாநில தலைவர் அசரப், எஸ்.எப்.ஐ. மாநில து. தலைவர் அரவிந்த்சாமி, ஏ.ஐ.டி.எஸ்.ஓ செபஸ்டின், ஆர்.எஸ்.ஒய்.எப். அன்பு உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் மாலையில் போராட்டத்தை நிறைவு செய்து வைத்தார். வடசென்னை த.அன்பரசு நன்றி கூறினார். இதில் 200க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

**திருவாரூர்:** திருவாரூர், நாகை, மயிலாடுதுறை சார்பில் திருவாரூர் ரயில் நிலையம் அருகே நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்திற்கு மாநிலப் பொருளாளர் சு.பாலசுப்ரமணியன், திருவாரூர் மாவட்ட தலைவர் ஜெ.பி. வீரபாண்டியன் ஆகியோர் தலைமை தாங்கினர். மாநிலக் குழு உறுப்பினர்கள் எம்.நல்லசுகம், மு.க.பகத்சிங், மாவட்ட நிர்வாகிகள் க.கோபி, எஸ்.சிவனேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப் பினர் க.மாரிமுத்து உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கி வைத்து உரையாற்றினார்.

தமிழ்நாடுவிவசாயிகள்சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி, திமுக நகர செயலாளர் வாரை எஸ்.பிரகாஷ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய செயலாளர் கே.புலிகேசி, நகர செயலாளர் எம்.ஏ.மாரியப்பன், இளைஞர் பெருமன்றத்தின் தேசியக்குழு உறுப் பினர் பெ.முருகேசு, நாகை மாவட்ட செயலாளர் மாரி.கார்த்திகேசன், தமிழ்நாடு உழவர் இயக்கம் சார்பில் ஜி.வரதராஜன் ஆகியோர் கலந்து கொண்டு உண்ணாவிரதப் போராட்டத்தை வாழ்த்தி உரையாற்றினர்.

மாலையில் நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ் நிறைவுரையாற்றி முடித்து வைத்தார்.

**கிருஷ்ணகிரி:** கிருஷ்ணகிரியில் ஒசூர் ராம் நகரில் மாவட்டத் தலைவர் சிவசங்கர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாணவர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் நிரூப், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் ஆதில் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன், விவசாயிகள் சங்க மாநில து.தலைவர் எம்.இலகுமய்யா மற்றும் மாதர் சம்மேளன மாநில து.தலைவர் சுந்தரவள்ளி, மாணவர் பெருமன்ற மாவட்ட நிர்வாகிகள் காளிங்கன், அர்ஜூன் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

இளைஞர் பெருமன்ற மாநில செயலாளர் க.பாரதி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். மாணவர் பெருமன்ற மாவட்ட து.தலைவர் பிரஜ்வால் நன்றி கூறினார்.

**கோவை:** மேற்கு மண்டலம் சார்பில் சிவானந்தா காலனியில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்திற்கு மாணவர் பெருமன்ற மாநில தலைவர் மௌ.குணசேகர் தலைமை தாங்கினார். மாணவர் பெருமன்றத்தின் மாநிலக் குழு உறுப்பினர்கள் பா.தீபிகா, கு.பிரபு, மு.பிரசாந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில துணைத் தலைவர் பா.தினேஷ் வரவேற்றுப் பேசினார்.

போராட்டத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் துவக்கி வைத்தார். காங்கிரஸ் மாநில செயல் தலைவர் மயூரா. ஜெயக்குமார், மதிமுக மாநகர் மாவட்டச் செயலாளர் ஆர்.ஆர்.மோகன் குமார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்டச் செயலாளர் வி.எஸ்.சுந்தரம், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்டச் செயலாளர், வெ. ராமமூர்த்தி, தந்தைப் பெரியார் திராவிடர் களத்தின் பொதுச் செயலாளர் கு.ராமகிருஷ்ணன், மறுமலர்ச்சி மக்கள் இயக்கம் வே.ஈஸ்வரன், சிபிஐ(எம்.எல்.) விடுதலை மாவட்டச் செயலாளர் கே.பாலசுப்ரமணியன், கலை இலக்கியப் பெருமன்ற மாவட்டச் செயலாளர் ப.பா.ரமணி, இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் வே.வசந்தகுமார், மதிமுக மாணவரணி பாபு முருகன், ஆர்.எஸ்.ஒய்.எப். ஆர்.பாலமுரளி உள்ளிட்டோர் போராட்டத்தில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம் போராட்டத்தை நிறைவு செய்து




தொடர்ச்சி 5ம் பக்கம் >>

## எதிரும் புதிரும்







பா.ஜ.க.வின். பி டீம் என்று தொடர்ந்து நிரூபிக்கா விட்டால் மோடி கோபித்துக் கொள்வாரோ!




> ஒவ்வொரு போராட்டத்திலும் உயிரைக் கொடுத்து ஆட்சியாளர்களை அடிபணிய வைத்து வெற்றி மேல் வெற்றி பெற்று வாகை சூடி, வரலாறு படைத்திட்ட பெரும் படை அல்லவா நமது செம்படை?

# பாசறை நோக்கி படைகள் திரும்பட்டும்!-13

## பேரன்புமிக்க தோழர்களே!

**நாம் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து விரிவாக விவாதித்தது மட்டுமின்றி தீர்வைக் காண பல முடிவுகள் எடுத்து விட்டோம்.**

அந்த முடிவுகளை செயல்படுத்திட ஆற்றல் மிக்க செயல் வீரர்கள் அனைவரும் களம் காண பாசறையில் இருந்து உடனடியாக புறப்பட வேண்டும்; களம் காண வேண்டும்; வெற்றி பெற்றிட முன்நோக்கிச் சென்றிட வேண்டும்.

சீறிப்பாய்ந்திட வேண்டும்; ஒரு அங்குலம் கூட பின் வாங்காது பாசறையில் (மாநாடுகளில்) எடுக்கப்பட்ட முடிவுகள் ஒவ்வொன்றையும் மிகச் சீரிய முறையில் திட்டமிட்டு நிறைவேற்றிட முன்னைக் காட்டிலும் முனைப்பாக களம் காண வேண்டும்.

நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு பணிகளையும் நிறை வேற்றி முடித்திட நொடிப்பொழுதும் தாமதித்தல் கூடாது. இன்று, இந்த நிமிடமே செய்ய வேண்டிய பணிகளை, நாளை, நாளை மறுநாள் என்று ஒத்தி வைத்தல் கூடாது.

அவ்வாறு ஒத்தி வைத்தாலும் நாளை பார்த்துக் கொள் ளலாம் என்று தயங்கினாலும், அப்பணிகள் தடைபட்டு போய்விடும். அவ்வாறு தடைபடுதல் என்பது நாம் விவாதித்து எடுத்த முடிவு அர்த்தமற்றதாகிவிடக் கூடும். அத்தகைய தவறுகளை இனியும் நாம் மேற்கொள்ளக் கூடாது.

நாம் யார்? சமூகத்தின் மீது அக்கறை கொண்ட சமூக விஞ்ஞானிகள். சமூகத்தில் நடைபெற்று வரும் அநீதிகளை கண்டு கவலைப்படுபவர்கள். கவலைப்படுவதால் மட்டுமே பிரச்சினைகள் தீர்ந்து விடுமா?

சமூகத்தில் நிலவும் அநீதிகளை, அக்கிரமங்களைக் கண்டு நாம் அலட்சியமாக இருக்க முடியுமா?

நாம் அப்படி அலட்சியமாக இருந்தால் மற்றவர்களுக்கும் நமக்கும் என்ன வேறுபாடு, வித்தியாசம்?

நாம் உணர்வுபூர்வமானவர்கள்; எதனையும் உணர்வுபூர்வ மாக நிறைவேற்றக் கூடிய ஆற்றல் மிக்கவர்கள்.

நமக்குரிய முழு சக்தியையும் திரட்டி களம் கண்டால் நம்மை விஞ்சுவோர் எவரும் இல்லை.

யானை தன் பலமறியாது என்று கூறுவார்கள். அது போன்று நமது பலத்தை, ஆற்றலை நாம் அறியாமலோ அல்லது அறிந்தும் செயல்படுத்தாத காரணத்தால் மற்றவர்கள் நம்மை எள்ளி நகையாடுகின்றார்கள்.

எவருக்கும் நமது பெரும்படை சளைத்தது அல்ல என்பதனை ஒரு முறை அல்ல, ஓராயிரம் முறை நாம் நிரூபித்து நிலைநாட்டியுள்ளோம் என்பது நமது வீரம் செறிந்த போராட்ட வரலாறு ஆகும். அத்தகைய வரலாற்றுப் பின்னணியை கொண்ட மாபெரும் அமைப்பில், மகத்தான புரட்சிகர அமைப்பில் நாம் அங்கம் பெற்றுள்ளோம் என்பதனை ஒருபோதும் மறந்திடலாகாது.

நாட்டின் விடுதலைக்கான போரில் நம்மை விட அதிகம் தியாகம் செய்தவர்கள் யார்?

நாம் சிந்திய ரத்தமும், சிறைக் கொடுமையும், சித்திரவதை களும், உயிர் பலியும் நம்மைவிட அதிகம் அறிந்தோர் யார்?

தியாகத்தில், அர்ப்பணிப்பில், சேவையில், எளிமையில் நம்மை மிஞ்சியோர் யார் என்று கூற முடியுமா?

நாட்டு மக்களின் துயர் நீங்க நாம் போராடியது போன்று வேறு யார் போராடினார்கள்?

எத்தனை முறை நமது இயக்கம் தடை செய்யப்பட்டது, அத்தனை தடைகளையும் தகர்த்தெறிந்த பெருமை நமக் கில்லாமல் வேறு எவருக்கு உண்டு!

ஒவ்வொரு போராட்டத்திலும் உயிரைக் கொடுத்து ஆட்சி யாளர்களை அடிபணிய வைத்து வெற்றி மேல் வெற்றி பெற்று வாகை சூடி, வரலாறு படைத்திட்ட பெரும் படை அல்லவா நமது செம்படை?

ஒன்றிய அமைச்சர்கள், மாநில அமைச்சர்கள் என்று நாள்தோறும் ஊழல் பட்டியல் வெளிவந்து கொண்டுள்ளது!

நமது அமைப்பை சேர்ந்தவர்கள் யார் மீதும் எவரும் ஊழல் குற்றச்சாட்டு கூறி விரலை நீட்ட முடியுமா?

நமது நேர்மையை எதிரிகள் கூட ஒப்புக் கொள்ள வேண்டிய நிலையில் தான் உள்ளார்கள்.

ஒன்றிய அரசின் அமைச்சர்களாக, மாநில முதல்வர் களாக, அமைச்சர்களாக, ஒன்றியப் பெருந்தலை வர்களாக, மாவட்ட ஊராட்சித் தலைவர்களாக, ஊராட்சி மன்றத் தலைவர்களாக, உறுப்பினர்களாக, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களாக பொறுப்பேற்று பணியாற்றி இருக்கின்றோம். இன்றும் செயல்பட்டு வருகின்றோம்.

அவ்வாறு செயல்பட்டவர்கள் மீது யாருக்கேனும் களங்கம் கற்பிக்க முடியுமா?

ஏனெனில் மக்கள் நமக்களித்திட்ட பொறுப்புகளை, பொறுப்புகளாகத் தான் பார்ப்போமேயன்றி, பதவிகளாக பார்த்ததில்லை; பார்க்கப் போவதும் இல்லை. கட்சி தேர்ந்தெடுத்தவர்களும், மக்கள் தேர்ந்தெடுத்த வர்களும் நமது இயக்கத்தில் பதவிகளாக பார்த்தது இல்லை. மாறாக கட்சியும் மக்களும் நமக்களித்திட்ட பொறுப்புகள் என்றே நாம் பார்க்கின்றோம்; பார்க்கவேண்டும்.

கட்சி அளித்திட்ட பொறுப்பானாலும், மக்கள் அளித்திட்ட பொறுப்பானாலும் அவைகளை மதித்து உணர்வுபூர்வமாக நிறைவேற்றிடக்கூடிய பொறுப்பு வாய்ந்தவர்கள் நாம்.

அதனால்தான் எவரும் நம் மீது குற்றம் காண முடியாத வர்களாக, சமூகத்தில் தலைநிமிர்ந்து நிற்கக் கூடியவர்களாக, எவருக்கும் தலை வணங்காதவர்களாக நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அப்படிப்பட்ட பெருமைக்கும், போற்றுதலுக்கும் உரிய நாம் –

பாசறையில் இருந்து புறப்படுவோம்! களம் நம்மை வா, வா என்று அழைக்கின்றது!

வெற்றிமுரசு கொட்டி வா, வா என்று அழைக்கின்றது.

அழைப்பை ஏற்போம்; களம் காண்போம் – களம் காண பாசறையிலிருந்து அணிவகுப்போம்.

எதிரிப் படைகளை துவம்சம் செய்திட நேரம் வந்து விட்டது. இனியும் காத்திருக்க இயலாது; கூடாது. நொடிப்பொழுதும் தாமதிக்கக்கூடாது.

பாசறையிலிருந்து புறப்படுவோம்!

களம் பல காண்போம், வெற்றிகளை பெற்றிட முன் னேறட்டும், நமது படைகள், முன்நோக்கி செல்லட்டும் – மேலும் மேலும் செல்லட்டும்.

நிறைவு பெற்றது. வாழ்த்துக்கள்! வணக்கம்!

தோழமைமிக்க

**இரா.முத்தரசன்**





டி.எம்.மூர்த்தி

# படிக்கட்டு பயணமும் பொறுப்பற்ற சுற்றறிக்கையும்!





**மாணவர்கள் படிக்கட்டில் தொங்கியபடி சென்றால், அந்தப் பேருந்தை இயக்கும், பேருந்தின் ஓட்டுனர் மீதும் நடத்துனர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஒரு சுற்றறிக்கையை போக்குவரத்துத் துறை வெளி யிட்டிருக்கிறது.**

அண்மையில் சென்னையில் ஓடிக்கொண்டிருந்த புறநகர் ரயிலில், மாணவரும் மாணவியும் போட்டி போட்டுக்கொண்டு, நடைமேடையில் கால் வைத்து உரசிக்கொண்டே போன காணொளி வெளிவந்தது. காவல் துறை சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களை அழைத்து அறிவுறுத்தி அனுப்பி வைத்தது.

ரயில் டிரைவரையும் கார்டையும் கூப்பிட்டு தண்டனை தரவில்லை. இவ்வளவுக்கும் ரயிலை ஓட்டும்போது பக்கத்திலோ எதிரிலோ, குறுக்காகவோ எந்த வாகனமும் மனிதர்களும் மற்ற உயிரினங்களும் வராது என்று தெளிவாக தெரியும்.

ஆனால் பேருந்தை இயக்குவது அவ்வாறல்ல. எந்தப் பக்கம் இருந்து என்ன வரும் என்று தெரியாத நெரிசலில் பேருந்தை ஓட்டிச் செல்ல வேண்டும். நடைகளின் எண்ணிக்கை குறைந்து விடாமலிருக்க, தாமதமாகாமல் வரையறுக்கப்பட்ட நேரத்தில் சென்றடைய வேண்டும். டீசலும் அதிகமாக செலவாகி விடக்கூடாது. இதனிடையே படிக்கட்டில் இருப்பவர்களையும் உள்ளே வரச் சொல்ல வேண்டும்! அழைத்தும் வர மறுத்தால் ஓட்டுநரால் என்ன செய்ய முடியும்? அவருக்குத் தண்டனை தருவது எவ்வகையில் பொருந்தும்?

நடத்துனர்கள் பேருந்துக்குள் இட வசதியை ஏற்படுத்தி, படிக்கட்டில் இருப்பவர்களை உள்ளே அழைக்க வேண்டும் என்கிறது சுற்றறிக்கை. பேருந்து நிரம்பியிருக்கும் போது இட வசதியை ஏற்படுத்துவது எவ்வாறு? கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்டிருந்த பேருந்துகளை, மீண்டும் ஓட்டத் தொடங்கியபோது குறைந்த எண்ணிக்கையிலேயே இயக்கப்பட்டன இப்போது பள்ளிகள் திறந்த பிறகு, பயணி களின் எண்ணிக்கை செங்குத்தாக உயர்ந்துள்ளது. ஓடுகிற பேருந்துகளின் எண்ணிக்கை அதற்கேற்ப அதிகரிக்கப் படவில்லை. அடுத்த பேருந்து எப்போது வரும் என்ற நிச்சய மற்ற நிலையில் பயணிகளும், மாணவர்களும் முண்டி யடித்துக்கொண்டு பேருந்துக்குள் ஏறுவதை நடத்துனர்கள், ஓட்டுனர்களால் தடுக்க இயலாது.

போக்குவரத்துக் கழகங்கள் கடும் நிதிப் பற்றாக்குறையில் உள்ளன. ஏராளமான பேருந்துப் பணிமனைகள், கடனுக்காக வங்கிகளிடம் அடகு வைக்கப்பட்டுள்ளன. உதிரி பாகங்கள், டயர்கள், பாட்டரிகள் வாங்க முடியாமல், ஓடும் நிலையில் உள்ள பேருந்துகள் பல இயக்காமல் நிறுத்தி வைக்கப்படுகின்றன. பலவேறு சமூகப் பிரிவுகளுக்கு இலவசப் பயணத்தை அரசு அறி வித்திருக்கிறது. சமூக நல நோக்கில் அது மிகவும் சரியானது தான். ஆனால் அதனால் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படும் இழப்பை உடனடியாக அரசு பணமாகத் தந்துஈடு கட்டினால் நிதிப்பற்றாக்குறை இந்த அளவுக்கு ஏற்படாது. ஆனால் அவ்வாறு நிகழ்வதில்லை.

ஓடுகிற பேருந்துகளுக்கு கூட போதிய எண்ணிக்கையில் பணியாளர்கள் இல்லை. சட்டப்படி தர வேண்டிய விடுப்புகளையும் எடுக்க முடியாத நிலையில் போக்குவரத்து தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். கூடுதல் நேரம் பணிபுரிவதாலும், பணிச் சுமை அதிகரிப்பதனாலும் தான் பணியின் போதே ஓட்டுனர்கள் இறக்கிறார்கள் என்று அண்மையில் வெளிவந்த நீதிமன்றத் தீர்ப்பு கூறுகிறது.

ஓராண்டுக்கு முன்பு, பூந்தமல்லியில் இருந்து செங்குன்றம் செல்லும் அறுபத்தி ஏழு எண் பேருந்தில் படிக்கட்டில் நின்றவரை மேலே வரச் சொன்ன ஒரே காரணத்திற்காக, அடுத்த பேருந்து நிறுத்தத்தில் ஒரு கும்பலை வரச்செய்து, பேருந்துக் கதவுகளை உடைத்து உள்நுழைந்து ஓட்டுநர் கரிகாலனையும், நடத்துனர் குபேரனையும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் அளவுக்கு தாக்கியது நம் நினைவில் இருக்கிறது.

திருநெல்வேலி ஜங்ஷன் பேருந்து நிலையத்தில் மெது வாக ஊர்ந்து சென்ற பேருந்தை, மூத்த பயணி ஒருவர் கை காட்டியபோது நிறுத்தி ஏற்றியதற்காக, ஒரு உயர் போலீஸ் அதிகாரி பேருந்துக்குள் நுழைந்து ஓட்டுநரை இழுத்துத் தாக்கியதும், அதன் தொடர்ச்சியாக திருநெல் வேலி பணிமனையில் நடத்தப்பட்ட காவல்துறையின் கண் மூடித்தனமான தாக்குதலையும் நாம் மறந்துவிட முடியாது.

அந்த நிகழ்விடத்துக்கு, நமது போக்குவரத்து கழக தொழிலாளர் சம்மேளனத்தின் இன்றைய பொதுச்செயலாளர் ஆர். ஆறுமுகம் சென்ற போது கடுமையான காவல்துறை தாக்குதலுக்கு ஆளானார். பல ஆண்டுகள் ஆன பிறகும் அவருடைய முதுகு தண்டுவடத்தில் பட்ட அடியின் வலியால் இப்போதும் துன்புற்று வருகிறார். இந்த நிகழ்வு குறித்து விசாரணை நடத்திய காதர் கமிஷன் நன்கு ஆய்வு செய்து, போக்குவரத்தில் ஏற்படும் பிரச்சனைகளை சீர் செய்ய, தந்த பரிந்துரைகளை போக்குவரத்து கழக நிர்வாகங்களோ, தமிழ்நாடு அரசோ தொட்டுக் கூடப் பார்க்கவில்லை.

அண்மையில் மீன்கூடை ஏற்றி வந்த மூத்த பெண்மணியை பேருந்தில் இருந்து இறக்கி விட்டது, நரிக்குறவர் குடும்பத்தை கீழே இறக்கியது போன்ற செய்திகள் பெரிதாக வருகின்றன. அந்த நடத்துநர்களின் நடவடிக்கை சரியல்ல என்பதில் இரு வேறு கருத்துகளுக்கு இடமில்லை. 100 சதவீத நல்லவர்கள், 100 சதவீத கெட்டவர்கள் என்று யாரும் இல்லை. குணமும் குற்றமும் நிறைந்துள்ள இந்த சமூகத்தில் இருந்துதான் போக்குவரத்து தொழிலாளர்களும் வருகிறார்கள்.

மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழக்கப் போகிறோம் என்று நன்கு தெரியும் சூழலிலும், பயணிகளைப் பாதுகாப்பதற்காக பேருந்தை ஓரங்கட்டி நிறுத்தி, ஸ்டீரிங் சக்கரத்தின் மீது சாய்ந்து இறந்துபோன பல ஓட்டுனர்களை நாம் பார்த்திருக்கிறோம். இரவு நேர நெடுந்தூர பேருந்துகளில், குழந்தை விடாமல் அழும்போது, சாலையோரம் திறந்து இருக்கிற கடையைத் தேடி பேருந்தை நிறுத்தி, தானே பால் வாங்கி வந்து குழந்தையின் தாயிடம் தந்த நடத்துனர்கள் உண்டு. பயணிகள் விட்டுச்சென்ற விலைமதிப்புமிக்க உடைமைகளை எடுத்து, உரியவர்களைத் தேடிக் கொடுத்த நடத்துனர்கள் உண்டு. இவற்றையெல்லாம் ஒதுக்கித் தள்ளி விடக் கூடாது.

**மாணவர்களின் பாதுகாப்பு அவசியம் என்பதும் அதனை உறுதிப்படுத்த உடனடியாக உரிய நடவடிக்கைகளைத் துவங்குவதும் மிக அவசியமானவை. ஆனால் அதற்கான பிரச்சனைகளின் தன்மையை ஆய்வுசெய்து தீர்வு காண வேண்டும்.**

#போதிய எண்ணிக்கையில் பேருந்துகள் இயக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். இப்போது அது இல்லை என்பது வெளிப்படை.

#பொதுப் போக்குவரத்து உரிய நேரத்தில் கிடைத்தால், இருசக்கர, நான்கு சக்கர வாகனங்களை மக்கள் அதிகமாக பயன்படுத்த மாட்டார்கள். இதனால் போக்குவரத்து நெரி சலும், காற்று மாசுபடுவதும், பெட்ரோலிய பொருட்களின் இறக்குமதியால் ஏற்படும் அந்நிய செலாவணியும் பெருமளவு குறையும்.

# மாணவர்களுக்கு பொது இடங்களில் நடந்து கொள்ள வேண்டிய முறையைப் பாடத்தோடு இணைத்து சிறுவய திலிருந்தே போதிக்க வேண்டும்.

#கல்வி நிறுவனங்களும், பெற்றோர் ஆசிரியர் கழகங்களும் மாணவர்களின் போக்குவரத்து பிரச்சினைகள் குறித்து அவ்வப்போது பேசி முறைப்படுத்த வேண்டும்.

#இதுவரை சாலைப் போக்குவரத்து, பொதுப் போக்குவரத்து குறித்து பல குழுக்கள் தந்துள்ள பரிந்துரைகளை எடுத்து, வாய்ப்புள்ளவற்றை செயல்படுத்த முயற்சிக்க வேண்டும்.

போக்குவரத்து கழக நிர்வாகங்கள், காவல்துறை அதிகா ரிகள், பொது மக்கள் பிரதிநிதிகள், போக்குவரத்து தொழி லாளர் பிரதிநிதிகளைக் கொண்ட குழு அமைத்து பிரச்ச னைகளுக்கான காரணங்களையும், அவற்றுக்கான தீர்வு களையும் கலந்துரையாடி முடிவு செய்து உறுதியாக அமுல் நடத்த வேண்டும்.

மாணவர்கள் படிக்கட்டில் தொங்கி செல்வதை தடுக்கும் ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, போக்குவரத்து தொழிலாளர்கள் மீது வீண் பழி சுமத்தி, தனது பொறுப்பை போக்குவரத்து துறை தட்டிக் கழித்து இருக்கிறது. மாணவர்கள் மீது பெரும் அக்கறை இருப்பது போல பொதுமக்களுக்குக் காட்டிக் கொள்கிற கண்துடைப்பு நடவடிக்கை தான் இது. இது பெரும் கண்டனத்துக்கு உரிய தாகும்.

டாஸ்மாக் கடைகளுக்கு மது வாங்க வருபவர்கள், கோவிட் தடுப்பூசி போட்டு இருக்க வேண்டும் என்றும், தடுப் பூசி போடாதவர்களுக்கு மது விற்றால் டாஸ்மாக் ஊழி யர்கள் மீது நடவடிக்கை என்று இப்போது அடுத்த கட்ட நகர்வு வந்திருக்கிறது. “நோய்நாடி, நோய்முதல் நாடி, அது தணிக்கும் வாய்நாடி” செயல்படுவதற்குப் பதிலாக, தண்ட னைக் கலாச்சாரத்தைத் திணித்து, மேட்டுக்குடி அதிகார வர்க்கம், தம்மை மகாயோக்கியர்களாகக் காட்டிக் கொள்ள முயற்சிக்கிறது.

இந்தச் சுற்றறிக்கையைத் திரும்பப் பெற்று, மாணவர்களை பாதுகாக்க, பயனுள்ள முறைமைகளைத் தேர்ந்து செயலாக்க போக்குவரத்துத் துறை முன்வர வேண்டும்.

தொடர்புக்கு: **9444360869**

---

**திருவாரூர் – காரைக்குடி இடையிலான ரயில் சேவையை தொடங்குக!**

## சென்னை - காரைக்குடி ரயில் சேவையைத் மீண்டும் தொடர்ந்திடுக!

### மக்களவையில் செல்வராஜ் எம்.பி. வேண்டுகோள்

நாடாளுமன்ற மக்களவையில் 8.12. 2021 அன்று விதி எண் 377 இன் கீழ் தோழர் எம்.செல்வராஜ் பேசியது பின்வருமாறு:

அவைத்தலைவர் அவர்களே! நான் பிரதிநிதித்துவம் செய்யும் நாகை நாடாளுமன்ற தொகுதியில் விவசாயிகளும் குறைந்த வருவாய் ஈட்டும் பிரிவினரும் அதிக அளவில் உள்ளனர் என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறேன். ஊரக மேம்பாட்டில் போக்குவரத்து, குறிப்பாக ரயில் போக்குவரத்து மாபெரும் பங்காற்றி வருகிறது.

திருவாரூர் – காரைக்குடி ரயில் தண்டவாளப் பாதை மாற்று திட்டப்பணிகள் 2017இல் நிறைவடைந்தன. சோதனை ஓட்டமும் 2019ஆம் ஆண்டு வெற்றிகரமாக நடைபெற்றது. எனினும், இன்றுவரை இந்த ரயில் பாதையில் பயண சேவை தொடங்கப்படாமல் இருந்து வருகிறது. ரூபாய் 1000 கோடிக்கும் அதிகமாக செலவிடப்பட்டு முடிக்கப்பட்ட இந்தத் திட்டம் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படாததால் மக்கள் பணம் வீணாக்கப்பட்டுள்ளது. இந்த வழித்தடத்தில் உள்ள 72 ரயில்வே கேட் களிலும் காப்பாளர்கள் நியமிக்கப்படவில்லை. ஓய்வுபெற்ற ராணுவ பணியாளர்களைக் கேட் காப்பாளர்களாக நியமிப்பதும் விரைவாக நடைபெறவில்லை.

திருவாரூர் – காரைக்குடி வழித்தடத்தில் முழுவீச்சில் ரயில் போக்குவரத்து சேவையை தொடங்கிடவும், கம்பன் விரைவு ரயில் மற்றும் ராமேஸ்வரம் விரைவு ரயில் சேவைகளை மீண்டும் விரைவில் தொடங்கிடவும் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தங்கள் மூலமாக வேண்டுகோள் விடுக்கிறேன்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 84 இதழ் 37

# காசியில் பிறந்த ஆசை

காசியில் உள்ள அருள்மிகு விஸ்வநாதர் ஆலயம், 3000 சதுர அடி பரப்பிலிருந்து 'புனருத்தாரணம்' செய்யப்பட்டு, 5 லட்சம் சதுர அடியாக விரிவாக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு மதத்தின் வழிபாட்டுத் தலத்தையும் நன்கு பராமரிப்பதும் புதுப்பிக்கப்படுவதும் வரவேற்கத்தக்கது.

ஆயிரம் ஆண்டுகள் பழமையானதாகக் கூறப்படும் இக்கோவிலை, நமது பிரதமர் இப்போதுதான் நாட்டுக்கு 'அர்ப்பணம்' செய்வதாக விளம்பரங்கள் வந்தன. ஒரே நாளில் நான்கு விதமான வண்ண உடைகளை அணிந்த அவருடைய புகைப்படங்கள், செய்திப் பக்கங்களை அலங்கரிக்கின்றன.

அவ்வளவு பெரிய கோவிலை திறந்து வைத்து, நல்ல வார்த்தைகளைச் சொல்வதற்கு பதிலாக, 'எப்போதெல்லாம் அவுரங்கசீப் படையெடுக்கிறாரோ, அப்போதெல்லாம் சிவாஜி எழுந்து நிற்பார்' என மோடி பேசியிருக்கிறார். அந்த நிமிடத்தில் தனக்குத் தோன்றியதை, தீய நோக்கமின்றி நியாயமாக பேசியிருப்பதாக கூட, வரலாற்று உண்மைகளை அறியாதவர்கள் எண்ணுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

ஆனால் இது மிகக் கவனமாகத் திட்டமிட்டு தயாரிக்கப்பட்ட உரை. உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் அடுத்த ஆண்டு தேர்தல் வர இருக்கிறது. மக்களை மத ரீதியாக பிளவுபடுத்தி மோத வைத்து, விழுந்த பிணங்களினூடே பயணித்துத்தான் பாஜக அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கிறது.

இந்த வகையிலான பரப்புரை ஓரிரு மாதங்களுக்கு முன்பே துவங்கி விட்டது. எப்போதும் மதத்துவேஷம் கக்குகிற உ.பி.முதலமைச்சர் யோகி ஆதித்யநாத்தும், அவரது துதிபாடிகளும், இந்துவுக்கு எதிராக முஸ்லிம், கோவிலுக்கு எதிராக மசூதி என டமாரம் அடிக்கத் தொடங்கி விட்டார்கள். பிஜேபி தலைவரான நட்டா, இந்திய தேச பக்தர்களின் உடனடிக் கடமை, முகமது அலி ஜின்னாவின் ஆதரவாளர்களைத் தோற்கடிப்பது தான் என்று தீ மூட்டிப் பார்க்கிறார்!

1991ஆம் ஆண்டின் வழிபாட்டுத் தலங்கள் (சிறப்பு விதிகள்) சட்டத்தை ஒழிக்க வேண்டும் என்று துணை முதலமைச்சர் கேசவ் பிரசாத் மௌரியாவும், பாஜக நாடாளுமன்ற உறுப்பினர் ரவீந்திரன் குஷ்வாஹாவும் மாறி மாறிக் குரல் எழுப்புகின்றனர். அந்த சட்டத்தில், இந்தியா விடுதலை அடைந்த 1947 ஆகஸ்ட் 15ஆம் தேதியன்று, எந்த மத வழிபாட்டுத் தலம் எவ்வாறு இருந்ததோ, அவ்வாறே தொடர்ந்து பராமரிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது.

ஏன் இதை ஒழிக்க வேண்டும்? அதற்கான பதிலை, இந்து மகாசபா சொல்கிறது. ஷாஹி ஈத்கா மசூதியில் அவர்கள் ஆரத்தி பூஜை செய்யப் போகிறார்களாம். அந்த மசூதி, மதுராவில் இருக்கிறது. அதற்குள்தான் கிருஷ்ண பரமாத்மா பிறந்தார் என்று சங்கிகள் கூறுகிறார்கள். பாபர் மசூதியை இடித்து ராமர் கோவில் கட்டத் துவங்கிய பின்பு, இனிமேல் அதைத் தேர்தலுக்குப் பயன்படுத்த வாய்ப்பு இல்லாததால், அடுத்த மோதலுக்காகக் கடப்பாரையைக் கூர்தீட்டுகிறார்கள்.

வேளாண் சட்டங்களை எதிர்த்து நடைபெற்ற விவசாயிகளின் போராட்டம் மக்களை ஒன்றுபடுத்தி விட்டது. உத்தரப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான், உத்தரகண்ட் மாநிலங்களில் வாழும் ஜாட் இனத்தவர், யாதவர்கள், முஸ்லிம்கள், பின்தங்கிய வகுப்பினர் அனைவரும், தமது மொழி, மாநிலம், சாதி. மதம் எல்லாவற்றையும் மறந்து விவசாயிகள் குடும்பமாக இப்போது ஒன்றுபட்டிருக்கிறார்கள்.

கார்ப்பரேட்டுகளைக் கொழுக்கச் செய்வதற்காக விவசாயிகளுக்கு வைத்த ஆப்பு, தன் நெஞ்சிலேயே திரும்பப் பாய்வதைப் பார்த்து, சட்டங்களை திரும்பப் பெற்றதோடு, மன்னிப்பும் கேட்க வேண்டிய நிலைக்கு மோடி ஆளானார். அவரது 'சர்வ வல்லமை பெற்ற மாமனிதர்' எனக் கட்டமைக்கப்பட்ட பிம்பத்தில் பெரும் ஓட்டை விழுந்துவிட்டது.

எனவே எவ்வாறேனும், இவர்களை மீண்டும் பிளவுபடுத்தி விடவேண்டும் என்ற குரூர ஆசையின் விளைவுதான் அவுரங்கசீப் சிவாஜி பேச்சு.

அவுரங்கசீப் எங்கிருந்தும் படையெடுத்து வந்தவர் அல்ல. முகலாய அரசர்களில் ஆறாவது தலைமுறையைச் சேர்ந்தவர். மோடி பிறந்த அதே குஜராத்தில் பிறந்து, வாழ்ந்து இந்தியாவிலேயே மடிந்தவர். அதேபோல சத்திரபதி சிவாஜியும் மத வெறியர் அல்ல. மத ஒற்றுமையைப் பேணி வளர்த்த சிவாஜியின் உண்மை வரலாற்றை ஆதாரத்தோடு எழுதி நிறுவிய காரணத்துக்காகத்தான் தோழர் கோவிந்த் பான்சரேயை, 2015ல் சங்கிக் கும்பல் சுட்டுக் கொன்றது. இன்றுவரை கொலையாளிகளைக் கைது செய்யாமல் பாதுகாக்கிறது.

மக்களை மத ரீதியாகப் பிளவுபடுத்தி ஆளும் வழிமுறையை பிரிட்டிஷ்காரர்கள் கண்டுபிடித்தார்கள். அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான வழியாக, பாஜக அதையே கையிலெடுக்கிறது.


தேர்தல் நடக்கப்போகும் மாநிலங்களில், பல கலகங்களை, மத மோதல்களை ஆர்எஸ்எஸ் திட்டமிட்டு உருவாக்கியிருக்கிறது. ஆனால் அந்த மக்கள் தங்கள் வாழ்க்கையின் அடிப்படையான, உண்மையான பிரச்சினைகள் என்ன என்பதை இப்போது கண்டுணர்ந்து கொண்டனர். எனவே வெறி எடுத்த பாஜக, மூர்க்கமாகக் கொடிய விஷம் கக்குகிறது.

விஷப் பல்லை மக்கள் முறிப்பார்கள்.

சுபோத் தத்தா

# தெபகா இயக்கத்தின் பவள விழா கொண்டாட்டம்

75





கொல்கட்டா, விவசாயிகள் இயக்கத்தின் புனித பூமியான பஸீர்ஹட்டில் 'தெபகா இயக்கத்தின்' 75வது ஆண்டு பவள விழா 2021, நவம்பர் 24ல் கொண்டாடப் பட்டது.

1946ல் தொடங்கிய அந்த இயக்கம் 1950வரை நீடித்தது. அக்காலத்தில் பெருநிலக்கிழார்களான ஜோடேதார் (**Jotedars**, ஜமீன்தார்) நிலத்தில் ஒப்பந்த அடிப்படையில் விவசாயம் செய்த பர்க்காதார்கள் (**Bargadars**, குத்தகை விவசாயிகள்) விளைச்சலில் பாதியை நிலவுரிமையாளர்களுக்குத் தர வேண்டியிருந்தது. விளைச்சல் பங்கை மூன்றில் ஒரு பங்காகக் குறைக்க வேண்டும் என்பது தேபகா இயக்கத்தின் கோரிக்கை. அவ்வாறு பிரிக்கும் முன் அறுவடையான தானியத்தைத் தங்கள் வசமே வைத்திருப்போம், ஜோடேதார்களின் பண்ணையில் வைக்க மாட்டோம் என்றும் வற்புறுத்தினர். மேலும் வங்கத்தின் நில வருவாய் ஆணையம், அதேபோன்ற சிபார்சையும் அரசுக்கு அறிக்கையாகத் தந்திருந்தது. தேபகா இயக்கப் போராட்டத்தில் ஜோடேதார்களுக்கும் பர்க்காதார்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

போராட்டம் காரணமாக அம்மாகாணத்தின் முஸ்லீம் லீக் அமைச்சரவை பர்க்கதாரி சட்டம் கொண்டு வந்தது; அந்தக் குத்தகைச் சட்டம் அறுவடையான மொத்த தானியத்தில் மூன்று ஒரு பங்கை நிலவுடைமையாளருக்கு வழங்கும் வகையில் வரையறுத்தது. நிலவருவாய் ஆணையமும் (ஃப்ளவ்டு கமிஷன் என்று அதன் தலைவரான சர் ஃபிரான்சிஸ் ஃப்ளவ்டு பெயரிலும் அழைப்பர்; பிரிட்டீஷ் அரசு அதிகாரியும் தூதுவருமான அவருடைய சேவையைப் பாராட்டி மிக அபூர்வமாக மூன்று நைட்கூட் சிறப்புப் பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது) குத்தகைதாரர்களுக்கு ஆதரவான சிபார்சுகளைத் தந்தது.

**பிரிக்கப்படாத 24 பர்க்கானாவில் போராட்ட இயக்கம்**

1943 வங்கப் பஞ்சத்தின்போது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சுந்தர்பன்ஸ் பகுதியின் விவசாயிகளுக்கு நிவாரண உதவிகளை வழங்கியது. 1946 செப்டம்பரில் வங்கப் பிரதேச கிஸான் சபா தேபகா இயக்கத்தைத் தொடங்குவது என முடிவெடுத்தது. (தெபகா என்றால் 'மூன்று பங்கு' எனப் பொருள்) அந்த விவசாயிகள் இயக்கம் காக்த்விப், சோனார்பூர், பான்கர் மற்றும் கேனிங் பகுதிகளில் வெடித்தெழுந்தது. காக்த்விப் மற்றும் நாம்கான் இரண்டும் இயக்கத்தின் புயல் மையமாக விளங்கின. குத்தகை விவசாயிகளின் பங்கை அதிகரிப்பதே இயக்கத்தின் நோக்கம்.

அந்த இயக்கத்தின் புகழ்பெற்ற தலைவர்களாக கன்ஸாரி ஹால்டர், கணேஷ் தாஸ், அசோக் போஸ் மற்றும் ராஷ் பிகாரி போஸ் இருந்தனர். கஜன் மாலிக், மானிக் ஹஜ்ரா, பிஜாய் மோன்டல் போன்ற விவசாயத் தலைவர்கள் சிலர் புகழ்பெறத் தொடங்கினார்கள். 1950 வரை தொடர்ந்த இயக்கத்தின்போது பர்காதாரி சட்டம் நிறைவேற்றப்பட்டது. நிலத்தில் உழைப்பையும் இடுபொருள்களையும் வழங்கிய குத்தகை விவசாயிகளுக்கு விளைச்சலில் மூன்றில் இரண்டு பங்கு பெறுவதை அந்தச் சட்டம் அங்கீகரித்தது.

1946 -1950 காலகட்டத்தில் 24 பர்க்கானா மாவட்டத்தின் பல பகுதிகளில் தேபகா இயக்கம் காரணமாக பர்க்கதாரி சட்டம், 1950 கொண்டு வரப்பட்டது. அச்சட்டம் நிலத்தில் பயிர் செய்த குத்தகை விவசாயிகளுக்கு அதிக பங்கை அங்கீகரித்தாலும் அது அமல்படுத்தப்படவில்லை. நில உச்ச வரம்பையும் மீறி பெரும் பரப்பிலான நிலங்கள் பணக்கார நில உடைமையாளர்கள் வசமே இருந்தது.

**இடதுசாரி அரசின் நிலச் சீர்திருத்தம்**

நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் அமலாக்கப்படாமல் இருந்ததை எதிர்த்து விவசாயிகளின் எழுச்சியை 1967ல் மேற்கு வங்கம் சந்தித்தது. 1977லிருந்து மேற்கு வங்கத்தில் முக்கியமான நிலச் சீர்திருத்தங்கள் பெருமளவில் இடதுசாரி அரசின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டன. உச்சவரம்புக்கு அதிகமான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு விவசாயிகளுக்குப் பிரித்தளிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து விவசாயிகளின் குத்தகை உரிமைகளைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு 'ஆப்பரேஷன் பர்கா' என்ற இயக்கம் செயல்பட்டது. பிளவுபடாத வங்காளத்தின் 19 மாவட்டங்களில் அந்த இயக்கம் பரவியது.

அந்த இயக்கம் தினாஜ்பூர், ரங்க்பூர், ஜல்பைகுரி, கௌல்னா, மைமென்சிங், ஜாஸோர் மற்றும் 24 பர்க்கானா பகுதிகளில் தீவிரமானதாக மாறியது. அதன் பிறகு மித்னாபூர் மாவட்டத்திற்கும் பரவியது. போராட்ட இயக்கத்தில் பெண்கள் முக்கியமான பங்காற்றினர். ராணி மித்ரா தாஸ்குப்தா, மனிகுந்தளா சென், ரேணு சக்ரவர்த்தி, இளா மித்ரா முதலிய சிலர் அதன் புகழ்பெற்ற பெண் தலைவர்கள். அவர்களெல்லாம் 'மகிளா ஆத்ம ரக்ஷா சமிதி' (**MARS**) அமைப்பின் தலைவர்களாவார்கள். வி(பி)மலா மாஜீ, ஓர் இளம் கைம்பெண், மித்னாபூரின் நந்திகிராமத்தில் தேபகா இயக்கத் தலைவராக உருவானார். காகத்தீப் பகுதியில் ஒரு தியாகியின் மரணத்தை தழுவி வீர மரணம் அடைந்த பழங்குடி இனப் பெண்ணான அகல்யா உட்பட பல விவசாயிகள் இறந்தனர்.

**வங்கத்தின் இந்த வேளாண் இயக்கத்தின் நினைவாக வண்ணமயமான அலங்கரிக்கப்பட்ட பேரணிக்கு அகில இந்திய கிஸான் சபா (பி பி கங்குலி வீதியில்) வடக்கு 24 பர்க்கானா மாவட்டக் கமிட்டி பஸீர்ஹட்டில் ஏற்பாடு செய்தது. பேரணியில் சிபிஐ மாவட்டக்குழு செயலாளர் ஸ்வபன் பானர்ஜி, ஏஐகேஎஸ் மாவட்டச் செயலார் அஜீத் முகர்ஜி, சிபிஐ மாவட்டச் செயலாளர் சாய்பால் கோஷ் மற்றும் ரஞ்ஜித் கர்மாகர், குமரேஷ் குண்டு, காஜன் அதிகாரி, சிவ்சங்கர் கங்குலி, பாரந்தி அதிகாரி, அசிம் காடக், ஸ்வபன் குப்தா, ஆனந்த மண்டல் முதலான பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.**

ஸ்வபன் முகர்ஜி பேசும்போது 'தொடர்ச்சியான வீரம் செறிந்த தீவிரமான போராட்ட இயக்கம் வெற்றி மீது வெற்றி வந்து சேரச் செய்யும் என்பதற்கு 'சம்யுக்த கிஸான் மோர்ச்சா' கூட்டியக்கத்தின் சமீபந்திய சாதனையே சான்று. அதைத்தான் முன்பே சாதித்தது தேபகா இயக்கம். நாம் எப்போதும் மக்களோடு நிற்கிறோம். நமது பிரதானமான கடமை உழைக்கும் மக்களுக்காகப் பாடுபடுவது. ஒன்றிய அரசு அரசியலமைப்புச் சட்டத்தின் வழிகாட்டலில் அல்லாமல், ஆர்எஸ்எஸ் அமைப்பின் வழிகாட்டலில் செயல்படுகிறது; மாநிலத்தில் உள்ள அரசோ மாநில வளர்ச்சிக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்குமான எவ்வித நேர்மறை திட்டங்களும் இன்றிச் செயல்படுகிறது'' என்று குறிப்பிட்டார்.

அலங்கரிக்கப்பட்ட வண்ணமயமான பேரணியில் விவசாயிகள் செங்கொடிகள், பதாகைகள் மற்றும் ஏர் கலப்பைகளை ஏந்தியபடி பஸீர்ஹட்டின் போட்காட் வந்தடைந்தனர். மலைவாழ் கிஸான்கள் தங்களது பாரம்பரிய உடையலங்காரத்தில் வந்து கலந்து கொண்டனர். பெண்களின் பங்கெடுப்பு ஒப்பற்றதாக இருந்தது. பேரணிக்கு நிர்மல் கயான் தலைமை வகிக்க, பேரணியைக் காஜன் அதிகாரி நடத்தினார்.

தேபகா இயக்கத்தின் பவளவிழா தேசத்தை என்றும் உற்சாகப்படுத்தும். வயல்வெளிகள் தானியங்கள் உற்பத்தியாகும் களம் மட்டுமல்ல, அது வீரத்தின் விளைநிலம்! விவசாயிகளின் ஒற்றுமை ஓங்குக! இன்குலாப் ஜிந்தாபாத்!

நன்றி : நியூஏஜ் (டிச.5 11) தமிழில் : **நீலகண்டன்**

தத்துவார்த்தம் 9



எஸ். தோதாத்ரி

# நிலை மறுப்பு விதி



**“தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை” என்று நம்மிடையே ஒரு பழமொழி உண்டு. இப்பொழுது கூறவிருக்கும் விதிக்கு பொருத்தமான பழமொழி இது. இந்த விதி நிலை மறுப்பு விதி எனப்படுகிறது.**

அளவு பண்பாக மாறுவது, பண்பு அளவாக மாறுவது என்பது மாறுதல் நிகழும் முறையைக் குறிக்கிறது. எதிரிடைகளின் போராட்டம் என்பது மாறுதலுக்கான ஆதாரத்தை காட்டுகிறது. ஆனால் மாறுதல் நிகழ்ந்த பின்னர், புதியதில் எது இருக்கும், எது இருக்காது என்பதைக் கூறுவது இந்த விதி.

ஒரு பொருள் குறிப்பிட்ட காலம் வரை நிலைத்து இருக்கிறது. பின்னர் அது மாறுகிறது அல்லது மறைகிறது. இதனைத்தான் நிலை மறுப்பு என்கிறோம். மாறிய பொருள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை நிலைத்து இருக்கிறது, அதுவும் மாறுகிறது. அது வேறு ஒன்றாகிறது. இப்பொழுது கேள்வி ஒன்று, மற்றொன்றாக மாறி விட்டால் பழைய பொருளின் பண்பு இருக்குமா? இருக்காதா? என்பதாகும். இதற்கு சுருக்கமான விடை ஒன்று. மாறும்பொழுது பழமையின் கூறுகளும் தொடரும், புதிய பண்புகளும் இடம்பெறும் என்பதாகும். இதில் முதலில் ஒரு பொருள் உள்ளது. இது மாறுகிறது. இது மறுப்பு ஆகும். புதிய பொருள் தோன்றுகிறது, இது மறுப்பின் மறுப்பு ஆகும். இது ஒன்று மற்றொன்றாகி, அதுவும் வேறொன்றாகி, ஒரு சங்கிலித் தொடர் போல இடையறாது நிகழ்ந்து கொண்டிருக்கும் செயல் ஆகும்.

இதில் முதல் உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். “தாயைப் போல பிள்ளை” என்ற கூற்றில் இரு அம்சங்கள் உள்ளன. குழந்தைக்கு தாயின் பண்புகள் உண்டு. அதே சமயத்தில் பல புதிய பண்புகளும் உண்டு. இதன் விளைவு குழந்தை. இந்த குழந்தை தாயை மறுக்கிறது. பின்னர் இது வளர்ந்து பெரியவனாகி, அதற்குக் குழந்தை பிறக்கும்பொழுது பாரம்பரிய பண்பும் இருக்கும், அவசியமற்ற பாரம்பரிய பண்பு மறையும். புதிய பண்பு தோன்றும். இது இரண்டாவது மறுப்புநிலை.

மற்றொரு உதாரணம் தரலாம். ஒரு அவரை விதையை ஊன்றுகிறோம். அது முளைத்து செடியாகிறது. செடியானது விதையிலிருந்து மாறுபட்ட வடிவம், குணம் ஆகியவற்றை கொண்டுள்ளது. செடி விதையை மறுக்கிறது. இதில் பூக்கள் பூக்கின்றன. இதில் விதைகள் தோன்றுகின்றன. ஒரு விதை என்பது பல ஆயிரக்கணக்கான விதைகளாக மாறுகிறது. இது அளவு மாறுபாடு. புதிய விதைகள் சில புதிய பண்புகளையும் பெறுகின்றன. இந்த விதைகள் செடியை மறுக்கின்றன.

இதே போன்றதுதான் **சமுதாய வளர்ச்சியும் புராதன பொதுவுடமை சமுதாயம் நிலை மாறுதல் காரணமாக அடிமைச் சமுதாயமாக மாறுகிறது. இது முதல் நிலை மறுப்பு. அடிமைச் சமுதாயம் நிலவுடமை சமுதாயமாக மாறுகிறது, இது இரண்டாவது நிலை மறுப்பு. இவ்வாறு இந்த நிலை மறுப்பு தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டே இருக்கும். இந்த விதியானது ஒரு பொருள் எவ்வாறு மாறி முன்னேறிச் செல்கிறது என்பது பற்றியது. இது வளர்ச்சியின் பொழுது எவை தொடரும்; எவை மறையும் என்பதையும் காட்டுகிறது.**

வளர்ச்சி பற்றிய கருத்துக்கள் இருவேறு வகையாக உள்ளன. ஒன்று சுழல் வளர்ச்சி. மற்றொன்று கம்பிச்சுருள் வளர்ச்சி (Spring). சுழல் வளர்ச்சியில் வளர்ச்சி மேல் நோக்கி சென்று பின்னர் மறுபடியும் புறப்பட்ட இடத்திற்கே வருகிறது. சமயவாதிகளும், கருத்துமுதல்வாதிகளும் இதைக் கூறுகின்றனர். நமது மரபில் யுகங்கள் பற்றிய கருத்து உள்ளது. ஆரம்பத்தில் கிருதயுகம், இது மாறி திரேதா யுகமாகவும், இது மாறி துவாபர யுகம், இது மாறி கலியுகம், கலியுகம் முடிந்த பின் கிருதயுகம் தொடங்கும். இதில் படிப்படியாக மாறுதல் ஏற்பட்டு, வளர்ந்து மறுபடியும் ஆரம்ப நிலைக்கே செல்வதைக் காணுகிறோம்.

நிலை மறுப்புக் கூறும் வளர்ச்சி அவ்வாறு அல்ல. ஒரு சிறிய புள்ளி பெரிதாகிறது; அது இன்னும் பெரிதாகிறது; இது தொடர்ந்து மேலே மேலே செல்கிறது.

இது பழைய நிலைக்கு திரும்புவதில்லை. இதில் தேக்க நிலை ஏற்படாமல். இதற்கு பல காரணங்கள் உள்ளன. பின்னடைவும் ஏற்படலாம். ஆனால் உள்ளார்ந்து முன்னோக்கித்தான் பொருள் சென்று கொண்டிருக்கும். உதாரணமாக அணுவை எடுத்துக் கொள்வோம், துகள்களாக இருந்தவை அணுவாக மாறுகின்றன. அணு கூட்டுப் பொருளாக மாறுகிறது. கூட்டுப்பொருள் சிக்கலான பொருட்களாக மாறுகின்றன. இவற்றில் உள்ள அணுக்கள் பிரிந்தால் வேறு பொருள்களாக மாறுகின்றன. மறுபடியும் அணுநிலைக்கு செல்வதில்லை. இதுதான் வளர்ச்சியின் இயங்கியல். சுழல் வளர்ச்சி என்பது இயந்திரகதியிலானது. சுருள் கம்பி வளர்ச்சி என்பது இயங்கியல் ரீதியிலானது.

தொடர்புக்கு: **98947 83657**

01ம் பக்கத் தொடர்ச்சி >>

வைத்தார். மாணவர் பெருமன்ற நாமக்கல் மாவட்டச் செயலாளர் து.இளையராஜா நன்றி கூறினார். இதில் சுமார் 150 பேர் கலந்துகொண்டனர்.

மதுரை: தென் மண்டலம் சார்பில் மதுரை மேலூர் பேருந்து நிலையம் அருகில் மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் க.சேதுபாண்டி தலைமையில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. அ.ரஞ்சனி கண்ணம்மா, நெல்லை முகமது தாலிப், தேனி எஸ்.ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மக்கள் கண்காணிப்பகத்தின் நிர்வாக இயக்குனர் ஹென்றி திபேன் போராட்டத்தை துவக்கி வைத்தார். இதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செய்ற்குழு உறுப்பினர் மதுக்கூர் ராமலிங்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் பா.காளிதாஸ், இளைஞர் பெருமன்ற மாநில பொருளாளர் உ.சிவாஜி காந்தி, மாநில துணைச் செயலாளர் இரா.தமிழ் பெருமாள், வழக்கறிஞர் பகத்சிங், எரிகுழாய் எதிர்ப்பு இயக்கத்தின் தலைவர் செல்வராஜ், திராவிடர் விடுதலை இயக்கத்தின் நிர்வாகி மா.பா.மணியமுதன், இளைஞர் பெருமன்ற மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் கா.கிருஷ்பாக்கியம் உள்ளிட்டோர் பங்கேற்றுப் பேசினர். வழக்கறிஞர் எம்.கிருஷ்ணன் போராட்டத்தை நிறைவு செய்தார்.

திருச்சி: வடக்கு மண்டலம் சார்பில் திருச்சியில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாநிலத் துணைச் செயலாளர் ஜி.ஆர்.தினேஷ் குமார் தலைமை வகித்தார். இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் தோழர் செல்வகுமார் வரவேற்புரை ஆற்றினார். மாணவர் பெருமன்ற மாநிலக் குழு உறுப்பினர்கள் தஞ்சை சுதந்திர பாரதி, புதுக்கோட்டை விஜய், பெரம்பலூர் அபிஷேக், திருச்சி மாநகர் பாட்ஷா, மாவட்டக்குழு உறுப்பினர் விஷ்வா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் த.இந்திரஜித் தொடக்க உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தை திருச்சி மாநகர் மாவட்டச் செயலாளர் க.இப்ராகிம் ஒருங்கிணைத்தார்.

மாணவர் பெருமன்றத்தின் முன்னாள் மாநிலச் செயலாளர் செல்வராஜ், மதிமுக மாணவர் அணி மாநில செயலாளர் பால. சசிகுமார், விவசாய சங்க மாவட்டச் செயலாளர் சிவ சூரியன், பேராசிரியர் நெடுஞ்செழியன், இளைஞர் பெருமன்ற புறநகர் மாவட்டச் செயலாளர் ராஜ்குமார், மாநகர் மாவட்டத் தலைவர் முருகேசன், காங்கிரஸ் கட்சியின் மாவட்ட பொது செயலாளர் மணிவேல், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஹரிஹரன், எஸ்.ஐ.ஒ. அமைப்பின் மாவட்டக் குழு உறுப்பினர் முகமது அசாருதீன், மாதர் சங்க மாவட்ட செயலாளர் பார்வதி மற்றும் மாணவர் பெருமன்ற மாநில குழு உறுப்பினர் தாஸ் ஆகியோர் கண்டன உரையாற்றினர். நிறைவுரையாக ஏஐஎஸ்எஃப் மாநில துணைத் தலைவர் ஆர்.முகில் பேசினார். புறநகர் மாவட்ட தலைவர் சூர்யா நன்றி உரையாற்றினார்.

# விவசாயிகளின் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு புரட்சிகர வாழ்த்துக்கள்

378 நாட்களாகத் தொடர்ந்து நடைபெற்ற விவசாயிகளின் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியை முன்னிட்டு விவசாயிகளுக்கும், விவசாய சங்கங்களுக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பது பின்வருமாறு:

விவசாயிகள் விரோத, மக்கள் விரோத வேளாண் சட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளுக்கு எதிராக 378 நாட்கள் தொடர்ந்து போராடி வெற்றி கண்டிருக்கும் இந்திய விவசாயிகள் மற்றும் விவசாய சங்கங்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அதன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்தப் போராட்டத்தைத் தலைமை ஏற்று நடத்தி, விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்ற சூழலை உருவாக்கியதில் சம்யுக்த கிசான் மோர்ச்சா மற்றும் அகில இந்திய விவசாயிகள் சங்கம் மாபெரும் பங்காற்றின. ஒரு ஜனநாயக கட்டமைப்பில், பேச்சுவார்த்தை மற்றும் கலந்தாலோசனை அடிப்படையில் செயல்படும் முறை தான் நாம் விரும்பும் பலன்களைத் தரும்: நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லும் என்ற நமது கட்சியின் நிலைப்பாட்டை தேசிய குழு மீண்டும் வலியுறுத்துகிறது. இந்த உண்மைத் தன்மையை உணர்ந்து, மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் எதேச்சதிகார மற்றும் ஆணவப் போக்கை ஆர்எஸ்எஸ்– பாஜக தலைமையிலான அரசாங்கம் கைவிட வேண்டும்.

அரசாங்கத்தின் பிடிவாதப் போக்கு விவசாயிகளை மட்டுமின்றி தேசத்தின் ஜனநாயக சிந்தனை கொண்ட அனைத்து தரப்பு மக்களையும் வேதனைக்கு உள்ளாக்கி இருப்பதாகக் கட்சி கருதுகிறது. கடந்த 378 நாட்களாக விவசாயிகளும் அவர்களது குடும்பத்தாரும் எதிர்கொண்ட வேதனைகளுக்கு காரணமான ஆட்சியாளர்களை அவர்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள் என்பதோடு, அவர்களின் கோபம் நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தல்களில் எதிரொலிக்கும் என்று கட்சி நம்புகிறது.

விவசாயிகள் போராட்டத்திற்கு ஆதரவளித்த அரசியல் கட்சிகள், பெண்கள், தொழிலாளர்கள், இளைஞர்கள் மற்றும் மாணவர் அமைப்புகளுக்கு கட்சி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

**விமானப்படை ஹெலிகாப்டர் விபத்து: தேசிய செயற்குழு இரங்கல்**

கடந்த டிசம்பர் 8 ஆம் நாள் அன்று தமிழ்நாட்டுப் பகுதியில் இந்திய விமானப்படை ஹெலிகாப்டர் எம்.ஐ.17 வி.5 விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் இந்திய ராணுவத்தின் தலைமைத் தளபதி ஜெனரல் பிபின் ராவத், அரவது மனைவி மதுலிக்கா ராவத் மற்றும் 11 ராணுவ படை வீரர்கள் உயிரிழந்தனர். அவர்களை இழந்து வாடும் குடும்பத்தாருக்கு கட்சி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

# முதன்மை தளபதி விபின் ராவத் உள்ளிட்டோர் மறைவு

நாட்டின் பாதுகாப்புத் துறையின் முப்படைகளின் முதன்மை தளபதி விபின் ராவத் அவரது மனைவி மற்றும் உறவினர்கள் உட்பட 14 பேர் குன்னூர் வந்த ஹெலிகாப்டர் விபத்துக்கு ஆளான செய்தி அதிர்ச்சியளிக்கிறது. இதில் விபின் ராவத் உட்பட பதினான்கு பேரும் உயிரிழந்தனர்.

ஹெலிகாப்டர் விபத்துக்கு என்ன காரணம் என்று விசாரிக்க இந்திய விமானப்படை உயர் அமைப்பு உத்திரவிட்டுள்ளது. தமிழ்நாட்டில் முப்படைகளின் முதன்மை தளபதியும், அவரது குடும்பமும், உயர் அதிகாரிகளும் உயிரிழந்த செய்தி நெஞ்சை பிசையும் வேதனையளிக்கிறது.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

முப்படைகளின் தலைமை அதிகாரியின் பயணத் திட்டத்தில் ஏற்பட்ட ஹெலிகாப்டர் விபத்து பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது. இதற்கு பொறுப்புணர்வோடும். நம்பிக்கையளிக்கும் வகையிலும் ஒன்றிய அரசு நாட்டு மக்களுக்கு பதிலளிப்பது அவசியமாகும். விபத்தில் உயிரிழந்த விபின் ராவத் உட்பட அனைவரின் மறைவுக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.



அரவிந்தன் கண்ணையன்

# சமூக வலைதளங்களில் வெறுப்பை உமிழும் சங்கிகள்!

**பிரான்சிஸ் ஹாகென் (Frances Haugen) ஓர் அமெரிக்க தொலைக்காட்சியின் நேரலையில் தோன்றினார். ஃபேஸ்புக்கின் செயல்பாடுகள் குறித்து 'வால்ஸ்ட்ரீட் ஜர்னல்' பத்திரிகையில் சமீபத்தில் வெளிந்த கட்டுரைகளுக்குத் தரவுகள் தந்துதவியது ஃபேஸ்புக் நிறுவனத்திலேயே வேலை பார்க்கும் தான்தான் என்று அவர் சொன்னார். அடுத்த 24 மணி நேரத்தில் பேஸ்புக்கின் பங்குச்சந்தை மதிப்பு 6 பில்லியன் டாலர் சரிந்தது. மேலும் சோதனையாக ஃபேஸ்புக் செயலி பல மணி நேரங்கள் செயலிழந்ததும், அந்நிறுவனத்தின் செயல் திறன் மீது கேள்விகள் எழுப்பியது.**

இச்சூழலில் அமெரிக்காவின் மூன்று முக்கிய பத்திரிக்கைகள் 'நியூ யார்க் டைம்ஸ்' (NYT), 'வாஷிங்டன் போஸ்ட்' (WaPo), 'வால்ஸ்ட்ரீட் ஜர்னல்' (WSJ) அடுத்தடுத்து நீண்ட கட்டுரைகளை வெளியிட்டன. இந்தியாவில் வெறுப்பரசியல் வளர ஃபேஸ்புக் உதவுவதாகவும், இதைத் தடுக்க எந்தப் பிரயத்தனமும் எடுக்கப்படவில்லை என்றும் அந்தக் கட்டுரைகள் கூறின.

விஞ்ஞானம், தொழில்நுட்ப முன்னேற்றங்கள் எப்போதுமே இரு முனைக் கத்தி ! அணுசக்தியால் நகரங்கள் அழிந்திருக்கின்றன. அதே அணுசக்தி புற்றுநோயிலிருந்து காக்கவும் உதவுகிறது. ஃபேஸ்புக்கும் இதற்கு விதிவிலக்கு இல்லை.

**அமெரிக்க அரசியலும் பேஸ்புக்கும்**

வாஷிங்டன் டி.சி. அருகே ஒரு பீட்சா ஹட் உணவகத்தில் ஹிலாரி கிளிண்டனின் பாலியல்ரீதியாக குழந்தைகளை துன்புறுத்துவதாக ஒரு பொய்ச் செய்தி ஃபேஸ்புக்கில் பரவ அந்த உணவகம் தாக்கப்பட்டது, சமூக வலைதளங்களின் வீச்சுக்கும் தாக்கத்திற்கும் ஓர் உதாரணம் இது.

2020 தேர்தலில் டொனால்ட் டிரம்ப் தோற்றார். ஆனால், தொடக்கத்தில் தன் தோல்வியை ஒப்புக்கொள்ள மறுத்து அமெரிக்க ஜனாதிபதியான அவரே பொய்ச் செய்திகளை பரப்பினார். அவர் ஆதரவாளர்கள் அச்செய்திகளை சமூகவலைதளங்களில் மேலும் பரவலாக்கினர். அமெரிக்க தேர்தலின் மீது அமெரிக்கர்களே நம்பிக்கை இழந்து, 'மோசடி நடந்தது' என்று பேசும் நிலையை உருவாக்கினர். டிரம்பின் நீதித் துறையே, தேர்தல் நேர்மையாக நடந்ததென்று சான்றளித்தை டிரம்ப் ஆதரவாளர்கள் கேட்கவில்லை. முத்தாய்ப்பாக தேர்தல் முடிவை அதிகாரபூர்வமாக அமெரிக்க காங்கிரஸ் ஏற்கும் நாளன்று அமெரிக்காவே திகைக்கும் வகையில் காங்கிரஸ் கட்டிடத்தைத் தாக்கிச் சூறையாடினார்கள் டிரம்ப் ஆதரவாளர்கள். இதில் ஃபேஸ்புக்கின் பங்கு கணிசமானது.

**இன்ஸ்டாகிராமும் பதின்ம வயதுப் பெண்களின் மன உளைச்சலும்**

செப்டம்பர் 14 அன்று 'வால்ஸ்ட்ரீட் ஜர்னல்' பத்திரிகை, ஃபேஸ்புக்கின் இன்னொரு சமூக வலைதளமான இன்ஸ் டாகிராம் எவ்வாறு பதின்ம வயதுப் பெண்களுக்கு தங்கள் உடல் பற்றிய திருப்தியின்மையை உருவாக்கி பெரும் மன உளைச்சல் அளிக்கக் காரணமாகின்றது என விரிவான கட்டுரை வெளியிட்டது.

**வெறுப்பை ஊக்குவிக்கும் அல்காரிதம்**

2016ல் ஃபேஸ்புக் நிறுவனத்தின் ஆய்வாளரே வெளியிட்ட பதிவொன்றில், 'சமூக வலைதளங்கள் மூலம் செய்திகளைப் படித்து ஒரு ஊக்கமற்ற தன் தேவைக்கான நுகர்வோராக (passive user) மட்டுமே இருப்பது மன ஆரோக்கியத்துக்கு கேடு' என்று கண்டறிந்து எழுதினார். ஆனால், ஃபேஸ்புக்கால் விளையும் மன பாதிப்புக்கான மருந்து, ஃபேஸ்புக் மூலம் இன்னும் பலருடன் பகிர்தலே' என்பதாகச் சொல்லி அதனை ஊக்குவிக்கும் வகையில் ஃபேஸ்புக் செயல்பட ஆரம்பித்தது.

ஃபேஸ்புக் பதிவுகளின் வினை விருப்பக் குறிக்கு (like) 1 மதிப் பெண், மறுப்பகிர்வுக்கு 5, முக்கியமான நீள கமெண்ட் அல்லது மறுப் பகிர்வுக்கு 30 என்று பதிவுகளை மதிப்பிட ஆரம்பித்து, இதற் கேற்ப பதிவுகளைப் பயனர்களின் செய்திச் சுருளில் (news feed) காட்டுமாறு செய்தது. இதன் விளைவாக சர்ச்சைப் பதிவுகள் பிர தான இடம்பெற்றன, ஆக்ரோஷத்தை உண்டாக்கும் பதிவுகள் தூக்கிப்பிடிக்கப்பட்டன.

போலந்தில் ஓர் அரசியல் கட்சி 50%50% என்கிற அளவில் நேர்மறைச்செய்தி, எதிர்மறைச் செய்திகளைப் பகிர்ந்துவந்தது. ஃபேஸ்புக்கின் எதிர்மறைச் செய்திகளின் பங்கு 80% ஆக எகிறியது. இப்படிப்பட்ட சூழலில்தான் பாஜகவின் ஐடி விங்கின் எதிர்மறைச் செய்திகளை நாம் நினைவுகூர வேண்டும். சென்ற வருடம் ஃபேஸ்புக் கோப உணர்வு எமோஜிக்கான மதிப்பீட்டை பூஜ்யமாக்கியதும் வன்முறைப் பதிவுகள் குறைந்தன என்று நிறுவனத்தின் ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

இப்படிப்பட்ட இடத்தில் நாம் எல்லோருமே ஏதோ ஒரு வகையில் ஃபேஸ்புக்கின் வினை ஆற்றும் பகடைக்காய்கள் ஆகிவிடுகிறோம். நீண்ட நாள் ஃபேஸ்புக் செயல்பாட்டாளனாக என்னால் இதை உறுதியாகச் சொல்ல முடியும். தமிழ்ப் பதிவுகளில் பிராமணர்களைக் காழ்ப்புடன் பழிப்பதோ, பெரியாரைக் காட்டமாக விமர்சிப்பதோ நொடிப் பொழுதில் வைரலாகும். மார்க் ஸக்கர்பர்க் இப்படியான எதிர்மறை விளைவுகளை மட்டுப்படுத்த நிறுவன ஊழியர்கள் முன்வைத்த யோசனைகளை நிராகரித்தார் என்கிறது 'வால்ஸ்ட்ரீட் ஜர்னல்' கட்டுரை.

இந்த இடத்தில்தான் நாம் இந்தியா தொடர்பான ஃபேஸ்புக் செயல்பாடுகளையும், பாஜகவின் வெறுப்பரசியலையும் ஆராய வேண்டி இருக்கிறது.

**2019 தேர்தலும் பாஜகவின் சமூக வலைதளப் பிரச்சாரமும்**


2019 நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக அசுர வெற்றி பெற்றது ஏன் என்று கிரிஸ்டோஃப் ஜாஃப்ரலாட்டும் கில்லிஸ் வெர்னியர்ஸும் 'கான்டெம்ப்ரவரி சௌத் ஏஷியா' (Contemporary South Asia) இதழில் வெளியிட்ட கட்டுரையில் சில காரணங்களை முன்வைத்தார்கள். அத்தேர்தலில் பாஜக சமூக வலைதளங்களை எப்படிப் பயன்படுத்தியது என்று கவனப்படுத்தியிருக்கிறார்கள்.

தேர்தலுக்காக ஆர்எஸ்எஸ் உடன் இணைந்து மிகப் பெரும் களப் பணியாளர் படையை உருவாக்கியது பாஜக. மஹாராஷ்டிரத்தில் மட்டும் 92,000 வாக்குச்சாவடிக் கண்காணிப்பாளர்கள். எந்த ஒரு பணியாளரும் 100 வாக்காளருக்கு மேல் பொறுப்பாக இருக்க மாட்டார், அந்தளவுக்குப் பணியாளர்களும் இருந்தார்கள். 2018ல் அமித் ஷா, பூத் செயல்பாட்டு திட்டம் ஒன்றை உருவாக்கினார். இதில், ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ஒருவர் என்று 90,000 செல்பேசி பிரமுகர்கள் (cell phone pramukhs) நியமிக்கப்பட வேண்டும் என்பது இலக்கு.

இப்படி நிர்ணயிக்கப்படுபவர்கள் வெறும் செய்தி சேகரிப்பாளர்கள் மட்டும் இல்லை; செய்திகளைப் பரவலாக்குவோரும் ஆவர். அவர்களுக்கு செல்பேசி அளித்து வாட்ஸப் குழுமங்களை உருவாக்கி அதன் மூலம் பிரச்சாரத்தில் ஈடுபடுத்துவதே குறிக்கோள். ஐ.டி. விங்கின் தலைவர் அமித் மாளவியா 1.2 மில்லியன் களப் பணியாளர்கள் பாஜக அரசின் சாதனைகளைப் பரப்புரை செய்கிறார்கள் என்றார். ஒரு டிரோல் (troll) படையே உருவாக்கப்பட்டது என்கிறார்கள் கட்டுரை ஆசிரியர்கள்.

2019 தேர்தலுக்கு, 'ஐ.டி. படை வீரர்கள்' (I.T. Yoddhas) என்று ஒரு அணியே அமித் ஷா வழிமுறையில் உருவாக்கப்பட்டதாகவும், அவர்களுள் ஒருவரான தீபக் தாஸ் 1,114 வாட்ஸப் குழுமங்கள் நடத்தியதாகவும் சொல்கிறார். இவர் பாஜகவின் அதிகாரப்பூர்வ கட்சி உறுப்பினர் அல்ல, மாறாக, வாக்காளர் மீது தாக்கம் செலுத்தும் 10 மில்லியன் ஆதரவாளர்களுள் ஒருவர்.

**2019-ல் பாஜக 2,00,000 - 3,00,000 வாட்ஸப் குழுமங்கள் நடத்தியதாகவும், காங்கிரஸ் 80,000 - 1,00,000 வரை நடத்தியதாகவும் தெரிகிறது. ஃபேஸ்புக் பொய்ச் செய்தி பரப்பும் போலிக் கணக்குகளை முடக்கியபோது அவற்றில் முக்கியமான ஒன்றாகப் பேசப்பட்ட 'இண்டியா ஐ' (India Eye) பாஜக சார்பானது.**



ராகுல் காந்தியை இஸ்லாமியர் என்றும், காங்கிரஸ் அரசியலர்கள் பாகிஸ்தானின் கொடியை வைத்திருப்பதுபோலவும் பொய்ச் செய்திகள் பரப்பப்பட்டன.

2017 உத்தர பிரதேச தேர்தல் பிரச்சாரத்தின்போது அமித் ஷா ஒரு கூட்டத்தில், "பொய்யோ மெய்யோ நாம் ஒரு செய்தியை எல்லா மக்களிடத்திலும் கொண்டுசேர்க்கும் திறன் படைத்தவர்களாக இருக்க வேண்டும்" என்றார்.

பாஜகவின் தேர்தல் வியூகத்தில் மட்டுமல்ல, தேசத்தை அரசாளும் வியூகத்திலும் சமூக வலைத்தளத்துக்கு பெரும் பங்குண்டு. அதன் மூலம்தான் அதன் வெறுப்பரசியல், வாக்காளர்களுக்கு சென்றடைகிறது. இது இன்று நேற்று நடப்பதல்ல. சமூக வலைதளக் காலம் இதை மேலும் விஸ்தரித்திருக்கிறது.

**ஃபேஸ்புக்கும் அங்கி தாஸின் ராஜிநாமாவும்**

ஃபேஸ்புக்கை இந்திய வெறுப்பரசியலின் முக்கிய அங்கமாக பாஜக இருப்பதைப் பற்றி ஆகஸ்ட் 2020ல் 'வால்ஸ்ட்ரீட் ஜர்னல்' விரிவான கட்டுரையை வெளியிட்டது.

பாஜகவின் ராஜா சிங், தெலுங்கானாவைச் சேர்ந்தவர். ரோஹிங்யாக்களைப் பற்றியும், இந்திய முஸ்லிம்களைப் பற்றியும் மிக ஆட்சேபகரமான பதிவுகளை, வன்முறையைத் தூண்டும் விதமாகவே எழுதவும் பேசவும் செய்தார். அவரைப் போன்ற வன்முறைப் பேச்சுகள் பேசியவர்களை அமெரிக்காவில் ஃபேஸ்புக் தன் எல்லா தளங்களிலிருந்து நீக்கியிருந்தது. ராஜா சிங் மீது நடவடிக்கை எடுத்தால் ஆளும் பாஜகவைப் பகைத்துக்கொள்ள நேரிடுமோ என ஃபேஸ்புக் இந்தியாவின் முக்கிய பொறுப்பில் இருந்த அங்கி தாஸ் மறுத்துவிட்டார். ஃபேஸ்புக்கை அமெரிக்காவில் உபயோகிப்போர் 200 மில்லியனுக்கும் சற்று குறைவு, இந்தியாவில் பயனாளர்கள் எண்ணிக்கை 300 மில்லியனை நெருங்குகிறது.

அங்கிதாஸ் பாஜக சார்புடையவராக இயங்கினார் என்று ஃபேஸ்புக் நிறுவன ஊழியர்களே சொன்னார்கள். 2014ல் அங்கி தாஸ் நரேந்திர மோடியின் சமூக வலைத்தள பிரச்சாரத்தை முடுக்கிவிட உதவியதாகவும், அதன் பின் நிகழ்ந்தது ஊரறிந்தது என்றும் பதிவிட்டார்.

இன்னொரு பதிவில் அவர் 30 வருட களப் பணி இந்தியாவை சோஷலிஸத்தில் இருந்து விடுவித்தது என காங்கிரஸை தாக்கிப் பதிவிட்டார். தாஸ் இஸ்லாமியரை பற்றியும் கீழ்த் தரமான பதிவொன்றைப் பகிர்ந்திருந்தார்.

பாஜக நாடாளுமன்ற உறுப்பினர் அனந்தகுமார் ஹெக்டே, 'இந்திய முஸ்லிம்கள் கரோனா தொற்றைப் பரவச் செய்கின்றனர்' என்று சமூக வலைத்தளங்களில் எழுதினார். ட்விட்டர் அவரை வெளியேற்றியது. ஆனால் ஃபேஸ்புக்கோ 'வால்ஸ்ட்ரீட் ஜர்னல்' இக்கட்டுரை தொடர்பாக கேட்கும்வரை அவரை நீக்கவில்லை.

பிப்ரவரி 2020 கபில் மிஷ்ரா இஸ்லாமியரை மிரட்டிய பேச்சு ஒன்று ஃபேஸ்புக்கில் அவரால் வலையேற்றப்பட்ட சில மணி நேரங்களில் டில்லியில் கலவரம் வெடித்தது. 'கிரவுட்டான்கிள்' (CrowdTangle) எனும் ஃபேஸ்புக்கின் மென்பொருள் மூலம் ஆராய்ந்ததில் மிஷ்ராவின் அந்தப் பதிவுக்கு முன், ஒரு மாதத்தில் சில ஆயிரம் வலைதளப் பரிமாற்றமாக (interactions, probably refers to comments and not just rehshares) இருந்த அவர் பதிவுகள் 2.5 மில்லியனாக எகிறியதாம். வெறுப்புத் தீயாகப் பரவும் வகை கொண்டது. இக்கட்டுரைகளின் விளைவாக அங்கி தாஸ் அக்டோபரில் பதவி விலகினார்.

டிசம்பர் 2020ல் 'வால்ஸ்ட்ரீட் ஜர்னல்' இன்னொரு கட்டுரையில், 'ஃபேஸ்புக் சமூக வன்முறை உண்டாகக் கூடிய இடங்களில் மிக உச்சப்பட்ச ஆபத்து இருக்கும் தொகுப்பான முதலாவது அடுக்கில் (Tier -1)ல் இந்தியாவைக் கணக்கிட்டது' என்றது.

இந்த வருடம் மீண்டும் ஃபேஸ்புக்கின் செயல்பாடுகளை விமர்சித்து முன்பு கூறிய மூன்று பத்திரிக்கைகளும் கட்டுரைகளை வெளியிட்டன. இதில் இந்தியாவுக்கு என்றே பிரத்யேகக் கட்டுரைகள் வெளிவந்தன.

**ஃபேஸ்புக்கின் கட்டமைப்பு போதாமை**

ஒரு முக்கியமான புரிதலை சமீபத்தியக் கட்டுரைகள் உணர்த்தின. ஃபேஸ்புக் உலகில் எல்லா நாடுகளில் இருந்தாலும், பொய்ச் செய்திகளைக் கண்டறிவதற்கான அதன் மொத்த நிதி ஒதுக்கீட்டில் 87% அமெரிக்காவுக்கும், வெறும் 13% மட்டுமே அமெரிக்கா தவிர்த்த மொத்த உலகுக்கும் செலவாகிறது.

இந்தியாவில் ஹிந்தியிலும் வங்க மொழியிலும் வெறுப்பு மொழிஸ்யாடல்களைக் கண்டறிய மென்பொருளில் முதலீடுசெய்ததாக ஃபேஸ்புக் சொல்கிறது. சமீபத்திய தேர்தலுக்குப் பின் வங்கத்தில் 40% பதிவுகள் பொய்கள் என்று ஃபேஸ்புக் கண்டறிந்தது. ஒரு பொய்ப் பெயர் (Fake ID) பதிவாளரின் பதிவு 30 மில்லியன் லைக் போன்றவற்றை அள்ளியதாம்.

தமிழில் பொய்ச் செய்திகளைக் கண்டறியவும், வன்மம் கொண்ட பதிவுகளைக் கண்டறிந்து நீக்கவும், ஃபேஸ்புக் தமிழ் மொழியில் முதலீடு செய்யவில்லை என்று தெரிகிறது. தமிழில் பிராமணர்களுக்கு எதிராகவும், தலித்துகளுக்கு எதிராகவும், சிறுபான்மையினருக்கு எதிராகவும் மிக வன்மத்துடன் எழுதப்பட்ட பதிவுகள் சாதாரணமாக அன்றாடம் தென்படும்.

யாரோ யாரைப் பற்றியோ வன்மத்துடன் எழுதுகிறார்கள். மிகவும் அருவருக்கத்தக்க சொல்லாடல்கள் மிகச் சாதாரணமாகத் தெறிக்கும். மேலும் ரிப்போர்ட் அடிப்பது என்கிற புகார் சொல்லுதலை வைத்து பதிவர்களை, அவர் எழுதியது வன்மமோ இல்லையோ பிடிக்காதவர்கள், முடக்குவதும் அடிக்கடி நிகழும் ஒன்று. ஆனால் அதை யெல்லாம் மட்டுப்படுத்தும் கட்டமைப்பு ஃபேஸ்புக்கிடம் இல்லை.

**இந்திய வெறுப்பரசியலைக் கண்டு அஞ்சிய ஃபேஸ்புக் ஆய்வாளர்கள்**

முன்பு குறிப்பிட்டதைப் போல், இவ்வருடம் ஃபேஸ்புக்கின் செயல்பாடுகளை அம்பலப்படுத்திய கட்டுரைகள் வெளிவர ஆரம்பித்ததுமே மூன்று முக்கிய நாளிதழ்கள் ஃபேஸ்புக்கினால் இந்தியாவில் பெருகும் வெறுப்பரசியலைப் பற்றி பிரத்யேக கட்டுரைகள் வெளியிட்டன. உலகின் மிகப் பெரிய ஜனநாயகத்தில் நிகழும் அரசியலும் அதில் சமூக வலைத்தளங்களின் பங்கு பற்றியும் உலக அரங்கில் இருக்கும் முக்கியத்துவமே அக்கட்டுரைகளுக்கு காரணம்.

இந்தியாவில் ஃபேஸ்புக் இயங்கும் முறையையும் அங்கிருக்கும் உரையாடல்களையும் ஆராய முனைந்து, ஃபேஸ்புக்கின் ஊழியர் ஒருவர் ஒரு பொய் கணக்கைத் தொடங்கினார்; ஃபேஸ்புக்கின் வினை செய்யும் பரிந்துரைக்கும் குழுமங்களில் இணைவது, பரிந்துரைத்த காணொளிகளைக் காண்பது என்று ஒரு சாதாரண பயணாளியாக அவர் இயங்க ஆரம்பித்தார்.

பிறகு மளமளவென்று வன்முறைப் பதிவுகள் வரத் தொடங்கின, பொய்ச் செய்திகள் தொடர்ந்தன. மூன்றே வாரத்தில் தன் வாழ்நாளில் பார்த்த மொத்த வன்முறைக் காட்சிகளையும்விட அதிகமாக பார்க்க நேரிட்டதாம் அந்தப் பரிசோதனை பதிவருக்கு. பாகிஸ்தானுக்கு எதிராக, இஸ்லாமியரை மிகக் கீழ்த்தரமாக வசை பாடி, மோதியை துதிபாடி, அதீத வன்முறை பதிவுகள் வர தொடங்கின.

ஃபேஸ்புக்கின் உள்ளேயே இந்தியாவில் ஆளும் கட்சியை சேர்ந்தவர்களுக்குத் தொடர்ந்து வெறுப்புப் பதிவுகளுக்கான தண்டனைகளிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதாக வெளிப்படையாக ஓர் அறிக்கை

>> தொடர்ச்சி 11ம் பக்கம்

# சங்கே முழங்கு!





2022 ஜனவரி 7, 8, 9, 10

## ஹைதராபாத்தில் இளைஞர் பெருமன்ற அகில இந்திய மாநாடு

### தேசியக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

**அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தேசியக்குழுக் கூட்டம் டிசம்பர் 8, 9 தேதிகளில் சேலத்தில் நடைபெற்றது.**

அகில இந்திய தலைவர் ஆப்தாப் ஆலம் கான் கொடியேற்றி கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். பொதுச் செயலாளர் இரா.திருமலை வேலை அறிக்கை மற்றும் எதிர்கால கடமைகள் குறித்தும் உரையாற்றினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சேலம் மாவட்டசெயலாளர் ஏ.மோகன் வாழ்த்துரை வழங்கினார்.

கூட்டத்தில் தமிழ்நாடு, கேரளா, பாண்டிச்சேரி, கர் நாடகா, பீகார், டெல்லி, அரியானா, மத்தியபிரதேசம், ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களிலிருந்து தேசியக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வருகிற ஜனவரி 7, 8, 9, 10ஆகிய தேதிகளில் ஹைதராபாத்தில் அகில இந்திய மாநாட்டை சிறப்பாக நடத்துவதெனவும் அதற்கான பிரதிநிதிகள் எண்ணிக்கையும் தேர்வு செய்யப்பட்டது.

ஜனவரி 7அன்று நடைபெறும் பேரணியில் லட்சக் கணக்கான இளைஞர்களை அணிதிரட்டுவது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

தேசியக்குழு கூட்டத்தையொட்டி டிசம்பர் 8அன்று மாலை வேலையின்மை எதிர்ப்பு கருத்தரங்கம் சேலம் மாவட்டத் தலைவர் கே.பி.வி.ராஜேஷ் தலைமையில் நடை பெற்றது. மாவட்டத் துணைச் செயலாளர் கே.கிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார்.

கருத்தரங்கில் அகில இந்திய தலைவர் ஆப்தாப் ஆலம் கான் பொதுச்செயலாளர் இரா.திருமலை மாநிலசெயலாளர் க.பாரதி, மாநிலத்தலைவர் த.கு.வெங்கடேசன் மற்றும் அனைத்து மாநில நிர்வாகிகளும் கருத்துரையாற்றினர்.

மாவட்டத்துணைத்தலைவர் ஜி.வெற்றிவேல் நன்றி யுரையாற்றினார்.

இக்கூட்டத்தில் BNEGA பநேகா .... பகத்சிங் தேசிய உறுதியளிப்பு சட்டத்தை உடனே நிறைவேற்று...

இந்தியாவில் 12 கோடிபேர் வேலையில்லாமல் இருக் கிறார்கள். 8 கோடி பேர் அரைகுறை வேலையுடன் இருக் கிறார்கள்.

வேலையின்மை தான் இந்தியாவின் மிகப்பெரிய பிரச்சி னையாக உள்ளது. வேலையின்மை பிரச்சினைக்கு தீர்வு காண ஒன்றிய அரசு எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. இந்தியாவில் 45லட்சம் காலிப்பணியிடங்கள் நிரப்பப் படாமல் உள்ளன. வேலையின்மை பிரச்சினையால் இளை ஞர்களின் வாழ்வாதாரமே கேள்விக்குரியாகி உள்ளது. அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் வகையில் திட்டங்களை வகுக்க வேண்டும்.

வேலை உரிமையை அடிப்படை உரிமையாக அங்கீ கரிக்க வேண்டும். அவர்களுக்கு வேலை கிடைக்கிற வரையில் வேலையில்லா கால நிவாரணம் ரூ.15,000 ஆயிரம் வழங்கப்படவேண்டும் ..

இவற்றை நிறைவேற்றுகிற வகையில் பகத்சிங் தேசிய வேலைஉறுதியளிப்பு சட்டத்தை (BNEGA) நிறைவேற்ற வேண்டும். இதற்காக அனைத்திந்திய இளைஞர் பெரு மன்றம் எதிர்காலத்தில் ஜனநாயக இளைஞர் மாணவர் அமைப்புகளைத் திரட்டி தொடர்ந்து போராடும்.

மேலும் தனியார் துறையில் இடஒதுக்கீட்டை அமுல் படுத்தவேண்டும்.. நீட்தேர்விலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு அளிக்கவேண்டும் என தமிழ்நாடு சட்டமன்றத் தில் நிறைவேற்றப்பட்ட மசோதாவுக்கு குடியரசு தலை வர் ஒப்புதல் வழங்க வேண்டும் .... கடந்த ஒரு ஆண்டு காலமாக தொடர்ந்து போராடி வேளாண் சட்டங்களை திரும்பபெற வைத்த விவசாயிகள் போராட்ட வெற்றிக்கு வாழ்த்துக்களை தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற் றப்பட்டன.



பேராசிரியர் மு.நாகநாதன்

# காவியும் - சிவப்பும்

**பிரதமர் மோடி உத்தரபிரதேச மாநிலத்தில் சில நலத் திட்டங்களைத் தொடங்கித் தேர்தல் பரப்புரையையும் ஆற்றி உள்ளார்.**

தமிழ்நாடு உட்பட 6 மாநிலங்களில் ஒன்றிய அரசு எய்ம்ஸ் மருத்துவமனைகள் தொடங்குவதாக அறிவித்துப் பல ஆண்டுகளாகிவிட்டன.

ஆனால், உ.பி மாநிலத்தில் மட்டும் எய்ம்ஸ் மருத்துவமனை விரைந்து கட்டிடப் பணிகள் விரைந்து முடிக்கப்பட்டன. மருத்துவமனையும் தொடங்கப்பட்டுள்ளது. வரவேற்கத் தகுந்ததுதான். ஆனால், மற்ற மாநிலங்களில் ஏன் இது போன்று பணிகளை மேற்கொள்ளவில்லை என்ற வினா எழுகிறது அல்லவா!

எல்லாம் 2022 ஆம் ஆண்டில் நடைபெற உள்ள உ.பி தேர்தல் தோல்வி பயம் என்பதை பிரதமரின் உரை சொல்லாமல் சொல்லுகிறது. உபிக்குச் சென்று பாஜக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இரண்டாவது முறையாக எச்சரிக்கை விடுத்துள்ளார். “நாடாளுமன்றக் கூட்டங்களில் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்.” “நீங்கள் உங்களை மாற்றிக் கொள் ளுங்கள்.” “அப்படிச் செய்யாவிட்டால் சரியான நேரத்தில் மாற்றங்கள் ஏற்படும்.” அரசியல் பாடத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவரல்லவா?

யார் இவருக்கு அரசியல் பாடத்தை நடத்தியவர்கள் ?

இவருடன் படித்த சக மாணவர்கள் யார்!

என்பதெல்லாம் இன்று வரை பலர் முயன்றும் தெரிந்து கொள்ள முடியாத பல கோடி ரூபாய் மதிப்புமிக்க, விடை காண முடியாத கேள்வியாகும். ஆனால் இவர் பாஜக சங்கிகளுக்குப் பாடம் சொல்லித் தரட்டும். எச்சரிக்கை விடட்டும்.

ஆனால் முன்னாள் முதல்வர் அகிலேஷுக்குக் கூடும் மக்கள் கூட்டம் இவரைப் பெருமளவில் பாதித்துள்ளது என்பதையே இவரின் உரை வெளிப்படுத்தியுள்ளது.

“சிவப்பு வண்ணத் தொப்பிகள் எச்சரிக்கை”

“சமாஜ்வாடி கட்சியின் தொண்டர்கள் அணிந்துள்ள சிவப்பு தொப்பிகள் உபி மாநிலத்திற்குச் சிவப்பு எச்சரிக்கையாம்! அபாயகரமான மணி ஒலிப்பாம்!”

என்ற மோடியின் உரை ஊடகங்களில் வெளி வந்துள்ள அதே நேரத்தில் மோடி மறைத்ததை, மறந்ததைப் புள்ளிவிவரங்கள் மற்றொரு பக்கத்தில் ஊடகங்களில் வெளியிட்டு வருகின்றன.

தேசிய சுகாதார ஆய்வு அறிக்கை 5 இல் (2019–21) புள்ளிவிவரங்கள் அபாய மணி ஒலியை ஓங்கி ஒலிக்கின்றன.

என்ன அந்தப் புள்ளிவிவரங்கள்? இந்தியாவில் பிறந்து வளரும் குழந்தைகளில் ஆறு மாதம் தொடங்கி 59 மாதங்கள் வயதை எட்டும் குழந்தைகள் இரத்த சோகையால் பாதிக் கப்பட்டுள்ளனர். எந்த மாநிலத்தில் ரத்த சோகையால் பாதிக்கப்பட்ட குழந் தைகள் அதிகம் தெரியுமா?

மோடி முதல்வராக இருந்த இன்றும் காவி ஆளும் மாநிலமான குஜராத்தில் ஆறு மாதங்கள் தொடங்கி 59 மாதங்கள் வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் இரத்த சோகை அளவு 79.6 விழுக்காடாகும். எந்த மாநிலத்தில் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டு, குறைவான எண்ணிக்கையில் உள்ளனர் தெரியுமா?

சிவப்பு ஆளும் கேரளாவில் 39.4 விழுக்காடு அளவில் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அடுத்துக் குறைந்த பாதிப்பிற்கு உள்ளான மாநிலம் தமிழ்நாடு. விழுக்காடு 57.4.

கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் ஆட்சி செய்த காவியின் அடிமை எடப்பாடி குழந்தைகள் நலனில் போதிய கவனம் செலுத்தாமல் இருந்தது இந்தச் சரிவிற்கு ஒரு காரணம். காஷ்மீரிலிருந்து லடாக் பகுதியைப் பிரித்த பாஜக ஆளுநர் ஆட்சியில் 92.5 விழுக்காடு லடாக் குழந்தைகள் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது மட்டுமா? வறுமை, ஏற்றத்தாழ்வு, வேலையின்மை பெருமளவில் இந்தியாவில் பெருகி வருகின்றன. இன்றைய ஆங்கில இந்து நாளிதழில் ஜிண்டால் பல்கலைக் கழகத்தில் சுகாதார பொருளாதார ஆய்வாளர் இந்தரனில் (INDRANIL) அவர்கள். நாட்டின் ஒட்டு மொத்த உற்பத்தியில் பொது சுகாதாரத் துறைக்கு, பொதுச் செலவைக் குறைந்த அளவில் செலவிடும் நாடு உலகிலேயே இந்தியா தான் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்றிய அரசு பல அறிவிப்புகளை வெளியிட்டாலும், நாட்டின் ஒட்டு மொத்த உற்பத்தியில் பொது சுகாதாரத்துறைக்கு 1% முதல் 1.2% மட்டுமே ஒன்றிய அரசு செலவிடுகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார். சிவப்பு வண்ணம் கோலோச்சிய மண்ணில், கோலோச்சும் மண்ணில் எல்லோருக்கும் கல்வி, சுகாதாரம் இலவசமாக வழங்கப்படுகிறது.

இதனால் தான் கருப்பும், சிவப்பும் இணைந்த இந்தத் தமிழ் மண்ணில் சட்டமன்றத் தேர்தலில் சரியான பாடத்தைத் மக்கள் தந்தனர். மக்களை இன, மத மொழி அடிப்படையில் பிரித்து ஏழைகள், தொழிலாளர்கள், நடுத்தரப் பிரிவினரின் வருமானத்தை, வாழ்வைச் சிதைத்து வருகின்ற சனாதன சர்வாதிகார கொடுங் கோல் ஆட்சியின் வடிவம் தான் காவி என்பதை மக்கள் உணர்ந்து வருகின்றனர்.

விழித்துக் கொண்ட வேளாண் குடிமக்கள் கற்பித்தனர் சரியான பாடம்!

இருண்ட கண்கள் பார்க்கும் பார்வையில் மிரட்சி!

வருணாசிரமம் எனும் சூழ்ச்சி வீழப்போகிறதே என்ற அச்சம்! வண்ணங்கள் எண்ணங்களில் ஏற்படுத்திய கலக்கம் தடுமாற்ற உரையாக உ.பியில் வெளி வருகிறது.

சிவப்பு புரட்சியின் வண்ணம் மட்டும் அல்ல உலகையே மாற்றிய புரட்சி வடிவம்!! இது வரலாறு சுட்டும் பாடம்.

காவி சாயும்!

சிவப்பு வெல்லும்!

தொடர்புக்கு: **9444283338**

# தோழர்.என்.ராமகிருஷ்ணன் மறைவு

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்




கம்யூனிஸ்டு இயக்கத்தின் மூத்த முன்னோடி தோழர் என்.ராமகிருஷ்ணன் டிச.12 அன்று காலமானார் என்ற துயரச் செய்தி ஆழ்ந்த வேதனையளிக்கிறது.

மூத்த தலைவர், தோழர் என்.சங்கரய்யாவின் சகோதரரான தோழர் என்.ராமகிருஷ்ணன் சிறுவயது முதல் இடதுசாரி அரசியலை முன்னெடுத்தவர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் (மார்க்சிஸ்ட்) நாடாளுமன்றக் கட்சி அலுவலகச் செயலாளராக பணியாற்றியவர். கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வரலாறு பற்றியும், இயக்கத் தோழர்களின் வரலாற்றையும் எழுதுவதில் முழு ஈடுபாடு காட்டியவர். இவரது தமிழ், ஆங்கில நூல்கள் கம்யூனிஸ்ட் இயக்க வரலாறு அறிந்து கொள்ள பெரிதும் உதவும். இவைகள் கால காலத்திற்கும் வரலாற்று ஆவணங்களாக திகழும் என்பதில் சந்தேகம் இல்லை. தோழர் என்.ராமகிருஷ்ணன் படைப்புகளும், ஆய்வு முயற்சிகளும் பல இளம் படைப்பாளிகளுக்கு வழிகாட்டி உதவும். அவரது மறைவு இயக்க வரலாற்றை ஆவணப்படுத்தும் துறைக்கு பேரிழப்பாகும்.

தோழர் என். ராமகிருஷ்ணன் மறைவுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த அஞ்சலி தெரிவிப்பதுடன், அவரை பிரிந்து வாடும் தோழர் என்.சங்கரைய்யா உள்ளிட்ட அவரது குடும்பத்தாருக்கும், மார்க்சிஸ்ட் கட்சி தோழர்களுக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



நா.பெரியசாமி



# வெற்

**கடந்த ஓராண்டுக்கும் மேலாக 2020 நவம்பர் 26 முதல் 2021 நவம்பர் 11 வரை தலைநகர் டெல்லியை சுற்றிலும் நீடித்து வந்த விவசாயிகளின் அறவழிப் போராட்டம் மாபெரும் வெற்றி பெற்றுள்ளது. விவசாயிகள் வெற்றி முழக்கத்துடன் 11.12.2021 அன்று அவரவர் வீடு திரும்புகிறார்கள்.**

விவசாயிகள் தொடங்கிய போராட்டத்தை கூர்ந்து கவனித்து வந்த உலக நாடுகள், இந்திய உழவர்கள் 'இமாலய வெற்றி' பெற்றிருப்பதாக பெருமை பொங்க வாழ்த்துக் கூறி பாராட்டி வருகின்றன.

நாடு முழுவதும் உள்ள ஜனநாயக சக்திகளும், சமூக செயல்பாட்டாளர்களும், குடிமை சமூக உரிமை ஆர்வலர்களும் ஆனந்த கூத்தாடி வெற்றி விழா எடுத்து வருகின்றனர்.

டெல்லி சலோ இயக்கத்திற்கு அழைப்பு விடுத்த சம்யுக்தா கிசான் மோர்ச்சாவும் (எஸ்கேஎம்) இதன் தாய் அமைப்பான அகில இந்திய விவசாயிகள் போராட்ட ஒருங்கிணைப்புக் குழுவும் (ஏஐகேஎஸ்சிசி) இந்த வரலாற்று சிறப்புப் பெற்ற போராட்டத்தை வழிநடத்தி வந்தன. இந்த அமைப்புகளில் நாடு முழுவதும் செயல்பட்டு வரும் 500 க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர் சங்கங்களும் இணைந்து, ஒருங்கிணைந்த அமைப்பாக செயல்பட்டு வருகின்றன.

1936 ஏப்ரல் 11 ஆம் தேதி லக்னோ நகரில் சகஜானந்த சுவாமிகள் தலைமையில் உருவான அகில இந்திய விவசாயிகள் சங்கம் தொடங்கி அண்மையில் உருவான அமைப்புகள் வரை அனைத்தும் சம உரிமை பெற்ற அமைப்புகளாக, ஒரு குடையின் கீழ் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றன என்பது மிக முக்கியமான செய்தியாகும்.

**எங்கிருந்து தொடங்கியது ?**

மத்திய பிரதேசத்தில் உள்ள மான்ட்சவுர் மற்றும் முல்டாய் ஆகிய இரு இடங்களும் விவசாயிகள் அடர்த்தியாக வாழும் பகுதிகளாகும். இங்கு விவசாயம் தான் அடிப்படையான ஒரே தொழிலாகும். இதனையொட்டி தான் அனைவருக்கும் வாழ்வாதாரம் அமைந்திருக்கிறது.

தாப்தி நதிநீர் ஆதாரம் இருப்பினும் மான்ட்சவுர் மற்றும் முல்டாய் பகுதிகள் வறட்சி மற்றும் புயல் மழை என இயற்கை பேரிடர்களை மாறி, மாறி எதிர்கொள்ளும் பகுதிகளாகும்.

1997 ஆம் ஆண்டின் இறுதியில் கடுமையான இயற்கை பேரிடரைச் சந்தித்த விவசாயிகள் வாழ்க்கை நிலைகுலைந்து போனது. அரசின் ஆதரவில்லாமல் மறுவாழ்வுக்கு கதியேதும் இல்லை என்ற இக்கட்டான நிலை ஏற்பட்டது

**இந்த நிலையில்தான் பயிர் சாகுபடி செய்து பெரும் சேதாரத் துக்கு ஆளாகியுள்ள விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். சாகுபடி செலவுகளுக்காக பெறப்பட்ட கடன்களை ரத்து செய்ய வேண்டும். பயிர் காப்பீட்டுத் தொகை முழுமையாக வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து விவசாயிகள் போராட்டத்தை முன்னெடுத்து வந்தனர்.**

விவசாயிகள் போராட்ட முன்னணி (சிசான் சங்கராஷ் மோர்ச்சா) அமைந்தது. இதன் அமைப்பாளராக முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் சுனிலம் செயலாற்றினர்.

போராடி வந்த விவசாயிகள் முன்னணி 1997 டிசம்பர் 25 முதல் முல்டாய் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு தொடர் போராட்டத்தை தொடங்கினர்.

இந்தப் போராட்டம் தொடங்கிய காலத்தில் மத்திய பிரதேசம் மாநிலத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தது. இந்த அரசுக்கு திக்விஜய் சிங் தலைமை தாங்கி முதலமைச்சர் பொறுப்பில் இருந்தார்.

திரு திக்விஜய் சிங் முற்போக்கு சிந்தனையாளர், சமூகநீதி போராட்டத்தில் ஆர்வம் மிக்கவர். மதச்சார்பற்ற கொள்கையாளர் . எல்லாம் சரி ஆனால் அவர், தனியார் மயம், தாராளமயம் உலகமயம் என்ற புதிய பொருளாதாரக் கொள்கையின் சேவகர். இதன் காரணமாக போராடி வந்த விவசாயிகளை அவர் அழைத்துப் பேசி தீர்வு காணும் அணுகுமுறையை கடைப் பிடிக்கவில்லை.

மறாக போராட்டக் களத்தில் விவசாயிகளால் அமைக்கப் பட்ட பந்தல்கள் காவல்துறையினரை கொண்டு பிரித்து எறியப்பட்டது. ஆனாலும் திறந்த வெளியில் விவசாயிகள் போராட்டம் உறுதியுடன் தொடர்ந்தது .

ஆத்திரமடைந்த திக்விஜய் சிங் அரசு 1998 ஜனவரி 12 ஆம் தேதி நிராயுதபாணிகளாக போராடி வந்த விவசாயிகள் மீது காவல்துறை படையை அனுப்பி துப்பாக்கி சூடு நடத்தியது இதில் 19 விவசாயிகள் உட்பட 24 பேர் கொல்லப்பட்டனர் இந்தப் போராட்டத்தை வழிநடத்திய முன்னாள் சட்டப்பேரவை உறுப் பினர் சுனிலம் மீது 66 வழக்குகளை பதிவு செய்து, நீண்ட விசாரணை நடத்தி ஆயுள் தண்டனைக்கு ஆளாக்கப்படார்.

இந்தக் கொடூர அடக்குறை செயல் குறித்து அப்போதைய எதிர்கட்சியான 'பாஜக மனித உரிமை, ஜனநாயக உரிமை, விவசாயிகள் துயரம் என முழங்கியது. அப்போது ஒன்றிய அமைச்சராக இருந்த திரு வெங்கையா நாயுடு (தற்போது துணைக் குடியரசுத் தலைவர்) "சுதந்திர நாட்டில் நடந்த இந்தப் படுகொலை. அடிமை இந்தியாவில் நடந்த "ஜாலியன் வாலா பாக் படுகொலையை விடக் கொடூரமானது" என்று காட்டமாக விமர்சித்தார்.

காங்கிரசும், திக்விஜய் சிங்கும் விவசாயிகள் போராடத்தை ஒடுக்கிய அடக்குமுறை அரசியல் பாஜகவிற்கு ஆதாயம் தரும் அரசியலாக மாறியது. இதனைத் தொடர்ந்து பாஜக. மத்திய பிரதேசம் மாநில ஆட்சியை கைப்பற்றி தொடர்ந்தது. சிவராஜ் சிங் சௌகான் முதலமைச்சர் பொறுப்பில் இருந்தார்.

கடந்த 2017 ஜூன் 6 ஆம் தேதி மான்ட்சவுர் என்ற ஊரில் புயல் மழை, பெரு வெள்ளத்தால் பலத்த சேதரமடைந்த விவசாயிகள் நிவாரணம் கேட்டுப் போராடி வந்தனர்.

பயிர்களை இழந்து நிற்கும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ 5000 இழப்பீடு வழங்க வேண்டும். விவசாயிகள் பெற்றுள்ள கடன்களை ரத்து செய்ய வேண்டும். வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்பது தான் கோரிக்கைகள்.

இந்தக் கோரிக்கைகளை 1997 98 ஆண்டுகளில் ஆதரித்து பேசிய, விவசாயிகள் படும் துயத்தை கண்ணீர் மல்க எடுத்த வைத்து, காங்கிரஸ் கட்சியின் கார்ப்பரேட் மோகத்தை

## 65 குடும்பங்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்


திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஒன்றியம், கொத்தமங்கலம் ஊராட்சியில் 65 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல்வேறு கட்சிகளிலிருந்து விலகி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்.

விவசாய சங்கத்தின் முன்னாள் தலைவர் மறைந்த தனிக் கொடி அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவுதினம் கொத்தமங் கலத்தில் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக்குழு உறுப்பினர் கோ.பழனிச்சாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., அவர்கள் தனிக்கொடி படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை



செலுத்தினார். தொடர்நிகழ்ச்சியாக பல்வேறு கட்சியிலிருந்து விலகி 150 க்கும் மேற்பட்ட தோழர்கள் கட்சியில் இணைந்தனர். அனைவருக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய குழு உறுப்பினர் கோ.பழனிச்சாமி, கே.உலகநாதன் மாநிலக்குழு, அ. பாஸ்கர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் கே. பாலு ஒன்றிய செயலாளர் ஆகியோர் செந்துண்டு அணிவித்து சிறப்பு செய்தனர்.

நிகழ்ச்சியினை கொத்தமங்கலம் கிளையின் செயலாளர் எம்.சரவணன் தலைமையேற்று நடத்தினார். நிகழ்ச்சியில் கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் கே. ராஜா, மாவட்ட குழு உறுப்பினர் சு.தமிழ்ச்செல்வி, ஒன்றிய பொருளாளர் எம். மகாலிங்கம், மாவட்ட குழு உறுப்பினர் கோ. சரவணன், ஒன்றிய நிர்வாக குழு உறுப்பினர் அ. குமரேசன் மற்றும் 200க்கும் மேற்பட்ட தோழர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



**முன்னோக்கிய வளர்ச்சியில் தற்காலிக பின்னடைவுகள் எத்தனையோ ஏற்பட்டாலும், இறுதியில் ஒரு முன்னோக்கிய முற்போக்கான வளர்ச்சி ஏற்படவே செய்யும்.**
**– ஏங்கல்ஸ்**

# றி முழக்கம் எழுப்புவோம்...



## முடிவான போர்களம் நோக்கி அணிவகுப்போம்...

தீப் பிழம்பு வார்த்தைகளில் விமர்சித்த பாஜகவும், அதன் பரிவாரங் களும் இன்று ஆட்சியில் இருப்பதால் சுமூக தீர்வு எளிதில் கிடைக்கும் என விவசாயிகள் நம்பிக்கையோடு போராட்டத்தை தொடர்ந்து நடத்தி வந்தனர். ஆனால். நிதி மூலதன சக்திகளும், கார்ப்பரேட் சக்திகளும் தனது லாப வேட்டை தடையின்றி நடைபெற வேண்டும் என்பதில் குறியாக இருந்தன.

மக்கள் செல்வாக்கை இழந்து வரும் காங்கிரஸ் கட்சியை ஆதரித்து வந்த கரங்களை சோப்புப் போட்டு கழுவிக் கொண் டனர். புதிய முகவரை அமர்த்திக் கொள்வதில் முனைப்புக் காட்டின.

**குஜராத்தில் 56 இஞ்ச் மார்பு விரித்து, கண்மூடித்தனமான குரூரத்தை அரங்கேற்றும், வீராதி வீரர் பொருத்தமானவர் என தேர்வு செய்து,அவரது ரத்த வாடை வீசும் முகத்துக்கு அரிதாரம் பூசி ஜனநாயக வாதியாக வேடம் போட்டனர் . நாவினிக்கப் பேசும் நவீன சர்வாதிகாரப் பண்பாளரை அடையாளம் கண் டனர். அவரின் நெஞ்சுக்கு நெருக்கமான நட்பாக. அவரது மனசாட்சியாக செயல்படும் மற்றொருவர் இருப்பதையும் கண்டறிந்து, நாக்பூர் குருபீடத்தில் காணிக்கை செலுத்தி “விகாஸ் புருஷ்” வளர்ச்சி நாயகன் கட்டமைக்கப்பட்டார். அவரை 2014 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் அதிகாரத்தில் அமர்த்தி, கார்ப்பரேட் சக்திகள் லாப வேட்டையை உறுதி செய்து கொண்டன.**

இந்தச் சூழலில் தான் 2017 ஜூன் 6 ஆம் தேதி மத்திய பிரதேச மாநில பாஜக அரசு, சிவராஜ் சிங் செளகான் அரசு மான்ட் சவுரில் போராடி வந்த விவசாயிகள் மீது துப்பாக்கி சூடு நடத்தி 6 பேரை படுகொலை செய்தது.

விவசாயிகள் 1997 ஆம் ஆண்டும் தொடர்ந்து 2017 ஆம் ஆண்டும் முன்வைத்த கோரிக்கைகளில் எந்தப் பெரிய மாறுதலும் இல்லை. அதே கோரிக்கைகள் தான், போரடிய விவசாயிகள் எதிர்கொண்ட காவல்துறை அடக்குமுறையிலும் மாற்றம் இல்லை. உயிரிழந்ததும், படுகாயம் அடைந்ததும் விவசாயிகள் தான். இதில். ஒரே ஒரு மாற்றம்தான் காண முடிந்தது. முன்னர் 1998 ஜனவரில் துப்பாக்கி சூடு நடத்த உத்தரவிட்டது காங்கிரஸ் கட்சியின் திக்விஜய் சிங்; பின்னர் 2017 ஜூன் மாதம் துப்பாக்கி சூடு நடத்த உத்தரவிட்டது பாஜகவின் முதலமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் அவ்வளவுதான்.

இந்த இரு நிகழ்வுகளும் விவசாயிகள் கண்களை திறக்கச் செய்தது. இனி நமக்குள் கோட்பாடு ரீதியான, கொள்கை சார்ந்த ஒற்றுமையும், ஒருங்கிணைப்பும் அவசியம் என்பதை தெளிவுற உணர்ந்தனர். அதன் விளைவுதான் அகில இந்திய விவசாயிகள் போராட்ட ஒருங்கிணைப்புக் குழு தோன்றியது.

ஆம். முல்டாயிலும், மான்ட்சவுரிலும் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், ஒன்றிய, மாநில அரசுகளின் அடக்குமுறைகளை எதிர் கொண்டு சிந்திய ரத்தத்தில் உதித் தெழுந்தது ஏஐகேஎஸ்சிசி என்கிற புதிய அமைப்பு . இந்த அமைப்பின் தொடர் போராட்டம் நடந்து கொண்டிருந்த நேரத்தில் தான் மோடியின் பாஜக ஒன்றிய அரசு , விவசாயிகளை அழித் தொழித்து , விவசாய நிலங்களை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு கை மாற்றி விடும். வஞ்சகம் நிறைந்த மூன்று வேளாண் வணிக சட்டங்களை 2020 ஜூன் 5 ஆம் தேதி குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று அவரசர சட்டங்களாக அறிவித்தது.

இந்த அவசர சட்டங்களுக்கு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஒப்புதல் பெற்று, புதிய சட்டங்களாக நிறைவேற்றும் போது தான் நாடாளுமன்ற நெறிமுறைகள் அலட்சியப் படுத்தப்பட்டன. எதிர்கட்சிகளின் உரிமைகள் நிராகரிக்கப்பட்டது.

ஒன்றிய அரசின் விவசாயிகள் விரோத, கார்ப்பரேட் ஆதரவு வேளாண் வணிக சட்டங்களால் பெரும் தாக்குதலை சந்திக்கும் பஞ்சாப், அரியானா மற்றும் உத்தரப் பிரதேச மாநில விவசாயிகள் ஆயிரக்கணக்கில் ஆர்த்தெழுந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தை தனிக் கவனம் செலுத்தி வழிநடத்த சக்யுக்தா கிசான் மோர்ச்சா என்ற புதிய போராட்டக்குழு அமைக்கப்பட்டது.

இந்த அவசர சட்டங்கள் வெளியான நேரத்தில் 09.06.2020 ஈரோடு நகரில், நாடாளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி தலைமையில் கூடிய விவசாயிகள். விவசாயத் தொழிலாளர்கள் விவசாயிகள் விரோத, வேளாண் வணிக அவரச சட்டங்களை பாஜக ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தியது.

இதே கூட்டத்தில் ஏப்ரல் 17.2020 ஆம் தேதி பாஜக ஒன்றிய அரசின் மின்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள மின்சார சட்டத் திருத்த மசோதா 2020 கைவிடப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள், தொழிலாளர்கள், மின் நுகர்வோர் என அனைவரிடமும் 2020 ஜூன் 20 முதல் கையெழுத்து இயக்கம் நடத்தி, ஒன்றிய அரசுக்கும், பிரதமருக்கும் அனுப்பி வைப்பது என்று அறிவிக்கப்பட்டது.

அப்போது தமிழ்நாட்டில் “விவசாயி மகன்” எடப்பாடி கே.பழனிசாமி முதலமைச்சர். அவரது அரசு விவசாயிகள் பக்கம் நிற்கவில்லை. கார்ப்பரேட் ஆதரவு நிலை மேற்கொண்டது.

அஇஅதிமுக அரசின் காவல்துறையினர் கையெழுத்து இயக்கம் நடத்துவதையும் அனுமதிக்கவில்லை. அதன் அடக்குமுறைகளையும், மிரட்டல்கள், அச்சுறுத்தல்களையும் மீறித்தான் 2020 ஜூன் 20 ஆம் தேதி விவசாயிகள் இயக்கத்தின் முன்னோடித் தலைவர் கே.சின்னுசாமி கவுண்டர் நினைவிடத்தில் கையெழுத்து இயக்கம் வெற்றிகரமாக தொடங்கப்பட்டது.

அன்று தொடங்கிய போராட்டப் பயணம் இமாலய வெற்றி பெற்று 11.12.2021 விழாக் கொண்டாடி நிறைவு பெறுகிறது.

அப்படியானால் விவசாயிகளுக்கு இனி போராட வேண்டிய அவசியம் ஏற்படாதா? எல்லாப் பிரச்சினைகளும் தீர்வு காணப் பட்டதா?. அது தான் இல்லை..

**விவசாயிகள் எதிர்ப்பை மீறி, தன் அகங்காரத்துடன், எதேச்சதிகார வெறியோடு, அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படைகளை சிதைத்து நிறைவேற்றிய, விவசாயிகள் விரோத சட்டங்கள் திருப்பப் பெறப்பட்டுள்ளது. விவசாயிகள் உள்ளிட்ட மின் நுகர்வோர் அனைவரையும் பாதிக்கும் மின்சார சட்டத் திருந்த மசோதா 2020 சட்டமாக நிறைவேற்ற மாட்டோம் என உறுதி அளிக்கப்பட்டுள்ளது.**

விவசாய விளை பொருள்களுக்கு உற்பத்திச் செலவுகளோடு 50 சதவீதம் கூடுதலாக கணக்கிட்டு குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயக்க வேண்டும் என்ற கோரிக்கை மீது தீர்வு காண உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்படுகிறது.

போரட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் மீதான வழக்குகள் திரும்பப் பெறப்படுகின்றன.

போராட்டக் களத்தில் உயிரிழந்துள்ள விவசாயிகள் குடும்பங்களுக்கு இழப்பீடு தருவது தொடர்பாக மாநில அரசுகள் முடிவு செய்யும்

இவைகள் மட்டும் தான் நாம் இப்போது எட்டியுள்ள சாதனை. இது தவிர நமது நிலவுரிமை, ஜனநாயக உரிமை, நாட்டின் சுய சார்பு பொருளாதாரம்,மாநில உரிமை என பல்வேறு கோரிக்கைகளில் போராட வேண்டிய கடமையும் இருக்கிறது. எனவே தொடரும் போராட்டத்தில் ஒரு கட்டம் முடிவுக்கு வந்துள்ளது. மற்றவைகள் தொடரும்.....

போராட்டம் தான் வாழ்க்கை....

வாழ்க்கைக்காவே போராட்டம் :.

போராட்டங்கள் ஒரு போதும் தோற்றதில்லை. களப் போராளிகள் சிந்தும் ரத்தம் வீண்போகாது. இது விவசாயிகள் போராட்டம் உணர்த்தியுள்ள பாடம்.

ஜனநாயக புரட்சியை முன்னெடுப்போம்...

முடிவான போராட்டம் நோக்கி முன்னேறுவோம்...


## சிட்கோ தொழிற்மனைகளின் விலையை

# 75% வரை குறைத்து அரசாணை வெளியீடு

### தமிழக முதல்வருக்கு டாக்ட் சங்கம் நன்றி

தமிழ்நாடு கைதொழில் மற்றும் குறுந்தொழில்சங்கத்தின் நீண்ட நாள் கோரிக்கையான தொழிற்பேட்டைகளில் குறுந்தொழில் துறைசார்ந்த தொழில்முனைவோர் சிட்கோ நிர்ணயித்து உள்ள அதிகப்படி விலையால் எங்களால் தொழில் நடத்த மனை வாங்க இயலவில்லை. ஆதலால் சிட்கோ நிர்ணயித்த நிலத்தின் விலையை குறைக்க வேண்டும் என்ற பல்லாண்டு காலமாக டாக்ட் சங்கத்தின் கோரிக்கையும் ஏற்று இயற்கை சீற்றத்தையும் கடந்த பல்லாண்டு காலமாக தொழில்துறையில் ஏற்பட்டுள்ள பெரும் பாத்திப்பையும், கோவிட் 19 பெருந்தொற்று காரணமாக ஏற்பட்டுள்ள தொழிற்முடக்கத்திலிருந்தும், தொழிற்முனைவோர் மீள வழிவகை செய்யும் பொருட்டு தற்போது தொழிற்மனைகளின் விலையை 75% வரை குறைந்து அரசாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

தமிழகத்தில் குடியிருப்பு பகுதிகளிலும், தொழிற்பேட்டைகளிலும், குறுந்தொழில் நிறுவனங்கள் (Micro Sector) நடத்தும் இலட்சக்கணக்கான கைத்தொழில் குறுந்தொழில் சார்பில் முதல்வருக்கும், குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் ஊரக தொழில்துறை அமைச்சர் மற்றும் அரசு செயலாளர், சிட்கோ நிர்வாக இயக்குனர், தொழில் வணிகதுறை இயக்குனர் மற்றும் அனைத்துறை அதிகாரிகளுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.



**பொதுநலனை விட சமுதாய நலனே முக்கியம் என்ற கம்யூனிஸ்ட் நெறியை இளைஞர்கள் உள்வாங்கிக் எதார்த்தத் சூழலுக்கு ஏற்ப செயல்படுத்தி தங்கள் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும்**

**- லெனின்**

# டிசம்பர் 16,17 வங்கி ஊழியர் வேலைநிறுத்தத்துக்கு ஆதரவு

## அனைத்து தொழிற் சங்க கூட்டறிக்கை

தமிழ்நாட்டில்இயங்கும்தேசிய,மாநில தொழிற் சங்கங்களின் சார்பில் மு.சண் முகம் எம்.பி. (தொமுச), க.அ.ராஜா ஸ்ரீதர் (எச்எம்எஸ்), டி.எம்.மூர்த்தி (ஏஐடியுசி), ஜி.சுகுமாறன் (சிஐடியு), டி.வி.சேவியர் (ஐஎன்டியூசி), வி.சிவகுமார் (ஏஐயு டியுசி), க.ஞானதேசிகன் (ஏஐசி சிடியூ), ஆர்.சம்பத் (டபிள்யுபிடியுசி), இரா.அந்திரிதாஸ் (எம்எல்எப்), ஏ.எஸ். குமார் (எல்டியுசி), ஆர்.திருப்பதி (டியுசிசி) ஆகியோர் விடுத்துள்ள பத்திரிகைச் செய்தி வருமாறு:

பொதுத்துறை வங்கிகளை தனியா ருக்கு தருவதற்காக, வங்கிகள் சட்ட (திருத்த) மசோதாவை, நடப்பு குளிர்கால கூட்டத்தொடரிலேயே நாடாளுமன் றத்தில் மோடி அரசு வைக்கப்போகிறது. ஏற்கனவே சென்ற நிதி நிலை அறிக் கையில் இரண்டு பொதுத்துறை வங்கி களை தனியாருக்கு தருவோம் என்று அறிவித்தார்கள்.

வங்கியில் வாங்கிய கடனை வேண்டு மென்றே திரும்பச் செலுத்தாத பெரிய நிறுவனங்கள் முன்பே இருந்தாலும் கூட, பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு திருப்பித் தராத கடன் தொகையும், வங்கி மோசடிகளும் பல மடங்குகள் அதிகரித்துவிட்டன.

பதிமூன்று நிறுவனங்கள் 4 லட்சத்து 46 ஆயிரத்து 800 கோடி ரூபாயை கடன் வாங்கி திரும்பச் செலுத்தாமல் இருந் தன. இந்தக் கடனை அடைக்க இந் தியாவின் மிகப் பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களான மிட்டல், ரிலையன்ஸ், டாட்டா, வேதாந்தா உள்ளிட்ட 9 நிறுவ னங்கள் முன்வந்தன. கடன் தொகையை வங்கிகளிடம் பேரம் பேசிக் குறைத்து, வெறும் 1,61,720 கோடி ரூபாய்க்கு அந்த 13 நிறுவனங்களின் மொத்தச் சொத்துக்களையும் வாங்கிக் கொண்டன. இதனால் 2 லட்சத்து 85 ஆயிரம் கோடி ரூபாய் பெருமுதலாளிகளுக்கு லாபம்; பொதுத்துறை வங்கிகளுக்கு நஷ்டம்.

மோடி அரசாங்கம் கார்ப்பரேட் பணக் காரர்களிடம் இருந்து வங்கிகளின் பொதுச்சொத்தை வசூலிக்கும் இலட் சணம் இதுதான். வங்கிகள் நஷ்டமடைய இந்த அரசே காரணமாக இருந்துவிட்டு, பின்னர் பொதுத்துறை வங்கிகள் நஷ் டத்தில் இயங்குகின்றன என பழி சுமத்துகிறது. இதுவரை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு கடன் கொடுக்கச் செய்து, பிறகு கடனைத் தள்ளுபடி செய்த மோடி அரசு, இப்போது அந்த வங்கிகளையே கார்ப்பரேட்டுகளிடம் கொடுத்துவிட முடிவு செய்துள்ளது. இதுதான் 'வங்கித் துறை சீர்திருத்தம்'' என்கிறார்கள்.

விவசாயிகளுக்கு எதிரான 3 வேளாண் சட்டங்களையும் "வேளா ண்துறை சீர்திருத்தம்" என்று சொல் லித்தான் கொண்டு வந்தார்கள். தொழி லாளர்களின் உரிமைகளைப் பறிக்கும் சட்டத் தொகுப்புகளும் "தொழிலாளர் சீர்திருத்தம்' என்ற பெயரில் தான் வந்துள்ளன. ஓராண்டு காலமானாலும் சளைக்காமல் விவசாயிகள் போராடி அந்தச் 'சீர்திருத்தங்களை' திரும்பப் பெற வைத்திருக்கிறார்கள்.

பல நிதித்துறை வல்லுனர்களும், வங்கிகளை தனியார் மயமாக்கும் மோடி அரசின்கொள்கை தேசிய நலன்களுக்கு விரோதமானது என்று கூறுகிறார்கள். முன்னாள் ரிசர்வ் வங்கி ஆளுநர் ரகுராம் ராஜன், "பொதுத்துறை வங்கிகளை விற்பது மகத்தான தவறு" என்று சுட்டிக்காட்டி இருக்கிறார்.

நூறு லட்சம் கோடி ரூபாய்க்கும் மேலான தொகையை பொதுத்துறை வங்கிகளில் நம்பிக்கையோடு மக்கள் போட்டு வைத்துள்ளனர். இவ்வளவு பெரிய தொகையை அப்படியே தூக்கி, வாங்கிய கடனைக் கூட கட்டாத கார்ப்பரேட் நிறுவனங்களிடம் அரசு ஒப்படைப்பது பொது மக்களுக்கு இழைக் கப்படும் பெரும் அநீதியாகும்.

வரும் டிசம்பர் 16, 17 தேதிகளில் அனைத்து வங்கிகளின் ஊழியர்களும், அதிகாரிகளும் தனியார்மயத்தை எதிர்த்து வேலைநிறுத்தத்தில் இறங்கு கிறார்கள்.

தேச நலன், பொதுமக்கள் சொத்து ஆகியவற்றை பாதுகாக்கும் இப்போராட் டத்தை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் ஆதரிக்கிறோம். முழு வெற்றி பெற வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். ஒன்றிய அரசு தனது போக்கை மாற்றிக் கொள்ளாவிட்டால், வங்கி ஊழியர்களுடன் இணைந்து அனைத்துத் துறைத் தொழிலாளர்களும் போராட்டக் களமிறங்குவார்கள் என் பதை அறிவிக்கிறோம். இவ்வாறு கூட்டறிக்கையில் கூறியுள் ளனர்.

# வழக்கறிஞர் ம.தி.சோழர் மறைவு: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த உறுப்பினரும், திருச்சி மாவட்ட முன்னாள் செயலாளருமான தோழர். ம.தி.சோழர் (76) டிச. 12 அன்று கல்பாக்கத்தில் உள்ள அவரது மகள் வீட்டில் காலமானார் என்ற துயரச் செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம்.

தோழர் ம.தி.சோழர் திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஒன்றியத்தில் உள்ள மணியாங்குறிச்சி கிராமத்தில் பிறந்தவர். இந்தக் கிராமம் பெரம்பலூர் மாவட்ட எல்லையில் உள்ளது.

கல்லூரியில் பயின்ற காலத்தில் மாணவர் பெருமன்றத்தில் இணைந்து, அதன் வழியாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து, இறுதி மூச்சு வரை செயலாற்றியவர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1987 – 88 ஆம் ஆண்டுகளில் அமைப்பு ரீதியான நெருக்கடியை சந்தித்த போது, அதனை எதிர்கொண்டு கட்சியை பாதுகாப்பதில் முனைந்து செயல்பட்டு வெற்றி கண்டவர். 1989 ஆம் ஆண்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டை முன்னின்று நடத்தியவர்.

கட்சியில் மாவட்டச் செயலாளர், மாநிலக் குழு மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர், மக்கள் தொண்டர் அணி பொறுப்பாளர் என பல்வேறு பொறுப்புகளில் மிக சிறப்பாக பணியாற்றி, கட்சி அணிகள் மற்றும் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். இவரது முன்முயற்சியால் தான் தற்போது கி.ஆ.பெ.விஸ்வநாதம் அரசு மருத்துவக் கல்லூரிக்கு எதிரில் உள்ள கட்சி அலுவலக இடம் வாங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. மறைந்த தலைவர் கே.எஸ்.சோமு அவர்கள் மீது ஈர்ப்புக் கொண்ட ம.தி.சோழர், வழக்கறிஞர்கள் சு.க.மணி, என் பாலகிருஷ்ணன் போன்றவர்களுடன் இணைந்து செயல்பட்டு , தோழர்கள் எம். செல்வராஜ், த. இந்திரஜித், பி. கணேசன் மற்றும் க. சுரேஷ் போன்ற இளைய தலைமுறையை இணைத்து கூட்டுத் தலைமையைக் கட்டமைத்தவர்.

தோழர் ம.தி.சோழருக்கு அவரது வாழ்விணையர் திருமதி பூங் கோதையும் திருமணம் ஆன அஞ்சலைப் பிரியா, வித்தியா என இரு மகள்களும், திருமணம் ஆகாத மகன், குருதேவ் ஆகியோர் இருக்கிறார்கள். சில மாதங்களாக உடல் நலன் பாதிக்கப்பட்டிருந்த ம.தி.சோழர், கல்பாக்கத்தில் உள்ள மகள் வீட்டில் தங்கி தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் காலமாகி விட்டார் என்பது வேதனையாகும். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் நேரில் சென்று மரியாதை செலுத்தினார்.

தோழர். ம.தி.சோழர் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு செவ்வணக்கம் கூறி, அஞ்சலி செலுத்துகிறது. அன்னாரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

டிசம்பர் 16 , 17 ல் வங்கிகள் தனியார்மயமாக்கலை எதிர்த்து

# நாடு தழுவிய வேலை நிறுத்தம்

## அகில இந்திய வங்கி ஊழியர் சம்மேளனம் அறைகூவல்

அகில இந்திய வங்கி ஊழியர் சம்மேளனம் உள்ளிட்ட சங்கங்கள் வங்கித்துறை வேலை நிறுத்தத்திற்கான நோட்டீசை வழங்கியதையடுத்து, இந்திய அரசாங்கத்தின் தொழிலாளர் துறை ஆணையர் டெல்லியில் வங்கித்துறை சங்க பிரதிநிதிகள், நிதி அமைச்சகம் மற்றும் இந்திய வங்கிகள் அமைப்பின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசினார்.

இக்கூட்டத்தில் சாதகமான முடிவு ஏற்படாததால் வரும் டிசம்பர் 16 மற்றும் 17 ஆகிய இரு நாட்கள் நாடு தழுவிய அளவில் வங்கிகள் வேலை நிறுத்தம் அறிவித்தபடி நடைபெறும் என்று யு.எப்.பி.யு. சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரின்போது இரண்டு பொதுத்துறை வங்கிகள் தனியார் மயமாக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்தது. இந்த அறிவிப்புக்கு கடும் கண்டனத்தையும், எதிர்ப்பையும் பதிவு செய்யும் வகையில் வங்கி ஊழியர்களும், அலுவலர்களும் நாடு தழுவிய வேலை நிறுத்தத்தை மார்ச் 15 மற்றும் 16 ஆகிய இரு நாட்கள் மேற்கொண்டார்கள்.

வங்கித்துறை ஊழியர்கள் மற்றும் அலுவலர்களின் எதிர்ப்பையும் புறக்கணித்து விட்டு, வங்கிகள் தனியார் மயமாக்கல் சட்ட முன்வடிவை அரசாங்கம் நாடாளுமன் றத்தின் நடப்பு கூட்டத்தொடரில் கொண்டுவர முயல்கிறது. எனவே தான் நாடு தழுவிய இந்த வேலை நிறுத்த போராட்டத்திற்கு அறைகூவல் விடுத்து உள்ளோம்.

நடைபெற்று வரும் நாடாளுமன்ற கூட்டத்தொடரில் வங்கிகள் தனியார் மயம் பற்றிய சட்ட முன்வடிவை கொண்டு வராது என்றுஅரசாங்கம் உறுதிமொழி வழங்குமேயானால் வேலைநிறுத்தப் போராட்டத்தை மறுபரிசீலனை செய்வோம் என்று யு.எப்.பி.யு. சார்பில் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அரசாங்கம் அல்லது இந்திய வங்கிகள் அமைப்பு தரப்பிலிருந்து எந்த ஒரு உறுதிமொழியும் வழங்கப்படாததால் திட்டமிட்டபடி வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# தலைமைக் காவலர் ச.கணேஷ்குமார் மரணம்

## இரா.முத்தரசன், மு.வீரபாண்டியன் அஞ்சலி

வடசென்னை மாவட்டம், பெரம் பூர் தொகுதி, வியாசர்பாடி, மகசின் புரம் முன்னணி தோழர் ஐ.சி.எப். ச. ரமேஷ்குமார் அவர்களின் சகோதரர், போக்குவரத்து தலைமைக் காவலர் ச. கணேஷ்குமார் இயற்கை எய்தினார். அவரது உடலுக்கு இந்தியக் கம்யூ னிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், வடசென்னை மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி ஆகியோர் அஞ்சலி செலுத்தினர். நிகழ்வில் முன்னாள் மாவட்டச் செயலாளர் மு.சம்பத், தொழிற்சங்கத் தலைவர் எஸ்.குப்பன், வடசென்னை மாவட்ட துணைச் செயலாளர் வசந்த் குமார், பெரம்பூர் தொகுதி செயலா ளர் ஆ.சுப்பிரமணி, தமிழ்நாடு ஒடுக்கப் பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாநிலச் செயலாளர் கீ.சு.குமார், மாநில தலை மைக்குழு உறுப்பினர்கள் லி.உதய குமார், உள்ளிட்டோர் அஞ்சலி செலுத் தினர்.

அற நிலையத்துறை நீதிமன்றங்களை

# நீதித்துறையின் கட்டுப்பாட்டில் இயங்க நடவடிக்கை வேண்டும்!

## கோவில் மனையில் குடியிருப்போர் சங்கம் முதல்வருக்கு கோரிக்கை

தமிழ்நாடு கோவில்மனையில் குடியிருப்போர் சங்க மாநிலத் தலைவர் வி.அ.பாலசுப்பிரமணியன் முதல்வருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் குறிப்பிட்டுள்ளதாவது:

தாங்கள் அறநிலயத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த தணிக்கை பிரிவினை, நிதித்துறையின் கட்டுப்பாட்டில் தனித்துறையாக இயங்க அரசாணை வெளியிட்டதற்கு மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

இதேபோன்று அற நிலையத்துறை கட்டுப்பாட்டில் இயங்கிவரும் இணை ஆணையர் மற்றும் ஆணையர் நீதிமன் றங்களை நீதித்துறையின் கட்டுப்பாட்டில் தனித் துறையாக இயங்கவும் தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட் டுக்கொள்கிறோம்.

இருவருக்குமிடையில் பிரச்சனை ஏற் படும்போது இருவருக்கும் சம்பந்தமில் லாத மூன்றாவது நபர் பிரச்சனையை விசாரித்து தீர்வுகாணுவதுதான் இந்த உலகில் கடைபிடிக்கப்படும் சமுதாய நீதி.

இப்படியிருக்கும்போது அறநிலை யத் துறைக்கு சொந்தமான மனைகளில் குடியிருப் போருக்கும், அறநிலையத் துறை அதிகாரிகளுக் குமிடையில் பிரச் சனை ஏற்படும்போது பிரச்சனைக்கு தீர்வு காண அறநிலையத்துறை அதிகாரிகளே நீதிபதிகளாக அமர்ந்து பிரச்சனைக்கு தீர்வுகாண, இணை ஆணையர் மற்றும் ஆணையர் நீதிமன் றங்கள் அறநிலையத்துறையின் கட்டுப் பாட்டில் இயங்குவது சமுதாய நீதிக்கு புறம்பானது.

எனவே தமிழக அரசின் நடவடிக்கை களில் ஜனநாயகத்தையும், சமுதாய நீதிகளையும் நிலைநாட்டிவரும் தாங்கள் இதில் தலையிட்டு, அற நிலையத்துறை கட்டுப்பாட்டில் இயங் கும் நீதிமன்றங்களை நீதித்துறை யின் கட்டுப்பாட்டில் தனித்துறையாக இயங்க நடவடிக்கை எடுக்க வேண் டுமாய் கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு கோரிக்கை மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

# குழந்தைகள் உணவை நஞ்சாக்கும் பெப்சி உருளைக்கிழங்கு பயிரிட தடை

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வரவேற்பு

பெப்சி நிறுவனம் 1989இல் 'லேஸ் சிப்ஸ்' தயாரிக்கும் தொழிற்சாலைகளை இந்தியாவில் அமைத்தது. அது பயன்படுத்திய உருளைக்கிழங்கு சிப்ஸ் எடை குறைவாகவும், பருமன் அதிகமாகவும் இருந்ததும், குழந்தைகள் விரும்பி சாப்பிடும் செயற்கை சுவையூட்டிகள் சேர்த்ததும் இதற்கு முக்கிய காரணமாகும். சில ஆண்டுகளிலேயே இதன் வியாபாரம் கொடிகட்டிப் பறந்து, அந்த நிறுவனம் கொள்ளை லாபம் ஈட்டியது.

இந்த உருளைக்கிழங்கு விதைகளை குஜராத் மாநில விவசா யிகளிடம் தந்து, உற்பத்தி செய்த கிழங்குகளை தனக்கு மட்டுமே விற்பனை செய்யவேண்டும் என்ற நிபந்தனையோடு பெப்சி நிறுவனம் ஒப்பந்தம் செய்தது. ஒப்பந்தப்படி உற்பத்தி செய்த உருளைக்கிழங்குகள், உரிய தரத்தில் இல்லை என்று கூறி, விலையை அந்த நிறுவனம் குறைத்ததால், பயிரிட்ட விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்தனர். வேறு வழியின்றி வேறு விவசாயிகளுக்கு அந்த விதைகளை விற்று விட்டார்கள்.

அந்த விதைகளுக்கு பெப்சி நிறுவனம் காப்புரிமை பெற்றுள்ளதாகவும், ஒப்பந்தம் செய்து கொள்ளாத விவசாயிகள் அதனை சாகுபடி செய்ததால் ஒவ்வொரு விவசாயியும் ஒரு கோடி ரூபாய் நஷ்ட ஈடு தர வேண்டும் என்றும் பெப்சி நிறுவனம் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. இதனை எதிர்த்து நாடெங்கும் விவசாயிகள் போராடினார்கள் தமிழ்நாடு விவசாயிகள் சங்கமும் பல இடங்களில்




கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. இறுதியில் மாநில அரசு இதில் தலையிட்டு பேசியபோது, நீதிமன்றத்துக்கு வெளியில் தீர்வு செய்து கொள்வதாகக் கூறி, வழக்கை பெப்சி கம்பெனி திரும்பப் பெற்றது. இந்த நிலையில்தான் அந்த உருளைக்கிழங்கு வகைகள் மரபணு நீக்கம் செய்யப்பட்டவை என்றும் அவை உடல் நலத்துக்கு தீங்குவிளைவிப்பவை என்றும் விவரம் வெளியானது. இந்தியாவில் மரபணு நீக்கம் செய்யப்பட்ட உருளைக்கிழங்கு விதைகளை விற்கவோ, சாகுபடி செய்யவோ அனுமதி இல்லை. எனவே பெப்சி நிறுவனம் இந்த உருளைக்கிழங்கை இந்தியாவில் பயிரிடக் கூடாது என்று விவசாயிகள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வந்தனர்.

மூன்று ஆண்டுகளுக்குப் பின்பு தற்போது, இந்திய விதைகள் மற்றும் விவசாயிகள் உரிமை பாதுகாப்பு ஆணையம், இந்த மரபணு நீக்கம் செய்யப்பட்ட உருளைக்கிழங்கை பயிரிடத் தடை விதித்து உத்தரவிட்டு இருக்கிறது. இது விவசாயிகளின் தொடர் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகும்.

மரபணு நீக்கம் செய்யப்பட்ட உருளைக்கிழங்கை இந்தியாவில் பயிரிட கூடாது என்ற தடையை முழுமையாக அமுல் நடத்தி உறுதிப்படுத்தவும், குழந்தைகளின் உடல் நலனுக்கு தீங்கு ஏற்படுத்தும் பெப்சி நிறுவனத்தின் 'லேஸ் சிப்ஸ்'ஸை இந்தியாவில் விற்பனை செய்யக்கூடாது என்று தடை செய்யவும் ஒன்றிய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது. இவ்வாறு தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

முகவை பூபேஷ்

# மாநிலங்களில்... மன்னிப்பு கேள்: பஞ்சாபில் கங்கனாவின் கார் முற்றுகை

பஞ்சாப்



பஞ்சாப் சென்ற நடிகை கங்கனாவின் காரை வழிமறித்த விவசாயிகளின் பெருந்திரள், விவசாயிகள் குறித்து தவறாக பேசியதற்காக மன்னிப்பு கேட்கும்படி கோரியதால் பரபரப்பு ஏற்பட்டது.

டெல்லியில் வேளாண் சட்டங்களுக்கு எதிராக விவசாயிகள் போராட்டம் நடத்தியபோது, பாலிவுட் நடிகை கங்கனா ரனாவத் போராடும் விவசாயிகளை "காலிஸ்தான் தீவிரவாதிகள்" என்று விமர்சித்திருந்தார்.. மேலும், இந்த சட்டங்களை ரத்து செய்யப்படுவதையும் விமர்சித்தார். பஞ்சாபியர்களையும் காலிஸ்தான் தீவிரவாதிகள் என்றார். இதற்கு விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், இமாச்சலப்பிரதேசம் சென்று விட்டு கங்கனா, காரில் வந்தபோது, பஞ்சாப் மாநிலம், ரூப்நகர் மாவட்டத்தில் கிராத்பூர் சாஹிப் அருகே அவருடைய காரை விவசாயிகள் வழி மறித்தனர். ஆண்கள், பெண்கள் என ஏராளமானவர்கள் காரை செல்லவிடாமல், விவசாயிகள் குறித்து தவறான கருத்து கூறியதற்காக மன்னிப்பு கேட்கும்படி கங்கனாவிடம் வலியுறுத்தினர். அவர்களிடம் கங்கனா பேச்சுவார்த்தை நடத்தியும் யாரும் அவர் செல்வதற்கு அனுமதிக்க வில்லை. அரை மணி நேரம் கடந்த நிலையில் அங்கு வந்த போலீசார், விவசாயிகளிடம் சமாதானம் பேசி காரை விடுவிடுத்தனர். அதன் பிறகே கங்கனா காரில் அங்கிருந்து செல்லமுடிந்தது.

# கடந்த ஆண்டில் 5579 விவசாயிகள் தற்கொலை



டெல்லி

கடந்த ஆண்டில் நாடு முழுவதும் 5579 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இந்த தகவலை மத்திய வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர் எழுத்து பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.


தேசிய குற்ற ஆவண காப்பக புள்ளிவிபரங்களின் படி கடந்த 2019 ஆண்டில் 5957 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும், 2020 ஆம் ஆண்டில் 5579 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் அதிகபட்சமாக மகாராஷ்டிராவில் மட்டும் 2567 விவசாயிகளும், கர்நாடகவில் 1072 விவசாயிகளும், தமிழகத்தில் 79 விவசாயிகளும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இந்த தகவலை தெரிவித்த வேளாண் அமைச்சர் நரேந்திர தோமர், டெல்லியில் விவசாயிகள் நடத்திய 1 ஆண்டுக் கால போராட்டத்தில் உயிரிழந்த விவசாயிகள் எண்ணிக்கை பற்றிய விபரம் இல்லை என்றும் அதனால், இழப்பீடு வழங்கும் பிரச்சினை எழவில்லை என ஆணவமாக மக்களைவில் தெரிவித்தற்கு அனைத்து எதிர்க்கட்சிகளும் அவருக்கு கண்டனம் தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது.

# கேரளாவில் மாநிலம் தழுவிய தர்ணா

கேரளாவை ஆளும் இடது சாரி ஜனநாயக முன்னணி அரசை, மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தி வரும் நரேந்திர மோடியின் ஒன்றிய அரசைக் கண்டித்து, இடது ஜனநாயக முன்னணி சார்பில் மாநிலம் தழுவிய தர்ணா எழுச்சியுடன் நடைபெற்றது..

மாநில தலைநகர் திருவனந்தபுரத்தில், முதல்வரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினருமான பினராயி விஜயன் தர்ணாவை துவக்கி வைத்தார். கொல்லத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கனம் ராஜேந்திரன் சின்னக்கடையிலும், காசர்கோட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் பன்னியன் ரவீந்திரன் பிசி சாலையிலும், கோழிக்கோடு எல்டிஎப் அமைப்பாளர் விஜயராகவனும் போராட்டத்தைத் தொடங்கி வைத்தனர். "மாநிலத்தின் மக்கள் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு எதிராக மத்திய அரசு எதிர்மறையான நிலைப்பாட்டை எடுத்து வருகிறது கேரளாவின் வளர்ச்சிப் பணிகளை பா.ஜ.க.வும், ஐக்கிய ஜனநாயகக் கூட்டணியும் சேர்ந்து நாசப்படுத்துகின்றன. மத்திய அரசின் தவறான கொள்கைகள் குறித்தும், மத்திய அரசின் அணுகுமுறை குறித்தும் மவுனம் காக்கிறது. மாநிலத்தின் வளர்ச்சி தேவைகளை மறுக்கிறது, என்றார்.

"கேரளாவின் வளர்ச்சிக்கான மத்திய அரசின் பட்ஜெட் ஒதுக்கீடுகள் ஒவ்வொரு யூனியன் பட்ஜெட்டை ஏற்கும் போதும் குறைந்து கொண்டே வருகிறது. மத்தியிலும் ஒன்றன் பின் ஒன்றாக வந்த அனைத்து அரசுகளும் இதே அலட்சியப் போக்கையே பின்பற்றியதாக அவர் சுட்டிக்காட்டினார். சுகாதாரத் துறையில் அபரிமிதமான முன்னேற்றம் அடைந்த பிறகும், அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகம் (எய்ம்ஸ்) போன்ற வசதி மாநிலத்திற்கு மறுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு முறையும் அரசுக்கு இப்படி ஒரு வசதி கிடைக்கும் என்ற நம்பிக்கையும் கடைசிநேரத்தில் மறுக்கப்பட்டது. பல்கலைக்கழக மட்டம் உட்பட அனைத்து நிலை களிலும் கல்வியில் பெரும் முன்னேற்றம் அடைந்த மாநிலத்திற்கு அதன் மனிதவள மேம்பாட்டுத் துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய தேவையான நிதி வழங் கப்படவில்லை. மாநிலத்தில் ரயில்வே மேம்பாட்டிற்கு அவசியமான ரயில்வே மண்டலத்தை கூட மத்திய அரசு மறுத்துள்ளது என்று மாநிலச் செயலாளர் கனம் ராஜேந்திரன் சுட்டிக்காட்டினார்.



>> 6ம் பக்கத் தொடர்ச்சி

சொன்னது.

ஃபேஸ்புக்கின் செயல்பாடு இப்படியே தொடர்ந்தால், இன்னும் பத்து வருடத்தில் வெறுப்பு மட்டுமே எஞ்சும் என்று ஓர் இஸ்லாமியர் ஃபேஸ்புக்கின் ஆய்வாளர்களிடம் சொன்னாராம். லவ் ஜிஹாத், கரோனா தொற்று ஆகியவற்றுக்கு இஸ்லாமியரை வசைபாடி வரும் பதிவுகளில் பெரும்பாலானவை சங்கப் பரிவார அனுதாபிகளுடையதுதானாம். பஜ்ரங் தள், ராம் சேனா ஆகிய குழுக்கள் பற்றி ஃபேஸ்புக் நிறுவனத்துக்குள்ளேயே அச்சம் இருந்தது. ஆனால் அவற்றைத் தடைசெய்தால் பாஜகவின் அதிருப்திக்கு ஆளாக நேரிடுமோ என்று ஃபேஸ்புக் தயங்கியது. பஜ்ரங் தள் பதிவுகளுக்கும் நிஜ வாழ்வில் நடக்கும் வன்முறைக்கும் தொடர்பிருக்கிறது என்கிறது ஓர் ஆய்வு.

திரிபுராவில் 11 வயது பையன் ஒருவன் ஜூன் 26 அன்று இறந்ததும், சிறுநீரகத்தைத் திருடுவதற்காகவே அவன் கொல்லப் பட்டான் என்று வதந்தி பரப்பப்பட்டது. ஏற்பட்ட கலவரத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர். அந்த வதந்தியைப் பரப்பியதில் முக்கி யமானவர் பாஜகவைச் சேர்ந்த ரத்தன் லால் நாத். பிள்ளை களைக் கடத்துகிறார்கள் என்று வாட்ஸப்பில் பரவும் வதந்தி களால் மஹாராஷ்டிராவில் மட்டும் ஒரு மாதத்துக்குள்ளேயே 14 கலவரங்கள். மாடுகளைக் கடத்துகிறார் என்ற வதந்தியால், பெஹ்லு கான் அடித்தே கொல்லப்பட்டார்.

**பரவும் வெறுப்புக் கலாசாரம்**

ஃபேஸ்புக் பற்றிய உண்மைகள் அம்பலமானதும் அது ஒரு தனியார் நிறுவனம் தன் லாப நோக்குக்கான உறுபசிக்கு சமூ கங்களைக் காவு கொடுக்கிறது என்ற விமர்சனம் எழுந்தது. ஃபேஸ்புக் இந்திய அரசோடு கருத்துரிமைக்காக சில சட்டங்களை எதிர்க்கிறார்கள் என்ற எண்ணம் பொதுவில் மேலோங்கியபோது, இந்தியா இந்திய தயாரிப்பான 'கூ' (Koo) என்ற செயலியை அறி முகப்படுத்தியது. உடனே பாஜகவினர் கூவை நோக்கிப் பாய்ந் தனர். கூ தளத்தில் மட்டுறுத்தல் செய்வதற்கு ஆட்கள் இல்லை. வெறுப்புப் பதிவுகள் உடனே பெருகியது. ஒரு பதிவர் இஸ்லாமியரை எந்த வசைச் சொல்லை வைத்து அழைக் கலாம் என்று அச்சில் ஏற்ற முடியாத நான்கு சொற்களைக் குறிப் பிட்டிருந்தார்.

கூ தளத்தைப் போல் கிளப்ஹவுஸ் வலைதளத்திலும் சாதியமும், இஸ்லாமியருக்கு எதிரான வசைகளும் தளம் ஆரம்பித்து இந்தி யர்கள் சேர்ந்த உடனேயே தொடங்கியது. ஒரு கிளப்ஹவுஸ் நிகழ்வில் முஸ்லிம் 'ஜெய் ஸ்ரீராம்' என்று சொன்னால் ரூ. 500 அளிப்பதாகச் சொல்லப்பட்டது.

ஃபேஸ்புக் நிறுவனம் தன் கடமையில் தவறுகிறது, ஆனால், அதை தாண்டி இந்தியாவில் நிலவும் வெறுப்புச் சூழல் இந்தியாவின் பிரச்சினை, இந்தியர்களின் பிரச்சினை. இதனை மழுப்பவே முடியாது.

வெளியுறவுக் கொள்கைகளைப் பற்றி செய்திகள், கட்டுரை களை வெளியிடும் 'ஃபாரின் பாலிஸி' (Foreign Policy) இதழ், சென்ற வருடம் இந்தியாவில் இருந்து ஏற்றுமதியாகும் இஸ்லாமிய வெறுப்பு என்ற தலைப்பில் கட்டுரை வெளியிட்டது. பொய்ச் செய்திகளை ஆராயும் ஓர் ஆய்வகம் இந்தியாவை மையமாகக் கொண்டு செயல்படும் 260 போலி ஊடக தளங்கள் 65 நாடுகளில் வியாபித்திருப்பதாகச் சொல்கிறது.

வெளிநாடுகளில் இடதுசாரி அரசியலர்கள்கூட தங்கள் தொகுதி இந்தியர்களின் மோதி ஆதரவை அனுசரித்துப் பேசும் சூழல் ஏற்பட்டிருக்கிறது. அரசியலர்கள் முதல் பல்கலைக்கழக பேராசிரியர்கள் வரை அமெரிக்க வாழ் இந்துத்துவர்களின் சமூக வலைதளத் தாக்குதல்களுக்கு - பலவும் வன்முறையை அப்பட் டமாகப் பேசும் தாக்குதல்கள் உள்ளாகியிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் கர்நாடக சங்கீதத்தில் கிறிஸ்தவர்களைப் பற்றி பிரச்சினை கொழுந்துவிட்டு எரிந்தபோது, டி.எம்.கிருஷ்ணா நியூ ஜெர்சியில் நிகழ்ச்சி நடத்த வந்திருந்தார். அப்போது எழுந்த அச்சுறுத்தல்களைப் பார்த்து நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களே விக் கித்துப்போய் அமெரிக்க போலீஸாரிடம் பாதுகாப்பு கேட்ட அவ லமும் நடந்தது.

மிரட்டியவர்கள் அமெரிக்க வாழ் மெத்தப் படித்த தமிழர்கள். முன்பொரு முறை சுப்பிரமணிய சுவாமியின் நிகழ்ச்சி ஒன்றுக்கு நியூ ஜெர்சியில் நேரில் சென்றிருந்தேன். சுவாமி பேசிய அப்பட்டமான வெறுப்புப் பேச்சுக்கு மெத்தப் படித்தவர்கள் பலர் கை தட்டியதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தேன். இந்தியர்கள் இங்கு அமெரிக்காவில் சிறுபான்மையினர், இங்கு எந்த பாதுகாப்பைத் தங்களுக்கு விழைகிறார்களோ அதனை அமெரிக்க வாழ் இந்துத்துவர்கள் இந்தியாவில் தர மறுக்கிறார்கள். இது அசிங்கமான இரட்டை வேடம்.

இன்று ஜனநாயகத்துக்கு முக்கிய அச்சுறுத்தலாக சமூக வலைதளங்கள் உருவெடுத்திருக்கின்றன.

அரசுகளும் சமூகங்களும் இதுகுறித்து அக்கறையோடு உடனடியாக பலவித உரையாடல்களை முன்னெடுக்க வேண்டும்.

எல்லாப் பழியையும் வலைதளங்கள் மீது போட்டுவிட்டு சமூகங்கள் தங்கள் பொறுப்புகளைத் தட்டிக் கழிக்கவும் முடியாது.

சமூக வலைதளங்களானவை ஒரே சமயத்தில் ஊதுகுழல்களா கவும் முகம் காட்டும் கண்ணாடிகளாகவும் நமக்குத் தோன் றுகின்றன. அதாவது, அடிப்படை வெறுப்பானது நம் சமூகத்தின் உள்ளே ஊற்றெடுக்கிறது. அதைத்தான் நாம் வெல்ல வேண்டும்.

*நன்றி: அரவிந்தன் கண்ணையன் முகநூல் பதிவிலிருந்து*

## இந்த வார தம்பிக்குறள்

### 50. கூடி வாழும் குடும்பம்


**கூடிவாழும் நன்குடும்பம் தன்னில் கூடிமுடித்
தாற்றுதல் என்றூஉம் நன்று.**

கூட்டுக் குடும்பத்தில் அனைவரும் கலந்து ஆலோசித்து செயல்படுதல் நன்மை பயக்கும் (தன்னில் – ஒற்றளபெடை)

**தன்குடும்பம்தான் விரும்பும் யாருந்தான் தன்கிளையை
தான்தகுதி யாக்கும் தணிந்து.**

தன் கூட்டுக் குடும்பத்தை விரும்புகிறவன் தாழ்ந்து பணிந்தாகிலும், தனது குடும்பத்தினரை அக்குடும்உ பத்தில் கூடி வாழும்படி செய்ய வேண்டும்.

## வாசகர் டுவிட்



**ஆசிரியர் ஜனசக்தி,**

பாசறை நோக்கி படைகள் திரும்பட்டும் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அவர்கள் எழுதிய கட்சிக் கடிதம் மிகவும் அருமை. ஜனசக்தியின் பெயரில் விநாயகர் கோவில் என்ற செய்தியைப் படித்து நானும் ஒரு ஜனசக்தி வாசகன் என்பதில் பெருமை அடைகிறேன்.

– **கோவிந்தராஜ்**, தென்காசி

**ஆசிரியர் ஜனசக்தி,**

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் கறுப்புப் பணத்தை ஒழிப்போம் என பா.ஜ.க. தலைவர்கள் வாய்ப் பந்தல் போட்டனர். ஆரவாரமாக பண மதிப்பிழப்பையும் அறி வித்தனர். இதனால் கறுப்புப் பணமும் ஒழியவில்லை; கள்ளப் பணமும் ஒழியவில்லை. மாறாக கிரிப்டோ கரன்சி என்ற சூதாட்டம்தான் பெருகியுள்ளது என்பதை த.லெனின் கட்டுரை அருமையாக விளக்கியுள்ளது.

– **கே.போஸ்**, திருவள்ளூர்

**ஆசிரியர் ஜனசக்தி,**

நமது ஜனசக்தியில் வெளி வரும் சுழலும் உலகம், பிறமாநில செய்திகள், நூல் விமர்சனம் பயனுள்ளதாகவும், தெரிந்து கொள்ளத்தக்கதாகவும் உள் ளது. தொடர்ந்து வெளியிட வேண்டுகிறோம். ஜனசக்தியில் கோள்வி பதில் வெளிவருமா ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

– **பி.ரங்கநாதன்**, சென்னை

**ஆசிரியர் ஜனசக்தி,**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு எவ்வாறு எதேச்சதிகாரத்திற்கும் அதிலிருந்து பாசிச சர்வாதிகாரத்தை நோக்கியும் செல்லும் என்பதற்கு இன்றைய பா.ஜ.க. மோடி அரசே சரியான சான்று என்பதை டி.ராஜா கட்டுரை சுட்டிக் காட்டியுள்ளது. 'தமிழ் இந்து எங்கே போகிறது' இளசை கட்டுரை அருமை.

– **ஆர்.சென்னியப்பன்**, கோவை



## மணப்பாறையில் மழை வெள்ளம்

### க.மாரிமுத்து எம்.எல்.ஏ. பார்வையிட்டார்

மணப்பாறையில் மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட சொக்கலிங்கபுரம் பகுதியை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து பார்வையிட்டார். அவருடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திருச்சி புறநகர் மாவட்ட செயலாளர் த.இந்திரஜித், துணை செயலாளர் செல்வராஜ், நகர செயலாளர் ஜனசக்தி உசேன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் நல்லுசாமி, சவுக்கத்அலி ஆகியோர் உடன் இருந்தனர்.

## மின்சார தொழிலாளர் சம்மேளனம் கொடியேற்று விழா

தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனத்தின் கொடியேற்று விழா நாமக்கல் திட்டம் பரமத்திவேலூர் செயற்பொறியாளர் அலுவலகம் முன்பு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திட்டதலைவர் தாமோதரன் தலைமை தாங்கினார். திட்ட செயலாளர் பி.கந்தசாமி வரவேற்புரையாற்றினார். மாநில உபதலைவர் எஸ்.இராமசுப்ரமணியம் கொடியேற்றி வைத்தார். மாநில இணைச்செயலாளர் எம்.ராஜேந்திரன் விளக்கவுரை யாற்றினார்.

### உள்ளாட்சி பணியாளர் சம்மேளனத்தின்

## மொரப்பூர் ஒன்றிய பேரவை கூட்டம்

தர்மபுரி மாவட்ட ஏஐடியூசி முனிசிபல் பொது பணியாளர் சங்கம்,கிராம ஊராட்சி,மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் தூய்மைக் காவலர்கள் உள்ளாட்சி சம்மேளனத்தின் மொரப்பூர் ஒன்றிய பேரவை கூட்டம், ஏஐடியூசி தொழிற்சங்கத்தின் 102ம் ஆண்டு கொடி ஏற்று விழா மொரப்பூரில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சங்கத்தின் மாவட்ட தலைவர் மனோகரன் தலைமை வகித்தார்.ஏஐடியூசி சங்க கொடியை ஒன்றிய தலைவர் சுமதி ஏற்றி வைத்தார். பேரவையை ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி துவக்கி வைத்து பேசினார்.மாவட்ட தலைவர் எம்.மாதேஸ்வரன்,மாவட்ட துணை தலைவர் ஆர்.சுதர்சனன்,மாவட்ட துணை செயலாளர் ஆர்.நடராஜன்,மாவட்ட பொருளாளர் ஏ.முருகன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.



## மாற்றுத் திறனாளிகளுக்கு இரு சக்கர வாகனங்கள்

### டி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ. வழங்கினார்

தளி சட்டமன்றத் தொகுதி தேன்கனிக்கோட்டையில் ஸ்ரீ ரமண மகரிஷி ஆசிரம அகடாமி சார்பில் நடைபெற்ற விழாவில், தளி சட்டமன்ற உறுப்பினர் டிஇராமச்சந்திரன் கலந்து கொண்டு மாற்றுத் திறனாளிகளுக்கு இருசக்கர வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கினார். உடன் மாவட்ட கவுன்சிலர் பூதட்டியப்பா, பெனசப்பள்ளி நாகண்ணா, ஒன்றிய கவுன்சிலர்கள் மஞ்சு, விஜி மற்றும் தேன்கனிக்கோட்டை வட்டாட்சியர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மணப்பாறையில் பயிர்களுக்கு இழப்பீடு வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம்

மணப்பாறை பேருந்து நிலையம் அருகே, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில், வடகிழக்கு பருவமழையால் நெல், கடலை பயிர்களுக்கும், கணை நோயால் உயிர் இழந்த மாடுகளுக்கும், பூ விவசாயத்திலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகை வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு த. வி. சங்க ஒன்றிய தலைவர் தங்கராசு தலைமை வகித்தார். ரவிசந்திரன், பழனி சாமி, பெருமாள், கமலக்கண்ணன், எம்.மணி ஆகியோர் முன் னிலை வகித்தனர். வி.ச. மாவட்ட பொருளாளர், சிபிஐ மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஜனசக்தி உசேன், வி.தொ.ச. மாவட்ட தலை வர் சண்முகானந்தம், ஏ.ஐ.டி.யூ.சி. மாவட்ட துணைச் செயலாளர் சுப்ர மணியன், உள்ளாட்சி சங்க கௌரவ தலைவர் சௌக்கத்அலி, அமைப் புச்சார தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் நல்லுச்சாமி ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி உரை நிகழ்த்தினர். தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன் அனைவருக்கும் நன்றி கூறினார்.


# நூல் விலை ஏற்றத்தால் பனியன், பவர் லூம் தொழில்கள் முடக்கம்

### நாடாளுமன்றத்தில் கே.சுப்பராயன் பேச்சு

நாடாளுமன்ற மக்களவையில் டிச.6அன்று கே.சுப்பராயன் பேசியதாவது:

வணக்கம். வரலாறு காணாத அளவில் நூல் விலை மிக அதிகமாக ஏறிவருகிறது. இந்தியாவில் விவசாயத்திற்கு அடுத்தபடி வேலை வாய்ப்பை அளிக்கும் தொழில் ஜவுளித் தொழிலாகும். அந்த ஜவுளித் தொழிலில் குறிப்பாக பனியன், பவர் லூம் போன்ற தொழில்கள் நூல் விலையேற்றத்தால் நிலை தடுமாறி நிற்கின்றன. இதுபற்றி ஒன்றிய அரசு கொஞ்சம் கூட கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஒன்றிய அரசாங்கத்தினுடைய கார்ப்பரேட் ஆதரவு கொள்கைகளின் தீய விளைவாகத்தான் இந்த நெருக்கடியே ஏற்பட்டிருக்கிறது. பதுக்கல் நடைபெறுகிறது; உள்நாட்டின் தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றன. உள்நாட்டின் தேவைகளைப் புறக்கணித்து விட்டு ஏற்றுமதி நடந்து கொண்டிருக்கிறது. எனவே நான் இங்கே ஒன்றிய அரசிடம் குறிப்பிட விரும்பது, உள்நாட்டு தேவைகளுக்கு எவ்வளவு தேவையோ அவற்றை அரசாங்கமே கொள்முதல் செய்து, ஸ்டாக் செய்து கொண்டு தேவையான அளவிற்கு நியாயமான விலையில் ஜவுளி தொழிலுக்கு பனியன், பவர்லூம் போன்ற தொழில்களுக்கு வழங்க வேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.

அதே போல் இந்தியாவில் உள்ள என்.டி.சி.ஆலைகள்இயங்குவதில்லை. இயக்கப்படுவதில்லை. இது சரியான நடைமுறை அல்ல. என்.டி.சி.



ஆலையை இயக்க சரியான வாய்ப்பு ஜவுளி துறையில் இப்போது நூல் பற்றாக்குறையால், நூல் விலையேற்றத்தால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைத்தீர்க்க என்.டி.சி.ஆலைகளை ஒன்றிய அரசு முழுமையாக இந்த நூல் தயாரிப்புக்காக எடுத்துக் கொள்ள வேண்டும்.

அப்படி எடுத்துக் கொண்டால் என்.டி.சி. ஆலை நிற்காமல் ஓடும். என்.டி.சி. ஆலையால் தொழிலாளிகளுக்கு வேலை கிடைக்கும். இதை செய்ய மறுத்து இன்றைக்கு வரையிலும் பலவற்றை இயக்கமால் நிறுத்தி வைத்திருக்கிறது ஒன்றிய அரசு. இது ஆபத்தான போக்காகும்.

இந்தப் போக்கு நிச்சயமாகக் கைவி டப்பட்டால்தான் இந்த நூல் விலை ஏற்றத்தால் மூச்சுத்திணறுகிற சிறு, குறு தொழில்கள், ஜவுளித் தொழில்கள் உயிர் பிழைக்கும். எனவே ஒன்றிய அரசு தன்னுடைய வெளிநாட்டு ஏற்றுமதிக்கு துணை செய்கிற கார்ப்பரேட் கொள்கைகளை கைவிட்டு என்.டி.சி. ஆலைகளை இயக்கி நூலை தயாரிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

### தஞ்சை மாநகர பொறுப்புச் செயலாளராக

## ஆர்.பி.முத்துக்குமரன் தேர்வு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை மாநகர குழு கூட்டம் தஞ் சாவூர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலக கூட்ட அரங்கில் மாநகர பொருளாளர் கே.மாரிமுத்து தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் ந. பால சுப்பிரமணியம் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஏஐடியூசி மாநில செயலாளர் சி.சந்திரகுமார், கே செல்வகுமார் ம.விஜயலட்சுமி மாநகர துணை செயலாளர் ஆர் பக்கிரிசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மாநகர செயலாளர் பி.கிருஷ்ண மூர்த்தி மறைவையொட்டி மாநகர பொறுப்பு செயலாளராக ஆர்.பி. முத்துக்குமரன் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

கூட்டத்தில், தஞ்சை மாநகரில் பாதாள சாக்கடை பணிகள் சரிவர மேற்கொள்ளப்படாததால் பாதாள சாக்கடைகளில் இருந்து பல இடங் களில் கழிவுநீர் வெளியேறி சாலைகளிலும் தெருக்களிலும் ஓடுகின்ற மோசமான நிலை உள்ளது. எனவே பாதாள சாக்கடை திட்டத்தை விரைவு படுத்த வேண்டும்.

தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் ஸ்மார்ட் சிட்டி பேருந்து நிலையமாக கட்டி முடிக்கப்பட்டு பல மாதங்களாகியும் திறக்கப்படாமல் உள்ளது. உடனடியாக ஸ்மார்ட் சிட்டி பேருந்து நிலையத்தை திறக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### பட்டியல் இனம் மற்றும் பட்டியல் பழங்குடி மக்களின்

## தொகுப்பு வீடுகளை புதியதாக கட்டித் தருக

### வி.தொ.ச. கோரிக்கை

தருமபுரி மாவட்டத்தில் 251 கிராம ஊராட்சியில் பட்டியல் இன மக்கள், பட்டியல் பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். இம் மக்களுக்கு 30 ஆண்டுகளுக்கு முன் பல்வேறு கிராமங்களில், ஆதிதிராவிடர்நல தனி வட்டாச்சியர் நிலம் ஆர்ஜிதம் செய்து, வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டது. அவ்விடங்களில் அன்னை இந்திரா நினைவு குடியிருப்பு தொகுப்பு வீடுகள் உள்ளாட்சி துறையின் மூலம் கட்டப்பட்டு வாழ்ந்து வருகின்றனர்.

இந்த தொகுப்பு வீடுகளில், ஒவ்வொரு வீட்டிலும் மூன்று குடும்பத்திற்கு மேல் வாழ்கின்றனர். இக்குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா கேட்டால், ஆதிதிராவிடர் தனி வட்டாச்சியர், தற்போது நிலம் ஆர்ஜிதம் செய்து பட்டா வழங்கும் திட்டம் இல்லை என்று தெரிவிக்கின்றார்.

இந்த தொகுப்பு வீடுகள் முப்பது ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டதால் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது.

வீடுகள் விழுந்து உயிரிழப்புகள் ஏற்படுவதற்கு முன்பு மாவட்ட நிர்வாகம் உடனடியாக பழைய தொகுப்பு வீடுகளில் வாழும் குடும்பங்களை கணக்கெடுத்து புதிய வீடுகளை உடனே கட்டித்தர உத்தரவு வழங்க வேண்டும். இவ்வாறு தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க தருமபுரி மாவட்டக்குழு சார்பில் மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பழங்குடி மக்களின் உரிமைக்காக ஆர்பாட்டம்

தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் மாநில நிர்வாகக்கழு முடிவுப்படி ஒன்றிய, மாநில அரசுகள் 2006 வன உரிமை சட்டத்தை நிறைவேற்ற வேண்டும், பழங்குடி மக்கள் சமூகச்சான்று வட்டாட்சியர் மூலம் வழங்க கேட்டும், மலைகளிலும் மலைசார்ந்த பகுதிகளிலும் வாழும் பழங்குடி மக்களுக்கு பட்டா வழங்க கேட்டும், கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழும் காணிக்காரர் பழங்குடி மக்களுக்கு திருவாங்கூர் சமஸ்தானம் 3600 ஏக்கர் நிலத்தை கஷ்டதானமாக கொடுத்ததை ஆக்கிரமிப்பிலிருந்து அகற்றி அந்த மக்களுக்கே வழங்க வேண்டும்.

சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் வட்டம் பாப்பநாயக்கன்பட்டி ஏழுபுளி கிராமம் ச.எண் 1/1ல் 2978 ஏக்கர் நிலத்தில் 300 பழங்குடி மக்கள் உழுது பயிரிட்டு வாழ்ந்து வந்தார்கள். அவர்களை அரசு வெளியேற்றிவிட்டது. அவர்கள் நீதிமன்றம் சென்று நிலத்தை அவர்களுக்கே வழங்கும்படி தீர்ப்பு வழங்கிய பிறகும் அரசு அதிகாரிகள் கொடுக்க மறுப்பதை கண்டித்தும் சேலம் மாவட்டம் ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சங்க மாவட்ட தலைவர் ஏ.அண்ணாமலை தலைமை வகித்தார். மாநில செயலாளர் ப. பரமசிவம் தொடக்க உரையாற்றினார். சிபிஐ மாவட்ட செயலாளர் ஏ.மோகன் வாழ்த்தி பேசினார். டி.வி.கருணைதாஸ், எஸ்.முருகன், ஜீவா, தும்பல், கனியன் பூங்குன்றன், ஆர்.செல்வராஜ், ஏழுபுளி ஏழுமலை ஆகியோர் கலந்து கொண்டனர். கல்வராயன் பகுதி செயலாளர் பி.செல்வராஜ் நன்றி கூறி முடித்து வைத்தார்.

## அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பில் ஈரோட்டில் ஆர்ப்பாட்டம்

ஏஐடியுசி உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் மற்றும் விவசாய சங்கங்கள் சார்பில் ஈரோட்டில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நாற்பத்தி நான்கு தொழிலாளர் சட்டங்களை நான்கு தொகுப்புகளாக்கி உள்ளதை ரத்து செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட 10 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து மத்திய அரசை வலியுறுத்தி ஏஐடியுசி, சிஐடியு, ஐஎன்டியுசி உள்ளிட்ட தொழிற் சங்கங்கள் மற்றும் பல்வேறு விவசாய சங்கங்கள் சார்பில் நவ.26 அன்று ஈரோட்டில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஈரோடு, சூரம்பட்டி நால்ரோடு அருகில் ஐஎன்டியூசி மாவட்டத் தலைவர் கே.ஆர்.தங்கராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏஐடியுசி மாநிலச் செயலாளர் எஸ்.சின்னசாமி, சிஐடியு எஸ்.சுப்ரமணியன், எச்எம்எஸ் பி.சண்முகம், எல்பிஎப் சே.கோபால், எம்எல்எப் எஸ்.எஸ்.காளியப்பன், எல்டியூசி ஏ.கோவிந்தராஜ், டிடிஎஸ்எப் டி.கே.பாலகிருஷ்ணன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில துணைத் தலைவர் சி.எம்.துளசிமணி மற்றும் எஸ்.முத்துசாமி, கி.வே.பொன்னையன், ஆர்.பி.சண்முகம் உள்ளிட்டோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட பொருளாளர் எஸ்.டி.பிரபாகரன், ஈரோடு வட்டாரப் பொருளாளர் என்.ரமணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## நாகாலாந்தில்
# 15 பேர் படுகொலை

### தேசிய செயற்குழு கண்டனம்

நாகாலாந்தில் 15 அப்பாவி பொது மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டதை கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வெளி யிட்டுள்ள அறிக்கை பின்வருமாறு:

நாகாலாந்தில் 15 அப்பாவி பொது மக்கள் மற்றும் ஒரு பாதுகாப்பு படை வீரர் சுட்டுக் கொல்லப்பட்டதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு கண்டிக்கிறது.

ஜம்மு காஷ்மீர் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில் இதுபோல் பொதுமக்கள் கொல்லப்படுவது மற்றும் ஒன்றிய உளவுத்துறையின் தோல்வி குறித்தும் ஒன்றிய உள்துறை அமைச்சர் நாட்டிற்கு பதில் அளிக்க வேண்டும். இந்தச் சம்பவம் குறித்து பாரபட்ச மற்ற விசாரணை நடத்த வேண்டும் என்று கட்சி வலியுறுத்துகிறது. இந்த விஷயம் தொடர்பாக நிலவி வரும் வெளிப்படைத்தன்மையற்ற சூழலுக்கு அரசாங்கமும், பிரத மரும், உள்துறை அமைச்சரும் பொறுப்பேற்க வேண்டும். வடகிழக்கு இந்தியாவில நிலவி வரும் அரசியல் குழப்பங்களுக்கு காரணமான ஆயு தப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும். காவல் துறையும், ராணுவமும் மக்க ளின் பிரச்சினைகளைத் தீர்க்க முடி யாது என்பதை அரசாங்கம் உணர வேண் டிய தருணம் வந்து விட்டதாக கட்சி கருதுகிறது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



## தோழர் கிருஷ்ணையர் மறைவு

தஞ்சை மாவட்டம் அம்மாபேட்டையில் வசித்து வந்த, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர், நில மீட்புப் போராட்டத்திற்காக சிறை சென்ற தோழர் கிருஷ்ணையர் மறைவுற்றார். தஞ்சை ராஜுவ் நகரில் அவரது உடலுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அம்மாபேட்டை ஒன்றிய குழு சார்பிலும், நகரகுழு சார்பிலும் அஞ் சலி செலுத்தப்பட்டது.

## கைத்தறிப்பட்டு மற்றும் உற்பத்தி பொருள்களுக்கு விதிக்கப்பட்ட
# ஜி.எஸ்.டி. வரி உயர்வை கண்டித்து ஆர்ப்பாட்டம்





கைத்தறி பட்டு மற்றும் உற்பத்தி பொருள்களுக்கு விதிக்கப்பட்ட 5 சதவீத ஜி.எஸ்.டி. வரியை, 12 சதவீதமாக உயர்த்தக் கூடாது, ஜி.எஸ்.டி. வரியிலிருந்து முழுமையான விலக்கு காதிக்கு வழங்கியது போல், விலக்கு அளிக்க கோரி ஒன்றிய, மாநில அரசுகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**திருபுவனம்:** தஞ்சாவூர் மாவட்டம் திருபுவனம், சன்னதி தெருவில் அனைத்து பட்டு கைத்தறி நெசவு குழு பாதுகாப்பு சார்பில் கடையடைப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சில்க் சிட்டி தலைவர் எல்.சேதுராமன் தலைமை தாங்கினார். கும்பகோணம் ஜவுளி உற்பத்தியாளர் சங்க தலைவர் கோகுல், செயலாளர் ராயா கோவிந்தராஜன், அய்யம்பேட்டை பட்டு உற்பத்தியாளர் சங்க தலைவர் கிருஷ்ணமூர்த்தி, ஏஐடியூசி மாவட்ட செயலாளர் ஆர்.தில்லைவனம், சிஐடியூ மாவட்ட துணை செயலாளர் எஸ்.ஜீவா பாரதி, த.மா. கா. தலைவர் எம்.நாராயணசாமி, ஏஐடியூசி சம்மேளன மாநில தலைவர் கோ.மணிமூர்த்தி, மாவட்ட பொருளாளர் என்.எஸ்.ஹரிதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

**சக்கம்பட்டி:** சக்கம்பட்டியில் நூல் விலை உயர்வை கண்டித்து ஜவுளி வியாபாரிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஜவுளி உற்பத்தியாளர் ஜி.எம்.குருசாமி முன்னிலை வகித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நகர செயலாளர் முனீஸ்வரன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் பரமேஸ்வரன், மாவட்டக்குழு உறுப்பினர் ஜனசக்தி பிரபாகரன் மற்றும் ஜவுளி வியாபாரிகள் பொதுமக்கள்கள் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

## மணப்பாறையில் மகாகவி பாரதியின் 140 வது பிறந்தநாள் விழா

மணப்பாறை கோவில்பட்டி சாலையில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலக வளாகத்தில், மகாகவி பாரதியின் 140 வது பிறந்தநாள் விழா தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் சார்பில் நடைபெற்றது. இவ் விழாவிற்கு தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் மாநில குழு உறுப்பினர் த.தங்கமணி தலைமை வகித்தார். மாவட்ட குழு உறுப்பினர் ஜனசக்தி உசேன் முன்னிலை வகித்தார். மாவட்ட தலைவர் சண்முகானந்தம், ஏ.ஐ.டி.யூ.சி. மாவட்ட துணைச் செயலாளர் சுப்ரமணியன், ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன் ஆகியோர் பாரதி திரு உருவப்படத்திற்கு மலர் துவி புகழ் உரை நிகழ்த்தினர்.

## வேலூரில் இந்திய மாதர் தேசிய சம்மேளனம் சார்பில் ஆர்ப்பாட்டம்

இந்திய மாதர் தேசிய சம்மேளனம் வேலூர் மாவட்ட குழு சார்பில் ஐந்து அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி வேலூர் அண்ணா கலையரங்கம் அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சம்மேளனத்தின் மாவட்ட செயலாளர் சரோஜா ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கினார். முன்னாள் எம்எல்ஏ லதா, மாவட்ட தலைவர் காவேரி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## செங்கோட்டையில் ப.மாணிக்கம் நூற்றாண்டு விழா பேரவை!

தென்காசி மாவட்டம் செங்கோட்டையில் தியாகசீலர் ப.மாணிக்கம் நூற்றாண்டு விழா பேரவை கூட்டம் மாவட்ட செயலாளர் த.இசக்கிதுரை தலைமையில் நடைபெற்றது, மாநில குழு உறுப்பினர்கள் பி.எஸ்.எஸ். போஸ், எஸ்.வேலாயுதம், ஏ.சாமி ஏஐடியூசி, எஸ்.சுந்தர் தாலுகா உதவி செயலாளர், சி.சுப்பிரமணியன் நகர செயலாளர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம், மாநில நிர்வாக குழு உறுப்பினர்கள் எஸ்.காசிவிஸ்வநாதன், எஸ்.அழகுமுத்துபாண்டியன், ஏஐடியூசி மாவட்ட செயலாளர் தி.சுப்பையா ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாவட்ட நிர்வாகிகள் ஏ.பரமசிவன், எம்.எஸ்.கிட்டப்பா, ஏ.பாலசுப்பிரமணியன், எஸ்.சமுத் திரம், பி.கந்தம்மாள் மற்றும் ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர் இரா. சமுத்திரக்கனி ஆகியோர் பங்கேற்றனர்.

## நிம்மேலி கிளை மாநாடு

நிம்மேலி கிளை மாநாடு எல்.சங்கரய்யா நினைவகத்தில் வி.நீதிமோகன் தலைமையில் நடைபெற்றது. என்.மூர்த்தி கொடியினை ஏற்றிவைத்தார். பி.திருமேணி வரவேற்புரையாற்றினார். எம்.பாரதி மோகன் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தினார். மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன் மாநாட்டை துவக்கி வைத்தார். ஒன்றிய செயலாளர் மு.செல்லப்பன், வி.ச.மாவட்ட செயலாளர் பி.வீரராஜ், மாவட்ட குழு உறுப்பினர் எஸ்.சுந்தரய்யா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கிளைச் செயலாளராக ப.ஜெயகுமார், துணைச் செயலாளர்களாக மூர்த்தி, பாண்டியன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.



## ஐசிஎ:ப் சார்பில் வே.துரைமாணிக்கம், ஆர்.சுசிலா குடும்ப நலநிதி

தோழர்கள் வே.துரைமாணிக்கம், ஆர்.சுசிலா ஆகியோரின் குடும்பநல நிதியாக தலா ரூ.5000த்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியனிடம், ஐசிஎஃப் பொதுச்செயலாளர் ஜி.சரவணகுமார், பொருளாளர் எஸ்.பாலாஜி ஆகியோர் வழங்கினர்.

## ஜனசக்தி சந்தா வழங்கும் நிகழ்ச்சி

தென்காசி மாவட்ட குழு சார்பில் 25 ஜனசக்தி ஆண்டு சந்தாவை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் அவர்களிடம் மாவட்ட ஜனசக்தி பொறுப்பாளர் இரா. சமுத்திரக்கனி வழங்கினார். மாநில நிர்வாக குழு உறுப்பினர்கள் எஸ்.காசிவிஸ்வநாதன், எஸ்.அழகுமுத்துபாண்டியன், மாவட்ட செயலாளர் த.இசக்கிதுரை ஆகியோர் உடனிருந்தனர்.

## மாரனேரி வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட
# விவசாயிகள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம்

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், மாரனேரி கிராமத்தில் அய்யனார் கோவில் ஏரிப் பகுதியில் மூன்று தலைமுறைகளாக சுமார் 80 ஆண்டுகளுக்கு மேலாக புறம்போக்கு நிலத்தில் பட்டா பெற்றவர்களும், உரிய குத்தகை அனுமதி பெற்று விவசாயம் செய்து வந்தவர்களும் ஆக சுமார் 97 குடும்பங்கள் 120 ஏக்கரில் விவசாயம் செய்து வருகின்றனர். உயர்நீதிமன்ற பொது அடிப்படையிலான ஏரி புறம்போக்கு ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என்ற தீர்ப்பின் அடிப்படையில் தஞ்சாவூர் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அலுவலக நிர்வாகம் விவசாயிகளை விவசாய நிலத்தில் இருந்து அப்புறப்படுத்தும் வேலைகளை எடுத்து வந்தது. விவசாயம் செய்த விவசா யிகள் மாரனேரி வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கூட்டமைப்பு உருவாக்கி பொதுப்பணித்துறை அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர் உள்ளிட்டு பல முறை மனுக்கள் அளித்தும், பல்வேறு இயக்கங்கள் நடத்தியும், விவசா யிகள் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அவர்களை விவசாய நிலத்திலிருந்து வெளியேற்றும் நடவடிக்கை தொடர்ந்தது.

இதனைக் கண்டித்து டி.நடராஜன், கே.ரவிச்சந்திரன் தலைமையில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறுகிறது. 65 வயதுள்ள முதியவர் மூக்கையன் உண்ணாவிரதப் பந்தலில் மயங்கி விழுந்தார்.அவர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சேர்த்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார்.

விவசாயிகளுக்கு ஆதரவாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பூதலூர் ஒன்றிய செயலாளர் ஆர்.ராமச்சந்திரன், இடதுசாரிகள் பொது மேடை ஒருங்கிணைப்பாளர் துரை.மதிவாணன், சிபிஐ ஒன்றிய குழு உறுப்பினர் எம். துரைராஜ், அனைத்திந்திய இளைஞர்பெருமன்ற மாவட்ட செயலாளர் பொறியாளர் ஆர்.முகில் உள்ளிட்டோர் போராட்டத்தை வாழ்த்திப் பேசி ஆதரவு தெரிவித்தனர்.

## புதிய வகை ஒமைக்ரான் வைரஸ் பரவுதல்:
# டாஸ்மாக் பணியாளர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கிடுக

தமிழக அரசுக்கு தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர்கள் சங்கம் வேண்டுகோள் கொரோனோ வைர ஸைத் தொடர்ந்து புதிய வகை கொரோனா நோய் தொற்றான ஒமைக்ரான் வைரஸ் தொற்று பரவி வருவதாக உலக சுகாதார நிறு வனம் எச்சரித்துள்ளது. இந்த வகை நோய் தொற்றிலிருந்து டாஸ் மாக் பணியாளர்களை பாது காக்க டாஸ்மாக் நிர்வாகம் முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். இது தொடர்பாக, தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர்கள் சங்கம் ஏ.ஐ.டி.யூசி. சார்பில் மாண்புமிகு முதல்வர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை கூடுதல் தலை மைச் செயலாளர், டாஸ்மாக் மேலாண் இயக்குநர் ஆகியோருக்கு கோரிக்கை மனு அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அறிக்கையில் கூறி யுள்ளார்.

## திருமண விழாவில் ஜனசக்தி வளர்ச்சி நிதி



சேலம் மாவட்டம், சூரமங்கலம் மண் டலச் செயலாளர் ஆ.ராஜமாணிக்கம் பேத்தியும், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் இரா.ரமேஷ்–ன் அக்காள் மகளும், பி.பெருமாள்– பி.சுமதி ஆகியோரின் மகளுமான டாக்டர். பி.சந்தியா என்கிற மண மகளுக்கும், ஆண்டிப்பட்டி ஏ.செல்வம் –என்.கண்ணம்மாள் ஆகியோரின் மகன் டாக்டர் எஸ்.கோபி என்கிற மண மகனுக்கும் திருமணம் நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி யின் தேசிய நிர்வாகக்குழு உறுப் பினர் சி.மகேந்திரன், மாநில செயற் குழு உறுப்பினர் ந.நஞ்சப்பன், மாவட்ட செயலாளர் ஏ.மோகன், மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் த.லெனின், இளைஞர் பெருமன்றப் பொதுச்செயலாளர் இரா.திருமலை, தலைவர் ஆப்தாப் ஆலம்கான், மாநில செயலாளர் க.பாரதி, சிபிஐ மாநிலக்குழு உறுப்பினர்கள் வி. பரமசிவம், பழ.ஜீவானந்தம், கே.வி. ராஜேந்திரன், மாவட்ட பொரு ளாளர் எம்.ராமன் உட்பட ஏராள மான கட்சித் தோழர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த் தினர். மணமக்கள் சார்பாக ஜனசக்தி வளர்ச்சி நிதி ரூ.5,000 வழங்கப் பட்டது.

# விவசாயிகள் போராட்ட பூமியில் 25 நாட்கள் கொள்ளையனே வெளியேறு

இந்திய அளவில் மட்டுமல்ல, உலக அளவில் ஈர்க்கப்பட்டது டெல்லி விவசாயிகள் போராட்டம். இந்தப் போராட்டம் நீண்ட நாள் தாக்குப் பிடிக்குமா? என்ற கேள்வி எல்லோர் மத்தியிலும் இருந்தது.

நீண்ட நாள் தாக்குப் பிடிக்காது என்ற மோடி அரசின் எதிர்பார்ப்பில் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டு முழுமையான வெற்றியோடு போராட்டத்தை முடித்திருக்கிறார்கள் விவசாயிகள். போராட்ட அனுபவம் நிறைந்த அமைப்புகளோ, அரசியல் பின்னணியோ, நேரடி வழிகாட்டுதலோ இல்லாமல் ஓராண்டு காலம் நடந்த போராட்டம் இது. எனவே, இந்தப் போராட்டம் வெற்றி பெறுமா என்ற கேள்வி எழுந்தது.




விவசாயிகள் போராட்டம் நிச்சயம் வெற்றி பெறும். தோல்வி அடைவதற்கான வாய்ப்பே இல்லை என்று அறுதியிட்டு சொன்னார் நூலாசிரியர் சி.மகேந்திரன். 25 நாட்கள் விவசாயிகளுடன் தங்கியிருந்த நேரடி அனுபவத்தின் மூலம் அதை வெளிப்படுத்தி இருக்கிறார். நமக்கிருக்கிற சந்தேகம் நூலாசிரியருக்கு இல்லையா? அவருக்கும் இந்த சந்தேகம் இருந்தது. இது பற்றி போராட்டக்காரர்களிடம் கேள்விகளை எழுப்பி கேட்டறிந்திருக்கிறார். வேளாண் விரோதச் சட்டத்தால் விவசாயிகள் பாதிப்பு, இதில் உள்ள அரசியல் பற்றியத் தெளிவு, போராட்டத் தயாரிப்பு, போராட்ட முறை, நீண்ட நாள் தாக்குப் பிடித்தல், போராட்ட ஒற்றுமை போன்ற பல்வேறு அம்சங்களை நேரடியாக பார்த்த பின்பு, இந்தப் போராட்டம் வெற்றியைநோக்கி பயணிக்கும்; தோல்விக்கு வாய்ப்பில்லை என்ற தனது நம்பிக்கையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

சுதந்திரத்திற்கு பகத்சிங் உயிர். வேளாண் விரோத சட்டங்களுக்கு எதிரான போராட்டத்திற்கு விவசாயிகளாகிய எங்கள் உயிர். அதாவது, விவசாயிகள் கோரிக்கை ஏற்பா? அல்லது விவசாயிகள் உயிர் பறிப்பா? என்ற அளவிற்கு போராட்ட உறுதி இருந்திருக்கிறது என்பதை நூல் வெளிப்படுத்துகிறது. இருப்பிடம் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய தேவைகளுக்கான தயாரிப்பு, குளிரையும், கொரோனா தொற்றையும் எதிர்கொண்ட பாங்கு, டெல்லியை ஒட்டி ஒரு அதிசய உலகம் அமைப்பு, சுற்றியுள்ள ஏழை மக்களுக்கு உணவு, குழந்தைகளுக்கு உணவு, உடைகளோடு கல்வி, போன்ற பன்முகத் தன்மை கொண்ட அம்சங்கள் அடங்கியதாக விளங்கிய போராட்டத்தை இந்நூல் விவரிக்கிறது.

இந்தியப் பண்பாடு இழையோட இந்தியாவின் இரண்டாவது விடுதலைப் போர் என இந்தப் போராட்டத்தை விவரிக்கிறது நூல். விவசாய அமைப்புகள்தான் இந்த நூலை வெளிக்கொண்டு வர வேண்டும் என்பதல்ல, நாங்களும் கொண்டு வருவோம் என்று நக்கீரன் முன்வந்திருப்பது சிறப்பானது. அனைவரும் தவறாமல் வாங்கிப் படிக்க வேண்டிய நூல்.

**– சுதந்திரன்**


**நூலாசிரியர் :** சி.மகேந்திரன்
**வெளியீடு :** நக்கீரன் பப்ளிகேஷன்ஸ், 105, ஜானிஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை–14, தொடர்புக்கு: 044 43993029
**பக்கங்கள் :** 256 **விலை :** ரூ.250


## நூல் நயம்

# சிறையில் துளிர்த்த சிந்தனை அரும்புகள்

தமிழ்நாட்டின் வீரார்ந்த கம்யூனிஸ்ட் மரபில் தலைமையானவர் பாலதண்டாயுதம் .அவரது எழுத்தும், பேச்சும் ஒவ்வொரு இளைஞனையும் சூடேற்றும்,நடவடிக்கைகளுக்கு தூண்டும்.வாழ்வின் பெரும்பகுதியை புரட்சிகர நடவடிக்கைகளில் ஈடுபட்டு சிறையில் கழித்தவர் பாலன் . சிறையால் அவரது சிந்தனையை முடக்கிப் போட முடியவில்லை என்பதற்கு சாட்சியே !, சிறையில் துளிர்த்த சிந்தனை அரும்புகள்என்னும் இந்நூல்.

பொது வாழ்வையே உயிர்மூச்சாகக் கொண்டு சூறாவளியாக சுழன்று மக்களைத் திரட்டுவதிலும், போராடுவதுதிலும் தன்னிகரற்ற தலைவராக விளங்கியவர். தியாகமும், வீரமும் செறிந்த போராட்ட வாழ்க்கைக்கு சொந்தக்காரர், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அவர் நடத்திய மாணவர் போராட்டத்தின் மூலம் நாடெங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தியவர். நெல்லை சதி வழக்கில் முதல் குற்றவாளியாக தண்டிக்கப்பட்டு ஆயுள் தண்டனை கைதியாக சிறையில் அடைக்கப்பட்டார்.




மதுரை, சென்னை, நாக்பூர் , வேலூர், சேலம், கோவை என பல மத்திய சிறைகளில் வாடியவர். எவ்வளவு தீயில் இட் டாலும் தங்கம் கருத்து போவதில்லை. மாறாக , ஜொலிக்கவே செய்யும் என்பதை போல கம்யூனிஸ்ட் வாழ்க்கையில் பிரகாசித்தவர் பாலன்.

“அழிக்க முடியாத அபகரிக்க முடியாத செல்வங்கள் கல்வி, பண்பு செல்வம். உலகத்தையே வெல்லும் சக்தி படைத்தது மனிதத்தன்மை “.

நீ எந்தத் துறையில் பணியாற்றிக் கொண்டு இருந்தாலும், மனித குல விடுதலை நோக்கி எந்தப் பதுங்கு குழிக்குள்ளிருந்து போராடிக் கொண்டு இருந்தாலும், சர்வாதிகார ஆட்சியின்பிடியில் சங்கிலியால் பிணைக்கப்பட்டு கிடந்தாலும், நீ உனது எண்ணங்களை செயல்களை தினமும் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

மாபெரும் ஆசானாகிய லெனினுடைய புரட்சிகர படையின் கௌரவத்துக்குரிய ஒரு போர் வீரனாக இருக்கும் தகுதி படைத்தவனாக இருக்கிறேனா என்று ?

வாழ்வின் இளமைக்காலம் முழுவதும் சிறைக்கு தத்தமளித்த தலைவனின் சிந்தனைகள் இவை.

“சிறையில் துளிர்த்த சிந்தனை அரும்புகள்” என தோழர் பாலதண்டாயுதம் அவர்களின் சிறை குறிப்புகளை ப.பா. ரமணி அவர்கள் தொகுத்திருக்கிறார். இன் நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்.

**- இன்சுவை பாரதி**


**தொகுப்பாசிரியர் :** ப.பா.ரமணி
**வெளியீடு :** இந்திய கலாச்சார நட்புறவுக் கழகம், கோவை தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம், கோவை, செல்: 9442178974
**பக்கங்கள் :** 180 **விலை :** ரூ.200


சுழலும் உலகம்

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

## கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளிடையே




# ஒத்துழைப்பு அதிகரிக்க வேண்டும்

### சர்வதேச கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள் அமைப்பின் (IMCWP) சிறப்பு இணையவழி மாநாட்டில் வியட்நாம் அறைகூவல்

கோவிட் 19 பெருந்தொற்று காரணமாக IMCWP அமைப்பின் 22–வது கூட்டம் 2022ஆம் ஆண்டிற்கு ஒத்தி வைக்கப்பட்டது. எனினும், கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள், அவற்றின் அனுபவப்பகிர்வு, ஆலோசனைகள், கூட்டு நடவடிக்கை ஆகியவற்றை மேலும் அதிகரிக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு டிசம்பர் 10, 11 மற்றும் 12 ஆகிய நாட்களில் ஒரு சிறப்பு இணையவழி மாநாடு நடைபெற்றது.

கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் துருக்கி கம்யூனிஸ்ட் கட்சி இணைந்து இந்த இணையவழி மாநாட்டைச் சிறப்பாக ஏற்பாடு செய்தனர்.

சர்வதேச சூழல், ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிப் போக்குகள், கோவிட் 19 பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட இன்னல்கள், உள்நாட்டு அரசியல் பொருளாதார மேம்பாடு மற்றும் வருங்காலத்திற்கான சோசலிச சமுதாய கட்டமைப்பு குறித்த வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துக்களும் இம்மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டன. அதன் சுருக்கம் பின்வருமாறு:

தற்போதைய சர்வதேச சூழல் மிக வேகமாக மாற்றமடைந்து வருகிறது. இந்த மாற்றம் மிகவும் சிக்கலானதாக, பல சவால்களை உள்ளடக்கியதாக அமைகிறது. அமைதி, தேசிய விடுதலை, ஜனநாயகம் மற்றும் முன்னேற்றம் ஆகியவை தற்போதைய அரசியல் போக்குகளாக இருப்பினும், அவை எண்ணற்ற இடர்பாடுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. வளர்ந்த நாடுகளுக்கு இடையேயான அதிகாரப் போட்டி, ஆயுதப் போட்டி, பிறநாட்டு விவகாரங்களில் தலையீடு செய்வது ஆகியவற்றைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். இவை தவிர உள்நாட்டு ரீதியிலான முரண்பாடுகள் மற்றும் மோதல்கள் முன்பைவிட மிகச் சிக்கலான வடிவங்களில் வெளிப்படுகின்றன.

ஆசிய பசிபிக் பகுதியைப் பொறுத்தவரையில், ஆசியான் அமைப்பானது பல்வேறு துறைகளில் அதன் உறுப்பு நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்தி இருப்பதோடு, சர்வதேச அளவில் பல நாடுகள் மற்றும் அமைப்புகளுக்கு இடையே இணைப்பை உருவாக்கியுள்ளது. அதேநேரத்தில் தென்கிழக்கு ஆசிய பகுதியானது வளர்ந்த நாடுகளிடையே நடைபெற்று வரும் தீவிர அதிகாரப் போட்டியின் மையப்புள்ளியாக மாறியுள்ளது. கோவிட் 19 பெருந்தொற்று பல லட்சம் மக்களைப் பலி கொண்ட சுகாதார நெருக்கடி மட்டுமல்ல, அனைவரது வாழ்க்கையிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள தீவிர பொருளாதார நெருக்கடி ஆகும். மாபெரும் சரிவைச் சந்தித்துள்ள உலகப் பொருளாதாரம் ஏழை மற்றும் பணக்காரர்களுக்கு இடையிலான இடைவெளியை அதிகப்படுத்தியுள்ளது; சமூக சமத்துவமின்மையையும் ஆழப்படுத்தி உள்ளது.

வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் 13 ஆவது தேசிய மாநாடு இந்த ஆண்டின் தொடக்கத்தில் நடை பெற்றது. இம்மாநாட்டில் கடந்த 30 ஆண்டுகளில் நடைமுறைப் படுத்தப்பட்ட தேசிய நிர்மாணத்தைப் பற்றியும் ஆழமாக ஆய்வு செய்யப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டுதலின்படி முன்னேறிய வியட்நாம் பொருளாதாரம், ஆண்டுக்கு சராசரியாக 7 சதவீத வளர்ச்சியை அடைந்தது. 1993ஆம் ஆண்டில் 58 சதவீதமாக இருந்த வறுமை குறியீடு 2020ஆம் ஆண்டு 2.75% என்று குறைந்தது. இதன் காரணமாக வறுமை ஒழிப்பு என்ற ஐநா சபையின் (MDG) லட்சியத்தை அடைந்த வெகு சில நாடுகளில் ஒன்றாக வியட்நாம் ஒளி வீசுகிறது. 2045 ஆம் ஆண்டில் (வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் நூற்றாண்டு) தற்போதைய வியட்நாம் சோஷலிச குடியரசு ஒரு வளர்ந்த நாடாக உருவாக வேண்டும் என்ற இலக்குடன் முன்னேறி வருகிறது.


சர்வதேச சமுதாயத்தின் பொறுப்புணர்வு மிக்க உறுப்பு நாடாக வியட்நாம் திகழ்கிறது. வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி உன்னதமான சர்வதேசியத்தை முன்னெடுக்கிறது. உலகம் முழுவதும் உள்ள உழைக்கும் மக்களின் நியாயமான போராட்டங்களுக்கு கட்சி ஆதரவு தெரிவிக்கிறது; கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகள், ஜனநாயக, முற்போக்கு மற்றும் சமாதான, சகவாழ்வுக் கான அமைப்புகளுக்கு இடையே மேலும் ஒத்துழைப்பு பெருக வேண்டும் என்று வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல் விடுத்துள்ளது.

# எழுச்சியுறும் ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி

ரஷ்ய நாட்டின் முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான அலெக்ஸி நவால்னி, கிரெம்ளின் ஆதிக்கத்திற்கு அடிபணியாத அரசியல் கட்சியினருக்கு ஆதரவு திரட்டுவதற்காக நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

நாட்டின் பல பகுதிகளில் எழுச்சிமிகு மக்கள் போராட்டங்கள் நடைபெற்று வந்தன. பத்திரிகையாளர்களும், அரசியல் ஆய்வாளர்களும் ஆளும் தரப்பு நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்பவர்களாக இல்லை. இது போன்ற சூழலுக்கு இடையே நவால்னி சிறையில் அடைக்கப்பட்டார். அவர் தலைமையில் நடைபெற்று வந்த போராட்ட இயக்கமும் நசுக்கப்பட்டது. அவரது ‘ஊழல் எதிர்ப்பு’ நிலைப் பாடு தீவிரவாதம் என்ற முத்திரை குத்தப்பட்டு சட்டவிரோதம் என்று ஒடுக்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகள் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டார்கள் அல்லது நாடு கடத்தப்பட்டார்கள்.

இத்தகைய மோசமான அரசியல் சூழலில், ஒரே ஒரு அமைப்பு மட்டும் அனைத்துவித அடக்குமுறைகளையும் எதிர்கொண்டு மீண்டெழுந்தது: கிரெம்ளினுக்கு எதிரான சக்தியாக ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி மீண்டெழுந்தது.



கடந்த செப்டம்பர் மாதம் நடைபெற்ற ரஷ்ய நாடாளுமன்றம் டூமாவுக்கு நடைபெற்ற தேர்தலில் கம்யூனிஸ்ட் வேட்பாளர்கள் மொத்தமாக 18.9 சதவீதம் வாக்குகளைப் பெற்றனர் என்று அறிவிக்கப்பட்டது. தேர்தல் முறைகேடுகள் காரணமாக கம்யூனிஸ்டுகள் இந்தத் தேர்தல் முடிவுகளை ஏற்க மறுத்துவிட்டனர். நியாயமான மற்றும் சுதந்திரமான தேர்தல் நடைபெற்றிருந்தால் ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி 30 சதவீதத்திற்கு மேல் வாக்குகளைப் பெற்று இருக்கும் என்று அரசியல் நோக்கர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

யுகப்புரட்சி நடந்த ரஷ்ய மண்ணில் கம்யூனிஸ்டுகளின் எழுச்சியை எந்த சக்தியாலும் தடுத்துவிட முடியாது என்னும் உத்வேகத்துடன் ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி அடுத்த கட்ட நகர்வுகளை மேற்கொண்டு வருகிறது.



இரா.முத்தரசன்

# இல்லந்தோறும்



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்







## பேரன்புமிக்க தோழர்களே!

டிசம்பர் 26, நம் வாழ்க்கையில் மறக்கவொன்னாத மகத்தான நாளாகும். ஆம்! அன்றுதான் நாட்டின் விடிவெள்ளியாக, காலனி ஆதிக்கத்திற்கு எதிராக, ஏகாதிபத்தியத்திற்கு எதிராக, பரிபூரண சுதந்திரத்திற்காக, அனைவருக்கும் நல்வாழ்வு அளித்திடும் பொதுவுடமை சமுதாயம் காண போராடும் பேரியக்கமாக முரசு கொட்டி பிறந்தது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

கான்பூர் நகரில் 1925 டிசம்பர் 25 முதல் நடைபெற்ற அகில இந்திய அளவிலான முதல் மாநாட்டின் இரண்டாம் நாள் டிசம்பர் 26 அன்று கட்சிக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்று பெயர் சூட்டப்பட்டது.

கட்சியின் தொடக்க நாளாக, அமைப்பு தினமாக டிசம்பர் 26 ஆம் நாளை அன்றுமுதல் இன்று வரை நமது கட்சி கொண்டாடி வருகின்றது.

கட்சித் தொடங்கி 96 ஆண்டுகள் நிறைவு பெற்று 97 ஆம் ஆண்டில் வரும் டிசம்பர் 26 இல் அடியெடுத்து வைக் கின்றது.

வரும் 2025ல் நூற்றாண்டு காண இருக்கின்றோம். இதே நாள் நமது மூத்த தலைவர் மதிப்பிற்குரிய தோழர் இரா. நல்லகண்ணு அவர்களின் பிறந்த நாளாகும். கட்சிப் பிறந் ததும், தோழர் ஆர்.என்.கே.பிறந்ததும் ஒரே ஆண்டில், ஒரே நாள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அன்றைய தினம்தான் நமது மதிப்பிற்குரிய தலைவர் தோழர் கே.டி.கே.தங்கமணி நினைவு நாளாகும்.

இத்தகைய நாளில் நமது கட்சியின் போர்வாளாக போற்றப்படும் ஜனசக்தி இதழின் விற்பனை நாளாக ஆண்டு தோறும் மேற்கொண்டு வருகின்றோம்.

ஆயிரக்கணக்கான பிரதிகளை நாம் டிசம்பர் 26ஆம் நாள் மக்களிடத்தில் கொண்டு செல்லவேண்டும்.

சிறப்பிதழாக வரவிருக்கின்ற இதழின் விலை ரூ.15 மட்டுமே. அரிய பல கட்டுரைகள் வெளிவர உள்ள சிறப்பிதழ் களை இல்லம் தோறும் கொண்டு சென்றிட நமது மாவட்ட அமைப் புகள் திட்டமிட்டுள்து மிகுந்த மகிழ்ச்சிக்குரியது.

தேவையான ஜனசக்தி பிரதிகள் குறித்து மாவட்டங்கள் கூறியவாறு சிறப்பிதழாக அனுப்பி வைக்கப்படும்.

மாவட்டத்திலிருந்து இடைநிலை, கிளை மற்றும் சிறப்பு கிளைகள் இதழைப் பெற்று டிசம்பர் 26 இல் இல்லம் தோறும் சென்று விற்பனை இயக்கத்தை பேரியக்கமாக மேற்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு இல்லத்திற்கும் ஜனசக்தி இதழ் சென்ற டைவதன் மூலம் நம்மை அவர்கள் அறியச் செய்ய இயலும்.

இத்தகைய மகத்தான பணிகளை நமது ஊழியர்களும், உறுப்பினர்களும் சிரமேற்கொண்டு செவ்வனே செய்து முடிப்பார்கள் என்று நமது கட்சிக்கு நம்பிக்கை உண்டு.

சென்ற ஆண்டு 2020 டிசம்பர் 26ஆம் நாள் மேற் கொண்ட விற்பனை இயக்கம் மகத்தான வெற்றி பெற்ற அனுபவத்தினை கருத்தில் கொண்டு, சென்ற ஆண்டைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையில் மக்களை சந்தித்து விற்பனையை அதிகரிப்பது மகத்தான முன்னேற்றத்தை காண நாம் பெரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

பேராசான் ஜீவா அவர்களால் 1937 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஜனசக்தி இன்றளவும் நில்லாமல் நிலைத்து, நீடித்து வரும் அரசியல் ஏடு என்பதை நாம் நன்கறிவோம். கடந்த எண்பத்து நான்கு ஆண்டுகாலமாக ஜனசக்தி இதழ் தொடர்ந்து வருகின்றது என்று நாம் பெருமிதம் கொள்ளும் அதே வேளையில்,

கடந்து வந்த பாதை மிக மிக கடினமான பாதை என்பதனை நெஞ்சில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

ஒரு முறை அல்ல, பலமுறை ஆட்சியாளர்களால் ஜனசக்தி யும் தடைசெய்யப்பட்டது. ஒவ்வொரு தடையாக தகர்த்து, தகர்த்து மீண்டும், மீண்டும் வெற்றி நட்சத்திரம் போல் ஜொலித்து வெளிவந்துகொண்டிருக்கிறது.

தடை செய்யப்படாத காலத்தில்கூட அரசை விமர்சித்து கட்டுரைகள் வந்தபோது, எவரும் படித்து விடக்கூடாது என்பதற்காக பறிமுதல் செய்யப்பட்டது.

கடுமையான பொருளாதார நெருக்கடிகளையும் எதிர் கொள்ள வேண்டிய நிலைமை, தடை, பறிமுதல், நிதி நெருக் கடி என பலவற்றையும் எதிர்கொண்டு தங்குதடையின்றி வெளிவந்து கொண்டுள்ள ஜனசக்தி மேலும் பலப்பட வேண்டும். அனைத்து மக்களுக்கான இதழாக கொண்டு சென்றிட பெரும் முயற்சிகளை நாம் இடைவிடாது மேற்கொள்ள வேண் டும். அத்தகைய பெரு முயற்சியின் ஒரு பகுதியே ஜனசக்தி விற்பனை இயக்கம் என்ற மகத்தான இயக்கமாகும்.

இத்தகைய அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பணியில் அனைத்து தோழர்களும் பங்கேற்பீர்!

வீடுகள், கடைகள், கல்வி நிறுவனங்கள், நீதிமன்றங்கள், மருத்துவமனைகள் என்று அனைத்து பகுதியினரையும் சந்திக்கும் அரிய வாய்ப்பாக இதனை பயன்படுத்தி, ஜனசக்தி இதழின் விற்பனை இயக்கத்தை வெற்றி பெற செய்வீர்!

ஜனசக்தி சிறப்பிதழுடன், ஜனசக்தி காலண்டரும் வரு கின்றது. அதன் விலையும் ரூ.15 மட்டுமே.

காலண்டர் தற்போது விலை கொடுத்து வாங்க வேண்டிய அவசியமில்லை. சல்லி காசு இல்லாமல் நம் இல்லங்களுக்கு இலவசமாக காலண்டர் நிரம்பவே வருகின்றது.

நிறுவனங்கள் போட்டி போட்டுக்கொண்டு தினசரி மற்றும் மாதாந்திர காலண்டர்களை வழங்கி வருகின்றனர் என்பதை நாம் அறியாதவர்கள் அல்ல. ஆனால், நமது ஜனசக்தி வெளி யிடுகின்ற மாதாந்திர காலண்டர் முற்றிலும் வேறுபட்டது. வரலாற்றை எடுத்துக் கூறுகின்ற மகத்தான நாள்காட்டி.

நாட்டின் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நாட்கள்.

நாட்டின் தலைவர்கள், கம்யூனிஸ்ட் பேரியக்க தலைவர்கள் பிறந்த நாள் மற்றும் நினைவு நாட்களை மாதவாரியாக, நாள் வாரியாக குறிப்பிடுகின்ற மகத்தான பொக்கிஷமாகும்.

மதிப்புமிக்க தலைவர்களின் அழகிய படங்கள் வண்ண மயமான கலரில் அச்சிடப்பட்டுள்ளது.

நம் கட்சி உறுப்பினர்கள் இல்லம் அலங்கரிக்க உள்ள அழ கியநாள் காட்டி, சென்ற ஆண்டு வெளியிட்ட போது 10,000 காலண்டர்கள் போதும் என்ற நிலை.

காலண்டர் வெளிவந்த பின்பு ஒவ்வொரு மாவட்டமும் தங் களுக்கு மேலும் தேவையென கோரினார்கள்.

25,000 காலண்டர்கள் பின்னர் அச்சிடப்பட்டு வழங்கப் பட்டன. அதற்கு மேலும் மாவட்டங்கள் கோரியபோதும் அச்சிட இயலவில்லை. அத்தகைய நிலை இவ்வாண்டு வராமல் முன்னதாகவே தங்களுக்கு தேவையான காலண்டர்களுக்கு, ஜனசக்தி சிறப்பிதழுக்கு தகவல் தெரிவித்து காலத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

நமது கட்சியின் ஊழியர்கள், உறுப்பினர்கள், ஒவ்வொரு வருடைய இல்லத்திலும் ஜனசக்தி காலண்டர் அலங்கரிக்க வேண்டும்.

ஜனசக்தி விற்பனை இயக்கம், காலண்டர் விற்பனை இயக்கம் ஆகிய இரு பெரும் கடமைகளை நிறைவேற்றிட, செவ்வனே நிறைவேற்றிட ஆயத்தமாவீர்! இன்றே, இப் போதே ஆயத்தமாவீர்! வணக்கம்

தோழமைமிக்க

**இரா.முத்தரசன்**










## வலை வீச்சு



JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 18.12.2021 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

## கட்டடத் தொழிலாளர் நல வாரியத்தில் உள்ள

# ரூ.4000 கோடியை அபகரிக்க மோடி அரசு சதி

**தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் மாநில கோரிக்கை மாநாடு, கடந்த 7. 12. 2021 ஆம் தேதி சென்னை ராயப்பேட்டையில் உள்ள ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த தோழர்.ப. மாணிக்கம் நூற்றாண்டு அரங்கத்தில் தோழர் நா.பெரியசாமி தலைமையில் நடைபெற்றது.**



இந்த மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய தமிழ்நாடு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் அவர்கள் பேசும்போது, மாண்புமிகு தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களின் அரசு 200 நாட்களில் 1,200 திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. உடலுழைப்பு தொழிலாளர் சட்டம் உருவாகக் காரணமாக இருந்த கே. டி. கே. தங்கமணி அவர்களையும் எம்.கல்யாணசுந்தரம் அவர்களையும் நாம் மறந்துவிட முடியாது.

இந்த கட்டிடத் தொழிலாளர் சங்கம் 17 லட்சம் உறுப்பினர்களை கொண்டு இருக்கிறது என்றால், அதற்கு இந்தத் தலைவர்களின் உழைப்பு மிக முக்கிய காரணம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாநாட்டில் இருபத்தியோரு கோரிக்கைகள் கொடுத்துள்ளார்கள்.

அவை அனைத்தையும் நான் படித்து விட்டேன். இந்த கோரிக்கைகளை மாண்புமிகு. முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்வேன்.

மாநாட்டில் கொடுக்கப் பட்டுள்ள இருபத்தியோரு கோரிக்கைகளும் நியாயமான கோரிக்கைகள் இவை அனைத்தையும் நிச்சயமாக நிறைவேற்றுவோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### இரா.முத்தரசன்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் பேசும்போது, எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் குறிப்பிட்ட நேரத்தில் இந்த மாநாட்டில் திரண்டு இருப்பதன் மூலம் மாநாடு வெற்றி பெற்றுள்ளது என்று சொல்லலாம்.

கடந்த ஆட்சியில் கஜானாவை காலி செய்து வைத்து விட்டு சென்று விட்டார்கள். கடந்த ஆட்சியில் விழுப்புரம் மாவட்டத்தில் 33 லட்சம் செலவில் ஒரு அணை கட்டப்பட்டது. அந்த அணை மூன்றே மாதத்தில் இடிந்து விழுந்துவிட்டது. கடந்த ஆட்சி எப்படிப்பட்ட ஆட்சி என்பதற்கு இது ஒரு உதாரணமே போதும். கொரோனா காலத்தில் அனைத்து மக்களுக்கும், குடும்பத்திற்கு நான்காயிரம் ரூபாய் என்று அறிவித்து அதை இரண்டு தவணைகளில் இந்த அரசு கொடுத்த முடித்துள்ளது. அதேபோல கொரோனாவால் இறந்தவர்கள் குடும்பத்திற்கு உதவித் தொகையாக 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் இந்த அரசு அறிவித்துள்ளது. ஆனால் மோடி அரசு எந்த உதவியையும் செய்யவில்லை.

தொடர் மழையால் டெல்டா பகுதி விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்துள்ளோம். அதையும் இந்த அரசு வழங்கும் என்று நம்புகிறோம். 1994 ல் தான் நல வாரியம் அமைக்கப்பட்டது. அதுவும் சென்னை மதுரை கோவை என மூன்று மாவட்டங்களுக்கு மட்டும் பொருந்தும் என்றும் ஆட்சியாளர்கள் அறிவித்தார்கள். பின்னர் கலைஞர் ஆட்சிக்கு வந்த பிறகுதான் அது மாநிலம் முழுமைக்கும் என மாற்றி அமைக்கப்பட்டது. கட்டடத் தொழிலாளர் நல வாரியத்தில் நான்காயிரம் கோடி ரூபாய் நிதி உள்ளது. அதையும் அபகரிக்க மோடி தலைமையிலான அரசு முயற்சித்துக் கொண்டு இருக்கிறது. இதை விட்டுவிடக்கூடாது தமிழகத்திலுள்ள லட்சோப லட்சம் தொழிலாளர்கள் உங்கள் பக்கம் நிற்பார்கள் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கே.ரவி:** மாநாட்டில் பேசிய தமிழ்நாடு ஏஐடியுசி கட்டட கட்டுமான தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கே. ரவி மாநாடு முன்வைத்துள்ள இருபத்தி மூன்று கோரிக்கைகளை முன்வைத்துப் பேசினார். அவர் பேசும்போது, அரசின் திட்டங்கள் அதன் பலன்கள் தொழிலாளர்களுக்கு கிடைக்காமல் இருக்க அதிகாரிகள் முயற்சி செய்கிறார்கள். மற்ற தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகிற அனைத்து சட்டங்களும் கட்டட கட்டுமான தொழிலாளர்களுக்கும் வேண்டுமென்று போராடினோம். வெற்றியும் பெற்றோம். 1953 இல் துவங்கிய இந்த போராட்டம் தொடர்கிறது. 1982ல் தான் நலவாரிய சட்டம் கொண்டுவரப்பட்டது.

எங்களுக்காக போடப்பட்ட சட்டங்களை முழுமையாக செயல்படுத்த வேண்டும் என்ற ஒற்றை கோரிக்கையுடன் நான் எனது பேச்சை நிறைவு செய்கிறேன் என்றும் கூறினார்.

**நா.பெரியசாமி:** மாநாட்டிற்கு தலைமை தாங்கிய தமிழ்நாடு ஏஐடியுசி கட்டட தொழிலாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் நா. பெரியசாமி பேசும்போது: சமூக பொருளாதார வாழ்வாதாரத்தை உயர்த்த ஒரு விடியல் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இங்கு தொழி லாளர்கள் வந்துள்ளார்கள். விலை ஏற்றம், கார்ப்பரேட் நுழைவு, நிதி மூலதன பெருக்கத்தின் எதிர்விளைவு எல்லாமும் சேர்ந்து தொழிலாளர்களை சம்மட்டி கொண்டு தாக்குகிறது. அந்த அடியை வாங்குகிற இடத்தில் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அந்த அடியிலிருந்து தடுக்கும் கரமாக மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் கரம் நீள வேண்டும்.

இந்த நல வாரியம் முழுமையாக தொழிலாளர்களுக்கு பயனளிக்க வேண்டுமென்றால், முற்றதிகாரம் கொண்ட நல வாரியம் அமைக்கப்பட வேண்டும். அதில் முத்தரப்பு பிரதிநிதிகளும் இடம்பெற வேண்டும். 50 லட்சம் கட்டுமான தொழிலாளர்கள் உள்ளார்கள். அதில், அரசு சார்ந்த கட்டுமான பணிகளில் கட்டுமான நல நிதி முறையாக வருவதில்லை. அதையும் வசூலித்து நலவாரியத்தில் சேர்க்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன் என்றும் நா. பெரியசாமி பேசினார்.

சங்கத்தின் மாநில துணைப் பொதுச் செயலாளர் என். செல்வராஜ் மாநில பொருளாளர் இரா. முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த மாநாட்டில் புதுவை மாநில கட்டிடத் தொழிலாளர் சங்க செயலாளர் ஜே.சந்திரசேகரன், கவிஞர். பரிணாமன், ஆர் பாலகிருஷ்ணன், ஜி.பி.எஸ். வடிவேலன், எம்.முனுசாமி, ஜி.பாலன், எஸ்.சேது, க.சுரேஷ், ஏ.எஸ். சங்கர் மேஸ்திரி, எஸ்.கவிதா, ஆர். தில்லைவனம், எஸ். சின்னசாமி. சி.நந்தினி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாநாட்டு வரவேற்பு குழு தலைவர் ஏ.எஸ்.கண்ணன் வரவேற்று பேசினார் அம்பத்தூர் ஆர்.துரைசாமி வரவேற்புக் குழு செயலாளர் நன்றி கூறி மாநாட்டை நிறைவு செய்தார்.

**மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:**


தமிழ்நாடு ஏஐடியூசி கட்டடத் தொழிலாளர் சங்கம் 07.12.2021 சென்னை ஒய்எம்சிஏ மைதானத்தில் ஆண், பெண் தொழிலாளர்கள் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட மாநில கோரிக்கை மாநாட்டில் தீர்மானங்களாக நிறைவேற்றி, தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் மூலம் சமர்பித்துக் கொள்ளும் கோரிக்கை விண்ணப்பம்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள 50 இலட்சம் கட்டட, கட்டுமானத் தொழிலாளர் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வுரிமை தொடர்பான கோரிக்கைகளை தங்கள் மேலான கவனத்துக்கு சமர்பித்துக் கொள்கிறோம்.

1982ஆம் ஆண்டு உடல்உழைப்புத் தொழிலாளர் சட்டப்படி 1994ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட "தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரியம்" சில குறிப்பிட்ட மாநகர எல்லைக்குள் மட்டுமே செயல்பட்டது. 1997ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சீரிய தலைமையிலான ஆட்சி தான் தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தி, அனைத்துக் கட்டட, கட்டுமானத் தொழிலாளர்களும் பயனடைந்து வருகின்றனர்.

இடையில் வந்த அஇஅதிமுக ஆட்சியின் தவறான அணுகுமுறையால் வாரிய செயல்பாடு சிதைக்கப்பட்டு, அதன் நோக்கம் இன்னும் முழுமையாக நிறைவேறவில்லை என்பதை தங்கள் பார்வைக்கு கொண்டு வருகிறோம்.

- கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் மாதம் ரூபாய் 6000/ வழங்கப்பட வேண்டும். பெண் தொழிலாளர்களுக்கு 50 வயதில் ஓய்வூதியம் வழங்க வேண்டும்.
- இயற்கை மரண குடும்பநிதி ரூபாய் ஐந்து லட்சம்; விபத்து மரண இழப்பீடு ரூபாய் பத்துலட்சம்; மரணமடைந்த ஒரு மாதத்திற்குள் வழங்க வேண்டும்.
- பேறுகாலப் பயன்கள் சட்டத்தில், பெண் தொழிலாளிக்கு ஆறு மாதம் காலம் ஓய்வும், அதற்கான சம்பளமாக (15,000 ஜ் 6 = 90,000) தொண்ணூராயிரம் நிதி வழங்க வேண்டும்.
- இ.எஸ்.ஐ. சட்டத்தை அமலாக்கிட வேண்டும். விபத்துக்குள்ளாகும் தொழிலாளிக்கு அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் "மறுப்பின்றி சிகிச்சை அளிக்கவும்," செலவை நல வாரியம் முழுமையாக ஏற்கவும் அரசு நடவடிக்கை எடுத்து அரசாணை கொண்டு வரவேண்டும்.
- கட்டுமானத் தொழிலில் ஈடுபடும் நிறுவனங்கள், ஒப்பந்தத்தாரர்கள், பொறியாளர்கள் உள்ளிட்டோர் தாங்கள் வேலையில் ஈடுபடுத்தும் தொழிலாளர்களை "நலவாரியத்தில் கட்டாயம் பதிவு செய்திட" சட்டம் கொண்டு வர வேண்டும்.
- வீடு கட்டும் தொழிலாளிக்கு வீடு வேண்டும் விலையில்லா வீட்டுமனை வேண்டும்.
- நாள்தோறும் வெகுதூரம் பயணித்து வேலை செய்ய வேண்டியிருப்பதால் நலவாரியத்தின் மூலம் இலவச பேருந்து பயண அட்டை வழங்கிட வேண்டும்.
- பெண் சித்தாள் தொழிலாளர்களுக்கு எலக்ட்ரீசியன், பிளம்பர், கம்பிகட்டுநர், மேசன், பெயிண்ட்டர், ஒட்டுநர், இயந்திரங்களை இயக்குதல் உள்ளிட்ட பயிற்சி அளித்து "திறன் மேம்படுத்திட" வேண்டும்.
- கடந்த அதிமுக ஆட்சியில் புதுப்பிக்காதவர்கள் எனக் கூறி "சட்டவிரோதமாக" வாரியப்பலன்கள் மற்றும் கொரோனா பேரிடர் நிதி உள்ளிட்டவைகள் மறுக்கப்பட்ட 20 லட்சம் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் அனைவரையும் முன்தேதியிட்டு புதுப்பித்து, மறுக்கப்பட்ட நிதிப் பலன்களை வழங்க வேண்டும்.
- பெண் தொழிலாளர்களுக்கு மாநிலம் முழுவதும் சட்டப்படியான குறைந்தபட்ச சம்பளம் உத்திரவாதப்படுத்தபடுதல், பாலின பாகுபாடு இன்றி சம வேலைக்கு சம ஊதியம், குழந்தைகள் காப்பக வசதி, பணியிடத்தில் பெண்களுக்கு பாதுகாப்பான தனி கழிப்பிட வசதி அளித்திட வேண்டும்.
- குழந்தைகளின் கல்விச் செலவை முழுமையாக வாரியம் ஏற்க வேண்டும், உதவித்தொகைகள் டெல்லி மாநில அரசு வழங்குவதற்கு குறைவில்லாமல் நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட வேண்டும்.
- திருமண உதவி நிதி ரூபாய் ஒரு லட்சம் "திருமண நாளில் அரசு அதிகாரி மூலம்" வழங்க வேண்டும்.
- கடந்த 28.02.2011ல் பிறப்பித்த அரசாணை எண்.36 கடந்த ஆட்சியில் 10 ஆண்டுகாலம் செயல்படுத்தப்படவில்லை. அந்த அரசாணையை செயல்படுத்தவும், பாதிக்கப்பட்டு உயிர் இழந்தவர்களின் இணையர்களுக்கு குடும்ப ஓய்வூதியமும், உயிரோடு இருப்பவர்களுக்கு ஓய்வூதியமும், 60 வயது நிறைவடைந்த நாள் முதல் நிலுவை ஓய்வூதியமும் வழங்கிட வேண்டும்.
- இறுதிச்சடங்கு நிதி சடங்கு நடைபெறும் அதேநாளில் வி.ஏ.ஓ. மூலம் வழங்கப்பட வேண்டும்.
- நலவாரியப் பதிவு, புதுப்பித்தல், கேட்புமனு அளித்தல் மிகமிக எளிமைப் படுத்தப்படவேண்டும் கிராம நிர்வாக அதிகாரிகள் "தாமதமின்றியும் பலன் எதிர்பார்க்காமலும்" சான்றிதழ் வழங்கிட அரசாணை பிறப்பிக்க வேண்டும்.
- உழவர் அட்டை மனுதாரர் கோரி பெறப்பட்டது அல்ல! அந்த அட்டைகளில் பெயர் இருந்தால் அதனை நீக்கவும், அந்த கட்டுமானத் தொழிலாளி தன்னை நலவாரியத்தில் பதிவு செய்து கொள்ளவும் அரசு கிராம நிருவாக அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும்.
- நலவாரியத்தில் பதிவு பெற்றுள்ள தொழிலாளர்கள் கட்டுமானத் தொழிலில் வேலையில்லாத போது தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் வேலை செய்திட மறுப்பு தெரிவிக்கக் கூடாது என்று அரசாணை பிறப்பிக்க வேண்டுகிறோம்.
- இந்தியாவுக்கே முன்னோடியாக தமிழ்நாடு அரசு 1982ல் கட்டுமானத் தொழிலாளர்கள் உள்ளிட்ட அமைப்புச்சாரா தொழிலாளர் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவந்து, தனித்தனி நலவாரியங்கள் அமைத்து நலத்திட்டங்கள் வகுத்துச் செயல்பட்டு வரும் நிலையில் ஒன்றிய அரசு அதனை முடக்கும் நோக்கத்துடனும் மாநில அரசின் உரிமைகளைப் பறித்திடும் வகையிலும் எடுத்துவரும் நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தடுத்து நிறுத்திட உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.
- தமிழ்நாடு அரசின் கருத்தைக் கேட்டு அறிந்துகொள்ளாமல், தமிழ்நாடு தொழிலாளர் சங்கங்களுடன் விவாதிக்காமல், ஒன்றிய அரசு அறிவித்துள்ள (உள்நோக்கம் கொண்ட) இஷ்ரம் மின்னணுத் திட்டத்தினை தமிழ்நாட்டு தொழிலாளர்துறை அதிகாரிகளும், சில மாவட்ட ஆட்சியர்களும், தமிழ்நாட்டில் புற்றீசல் போல் கிளம்பியுள்ள 3000க்கும் மேற்பட்ட சங்கங்களை அழைத்துப்பேசி 'தொழிலாளிக்கான சான்று எதுவுமில்லாமல்' பதிவு செய்து கொள்ளலாம் என்று வலியுறுத்துவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.
- இஷ்ரம் மின்னணு திட்டத்தில் தமிழ்நாடு அரசின் நிலைப்பாடு அறிவிக்கப்பட வேண்டும்; அதற்கு முன் தொழிற்சங்கங்களுடன் அரசு கலந்து பேச வேண்டும் என தமிழ்நாடு ஏஐடியூசி கட்டடத் தொழிலாளர் சங்க மாநிலத் தலைவர் நா.பெரியசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., பொதுச் செயலாளர் கே.ரவி ஆகியோர் அனுப்பியுள்ள கோரிக்கையில் கூறியுள்ளனர்.



கார்ட்டூன்

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.